வெளியீடு 11-4-2007

Issued 11-4-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஜனவரி 27, 2007—தொகுதி 20—எண் 2

Saturday the 27th January, 2007 —Volume 20—No. 2

ன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

tive Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

## 27–1–2007

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 3) | 145-208 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 208 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 208-209 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 209 |
| **4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும்—** | 209-299 |
| திரு. ஜி.கே. மணி | 209-238, 292-293,299 |
| *திரு. டி. சுதர்சனம் | 238-263,290 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 264-290 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | 300-306 |
| (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 300-302 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 300,301,302 |
| (ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 303-306 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 303,304, 305-306 |

பக்கங்கள்

**6. அறிவிப்பு—**

பேரவை நடவடிக்கைகள் குறித்த வழக்குகளில் நீதிமன்றங்களின் ஆணைகள், அறிவுறுத்தல்களைச் செயலாளர் மற்றும் அலுவலர்கள் ஏற்க வேண்டியதில்லை 306

**7. அரசினர் தீர்மானம்—**

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 307

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 307-309

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 13, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஜனவரி 27, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

### மூன்றாவது பட்டியல்@

**வாகன வசதி**

**வினா எண் 1062—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர்களுக்கு வாகன வசதியைச் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2007 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளருக்கு ஒரு ஜீப் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப் பிரிவுகளில் உள்ள உதவி ஆய்வாளர்களுக்கு இரு சக்கர மோட்டார் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2—

### மகளிர் காவல் நிலையம்

**வினா எண் 1370—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் மகளிர் காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழகத்தில் தற்போது 196 மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவை அனைத்தும், ஒரு காவல் உட்கோட்டத்திற்கு ஒரு மகளிர் காவல் நிலையம் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, கோவை மாவட்டத்தில் 7 உட்கோட்டங்களுக்கு, முறையே 7 மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. சமீப காலத்தில் 40 காவல் உட்கோட்டங்கள் தமிழகத்தில் புதியதாக உருவாக்கப்பட்டன. கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை உட்கோட்டம் இவற்றில் ஒன்றாகும். கோவை மாவட்டத்தில் உள்ள ஆழியாறு நகர்ப் பகுதி வால்பாறை உட்கோட்டத்தில் உள்ளது.

இவ்வாறு, புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள உட்கோட்டங்களுக்கு மகளிர் காவல் நிலையம் துவங்குதல் குறித்து அவசியம் கருதியும், அரசின் நிதி நிலைமைக்கு ஏற்பவும் முடிவெடுத்து, தேவைப்பட்டால் வால்பாறை உட்கோட்டத்திற்கு உட்பட்ட ஆழியாறு நகரில் மகளிர் காவல் நிலையம் தோற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

227443
சென்னை-600 008



2007 ஜனவரி 27]

3—

### முழுநேர காவல் நிலையம்

**வினா எண் 1371—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர், பகுதி நேரக் காவல் நிலையத்தை முழு நேரக் காவல் நிலையமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழகத்தில் தற்போது 116 புறக்காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இப்புறக்காவல் நிலையங்களை முன்னுரிமை, தேவை மற்றும் நிதிநிலை அடிப்படையில் படிப்படியாக முழுக் காவல் நிலையங்களாக நிலை உயர்த்துவது நடைமுறையில் உள்ளது. மேலும், வால்பாறை தொகுதி, ஆழியாறு பகுதி நேரக் காவல் நிலையத்தை முழு நேரக் காவல் நிலையமாக்கும் அளவிற்கு அவ்விடத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையோ/குற்ற நிகழ்வுகளோ எழுந்ததாகத் தகவல் இல்லை. எனவே, வால்பாறை தொகுதி, ஆழியாறு பகுதி நேரக் காவல் நிலையத்தை முழுநேரக் காவல் நிலையமாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

V 21/3/2007 P07.20.2

4—

### மகளிர் காவல் நிலையம்

**வினா எண் 1372—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, கோட்டூரில் மகளிர் காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழகத்தில் தற்போது 196 மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவை அனைத்தும், ஒரு காவல் உட்கோட்டத்திற்கு ஒரு மகளிர் காவல் நிலையம் என்ற முன்னுரிமை அடிப்படையில்

[2007 ஜனவரி 27

அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, கோவை மாவட்டத்தில் 7 காவல் உட்கோட்டங்களுக்கு, முறையே 7 மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. சமீப காலத்தில் ஏற்படுத்திய 10 காவல் உட்கோட்டங்களில், கோவை மாவட்டத்தில் வால்பாறை காவல் உட்கோட்டமும் ஒன்றாகும். கோட்டூர், புதிதாக ஏற்படுத்தப்பட்ட வால்பாறை காவல் உட்கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியாகும்.

இவ்வாறு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள உட்கோட்டங்களுக்கு, தேவையின் அடிப்படையிலும் அரசின் நிதி நிலைமைக்கு ஏற்பவும், மகளிர் காவல் நிலையம் தோற்றுவிக்க அரசு கொள்கை முடிவு எடுக்கும்போது புதிதாக ஏற்படுத்தப்பட்ட வால்பாறை உட்கோட்டம், கோட்டூரில் மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

5—

## காவல் நிலையம்

**வினா எண் 1375—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, சேத்துமடையில் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேத்துமடை பகுதி, தற்போது பொள்ளாச்சி உட்கோட்டத்தில், ஆனைமலை காவல் நிலைய எல்லையில் அமையப்பெற்றுள்ளது. ஆனைமலை காவல் நிலையம் வகை 5-ஐச் சார்ந்தது. அதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டு சட்டம் ஒழுங்கு பராமரிப்பு/குற்ற நிகழ்வுகள் நடக்காமல் தடுத்தல் ஆகியவை திறம்படப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2. வால்பாறை தொகுதி, சேத்துமடை பகுதியில் ஒரு தனிக் காவல் நிலையம் அமைக்க வேண்டிய அளவிற்கு குற்ற நிகழ்வுகளோ, சட்டம் ஒழுங்கு சீர்கேடோ நடைபெற்றுள்ளதாகத் தெரியவரவில்லை.



2007 ஜனவரி 27]

எனவே, சேத்துமடை என்ற இடத்தில் புதிய காவல் நிலையம் துவங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

6—

## கல்விச் செலவு

**வினா எண் 1746—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் பணிபுரியும் காவல் துறையைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்விச் செலவை அரசே ஏற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியில் பணிபுரியும் காவல் துறையைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்விச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. வால்பாறை மலைப் பகுதி மட்டுமின்றி, வேறு எந்தப் பகுதியிலும் காவலர்களின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்விச் செலவை அரசே ஏற்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

7—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 2014—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2007 ஜனவரி 27

8—

## காவல் துறையினருக்குப் பயிற்சி

**வினா எண் 2485—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமாஞ்சேரியில் உள்ள காவல் துறை அகாடமியில் காவல் துறையினருக்குப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு எவ்வளவு பேர் பயிற்சி பெற்றுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊனமாஞ்சேரியில் உள்ள காவல் துறை அகாடமியின் கட்டடப்பணி, 23–11–2005 அன்று தொடங்கப்பட்டு கட்டுமானப் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக காவல் துறையினருக்கு காவல் துறை அகாடமியில் பயிற்சி அளிப்பது துவங்கப்படவில்லை.

9—

## ஆம்புலன்ஸ் வாகன வசதி

**வினா எண் 2545—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தீயணைப்புத் துறைக்கு ஆம்புலன்ஸ் வாகன வசதி செய்து தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்போதிருக்கும் வாகனங்களே போதுமானதாக உள்ளன.

10—

## காவலர் எண்ணிக்கை

**வினா எண் 2908—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதல்மைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 27]

அனைத்து காவல் நிலையங்களிலும் உள்ள காவலர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

11—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 2910—திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

12—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 2911—திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

[2007 ஜனவரி 27

13—

## வாகன வசதி

**வினா எண் 3315—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் நிலையங்களில், காவல் உதவி ஆய்வாளர்களுக்கு வாகன வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவல் நிலையங்களில் பணிபுரியும் அனைத்து காவல் உதவி ஆய்வாளர்களுக்கும் தேவைச் சூழல் ஏற்படும் சமயங்களில் வாகன வசதி செய்துதர ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒவ்வொரு காவல் உதவி ஆய்வாளருக்கும் என தனித் தனியாக வாகன வசதி செய்து தரும் திட்டச் சூழல் எழவில்லை.

14—

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 10899—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டை மற்றும் அனந்தபுரத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், அவலூர்பேட்டையைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் 1 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களும், அனந்தபுரத்தில் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களும் செயல்பட்டு வருவதால், இவ்விடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.



2007 ஜனவரி 27]

15—

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 10904—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, சின்னமனூர் நகராட்சியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தேனி தொகுதி, சின்னமனூர் நகராட்சிப் பகுதியின் 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உத்தமபாளையம் மற்றும் தேனி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

16—

## குறைந்த மின்னழுத்தம்

**வினா எண் 2602—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம், வல்லம் ஊராட்சியில் கொல்லமேடு பகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், உய்யாலிகுப்பம் பகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், இருங்குன்றம்பள்ளி ஆகிய கிராமங்களில் குறைந்த மின்னழுத்தத்தைச் சீராக அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம், வல்லம் ஊராட்சி மற்றும் திருக்கழுக்குன்றம், உய்யாலிகுப்பம் பகுதி ஆகிய பகுதிகளுக்கு வெம்பாக்கத்தில் புதிய துணை மின் நிலையம் விரைவில் அமைக்க பரிசீலனையில் உள்ளது. மின் நிலையம் அமைத்தபின் குறைந்த மின்னழுத்தம் சரியாகும். காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், இருங்குன்றம்பள்ளியில் குறைந்த மின்னழுத்தம சரி

[2007 ஜனவரி 27

செய்யப்பட்டுள்ளது. வல்லம் ஊராட்சி, கொல்லமேடு பகுதியில் குறைந்த மின்னழுத்தம் இல்லை. உய்யாலிகுப்பம் பகுதியில் புதிய மின்மாற்றி அமைக்க மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டபின் பணி விரைவில் நிறைவுறும்.

**17—**

### மின் இணைப்பு வசதி

**வினா எண் 3940—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, கரும்புக்கடை கன்னிமார் கோவில் தெருவில் மின் இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, கரும்புக்கடை கன்னிமார் கோவில் தெரு, புறம்போக்கு நிலத்தில் உள்ளது. இத்தெருவில் சுமார் 15 வீடுகள் உள்ளன. இத்தெருவிற்கு மின் விளக்கு வேண்டி கோயம்புத்தூர் மாநகராட்சியிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும், இப்பகுதியில் வீட்டு மின் இணைப்பு வேண்டியும், எந்த விண்ணப்பமும் நிலுவையில் இல்லை. தெரு மின் விளக்குகள் வேண்டி, மாநகராட்சியிடமிருந்தோ அல்லது வீட்டு மின் இணைப்பு வேண்டியோ விண்ணப்பங்கள் பெறப்படின், வாரிய விதிமுறைகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும்.

**18—**

### சூரியசக்தி விளக்குகள்

**வினா எண் 8637—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு சூரிய ஒளி விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத தொலை தூரக் கிராமங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு சூரிய சக்திமூலம் மின் வசதி செய்து தரும் திட்டத்தின், முதல் கட்டமாக 150 தொலை தூரக் கிராமங்களுக்கு தமிழ்நாடு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு மைய அரசு 54 சதவீதமும் மற்றும் மாநில அரசுகள் 46 சதவீதமும் நிதி ஒதுக்கீடு அளித்துள்ளன.

(ஆ) இந்தத் திட்டத்தின்கீழ் உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள எருமைப்பாறை, கோழிகமுத்தி, கூமாட்டி, நாகர் ஊத்து, வரகளியார், கோடந்தூர், தளஞ்சி, மாவடாப்பு, புளியம்பட்டி, ஈசல்திட்டு, கொட்டையாறு, குருமலை, குழிப்பட்டி மற்றும் பூச்சி கொட்டாம்பாறை ஆகிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத தொலை தூரக் கிராமங்களில் உள்ள 813 தொலை தூரக் குடியிருப்புகளுக்குச் சூரிய சக்தி விளக்குகள்மூலம் மின் வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

**19—**

### பூங்கா பராமரிப்பு

**வினா எண் 2036—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, இராஜேந்திரா சாலை அருகிலுள்ள பூங்காவைப் பராமரிப்பு செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, இராஜேந்திரா சாலை அருகிலுள்ள பூங்காவைப் பராமரிப்பு செய்ய, உடுமலைப்பேட்டை நகராட்சி 28–6–2005 நாளிட்ட நகர்மன்றத் தீர்மான எண் 315-ல்

ரூ.1.75 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

20—

## சோடியம் ஆவி விளக்குகள்

**வினா எண் 2248—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் ஜி.எஸ்.டி. சாலை மற்றும் காஞ்சிபுரம் ரோடு ஆகிய பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு நகரில் ஜி.எஸ்.டி. சாலை மற்றும் காஞ்சிபுரம் ரோடு பகுதிகளில் தேவையான குழல் விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரிய வரைமுறைக்குட்பட்டு விளக்குகள அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய விளக்குகள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் உள்ளன. மேலும், அப்பகுதியில் உள்ள 10 குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்ற எதிர்வரும் 2007–2008 ஆம் நிதியாண்டில், மன்றத்தின் அனுமதிக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21—

## தெரு விளக்குகள்

**வினா எண் 2644—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டில் தண்டுக்கரை முதல் வல்லம் கொல்லமேடு வரை கூடுதலாகத் தெரு மின் விளக்குகள் அமைக்கப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் தண்டுக்கரை முதல் வல்லம் கொல்லமேடு வரை புதியதாகத் தெரு விளக்குகள் ஊராட்சி நிதியில் அமைக்கப்பட்டுள்ளன.

2006–2007 ஆம் ஆண்டில் கூடுதலாகப் புதிய 5 தெரு விளக்குகள் அமைக்கும் பணி ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இப்பணி 31–12–2006–க்குள் செய்து முடிக்கப்படும்.

22—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 2645—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் புதிதாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டங்களின் பெயர்களை அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த விட்டலாபுரம் மற்றும் 24 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கிளாப்பாக்கம் மற்றும் 15 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான கருத்துருக்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன.

[2007 ஜனவரி 27

**23—**

### தெரு விளக்குகள்

**வினா எண் 3011—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி, ஜல்லிப்பட்டி, அங்கலக்குறிச்சி, கரியாஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு சோடியம் தெரு விளக்குகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளில் சோடியம் விளக்குகளால் மின் கட்டணம் அதிகமாக வருகின்றது. இதனை ஊராட்சிகளால் செலுத்த இயலுவதில்லை. எனவே, ஏற்கெனவே உள்ள சோடியம் விளக்குகளை நீக்கிவிட்டு, குழல் விளக்குகள் பொருத்தப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றன.

**24—**

### மின் விசை அமைத்தல்

**வினா எண் 3245—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், அக்ரஹார சாமக்குளம் கிராமத்தில் வண்ணாமடை அருகிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் புதியதாக மின் விசை அமைத்துக் குடிநீர் வழங்கும் பணியை அரசு விரைந்து நிறைவேற்றுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அக்ரஹார சாமக்குளம் கிராமத்தில் வண்ணாமடை அருகிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் புதியதாக மின் விசை அமைத்துக் குடிநீர் வழங்கும் பணிக்குக் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒதுக்கீடு கேட்டு கிராம ஊராட்சித் தலைவர்மூலம் சட்டமன்ற உறுப்பினருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கிராம ஊராட்சிக்கு ஒதுக்கீடு கிடைத்தவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**25—**

### மின் விசை அமைத்தல்

**வினா எண் 3246—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், அக்ரஹார சாமக்குளம் கிராமத்தில் வண்ணாமடை அருகிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் புதியதாக மின் விசை அமைத்துக் குடிநீர் வழங்கும் பணியை அரசு விரைந்து நிறைவேற்றுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அக்ரஹார சாமக்குளம், குளத்தேரி ஆழ்குழாய்க் கிணற்றில் புதியதாக மின் விசை அமைத்து குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கேட்டு கிராம ஊராட்சித் தலைவர்மூலம் சட்டமன்ற உறுப்பினருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

[2007 ஜனவரி 27

**26—**

## குழாய் விஸ்தரிப்பு

**வினா எண் 3527—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துரை ஊராட்சியில் 2 கி.மீ. தூரத்திற்கு குழாய் விஸ்தரிப்பு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோமந்துரை ஊராட்சியில் போதுமான குடிநீர் வசதி உள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் குழாய் விஸ்தரிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**27—**

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 3533—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, பழஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிச் சாலையைச் செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 2006-2007 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். பகுதி-I திட்டத்தின்கீழ் கீழப்பழஞ்சூர் புது கிராமச் சாலையை மண் சாலையிலிருந்து மெட்டல்



2007 ஜனவரி 27]

சாலையாக 590 மீ. நீளத்திற்கு மாற்றிட நிர்வாக அனுமதியும் ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம்) நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டு, மண் சாலையை ஓரடுக்குக் கருங்கல் கப்பிச் சாலையாக மாற்றம் செய்யும் பணி விரைவில் முடிவுறும். இந்தச் சாலையில் மீதமுள்ள பகுதி, வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் கருங்கல் கப்பிச் சாலையாக மாற்றம் செய்யப்படும்.

**28—**

## பழைய கட்டடம்

**வினா எண் 3536—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, பாளமுத்தி கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளியின் பழைய கட்டடத்தை இடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, பாளமுத்தி தொடக்கப் பள்ளியில் தெற்கு பார்த்த ஓட்டுக் கட்டடம், கிழக்கு பார்த்த ஆர்.சி.சி. கட்டடம் மற்றும் வடக்கு பார்த்த ஏ.சி. ஷீட் கட்டடம் ஆகியவை உள்ளன. இவை யாவுமே நல்ல நிலையில் உள்ளன. இவற்றில் பழுதுகள் ஏதுமில்லை.

பள்ளி ஓட்டுக் கட்டடத்திற்கு அருகில் உள்ள பெண் ஆசிரியைக் குடியிருப்பு மட்டுமே மிகவும் பழுதாக, உபயோகமற்ற நிலையில் உள்ளது. இது பள்ளிக்கு அருகில் உள்ள கட்டடமாகும். ஆனால், இது பள்ளிக் கட்டடம் இல்லை.

மிகவும் பழுதாகியுள்ள இக்கட்டடத்தினை இடித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2007 ஜனவரி 27

29—

## நிழற்குடை

**வினா எண் 4759—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, போடிப்பட்டி ஊராட்சி, கமல் ஸ்பின்னர்ஸ் உள்ள எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, போடிப்பட்டி ஊராட்சி, கமல் ஸ்பின்னர்ஸ் உள்ள எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் நிழற்குடை அமைப்பதைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் நடப்பு ஆண்டில் சேர்த்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

## சாலை அமைத்தல்

**வினா எண் 5397—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, பாக்கம் கிராமத்தில் ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்து பாக்கத்திலிருந்து செம்மேடு வரை சாலையைச் செப்பனிட்டுச் சரி செய்துதரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாக்கம் காலனியில 'பழைய காலனி மற்றும் புதிய



2007 ஜனவரி 27]

காலனி என 2 குடியிருப்புகள் உள்ளன. பழைய காலனியில் மொத்தம் 900 மீ. நீளமுள்ள தெருக்களில் 800 மீ. வரை சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ராஜன் தெருவில் 100 மீ. சிமெண்ட் சாலை அமைக்க வேண்டியுள்ளது. புதிய காலனியில் மொத்தம் 950 மீ. நீளமுள்ளதில் 200 மீ. சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 750 மீ. சிமெண்ட் சாலை அமைக்க வேண்டியுள்ளது. இப்பணிகளை 2006–2007 ஆம் நிதியாண்டில் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பாக்கம்–செம்மேடு சாலை**

பாக்கம்–செம்மேடு சாலை (4.60 கி.மீ.) நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பின்கீழ் உள்ளது. அதில் 3.20 கி.மீ. வரை தார்ச் சாலை அமைக்கும் பணி முடிவடைந்து, மீதமுள்ள 1.40 கி.மீ. சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி நெடுஞ்சாலைத் துறைமூலம் செய்யப்பட்டு வருகிறது.

31—

## பள்ளிக் கட்டடம்

**வினா எண் 5414—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, நாகரசம்பட்டி கிராம ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், நாகரசம்பட்டி கிராமத்தில் பொது நிதியிலிருந்து 3.00 இலட்சம் மதிப்பீட்டில் நாகரசம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஜன்னல் மட்டம் வரை பணி முடிக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி இல்லாததால் பணி நிறுத்தப்பட்டிருந்தது. இப்பணியை

[2007 ஜனவரி 27

விரைவில் முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காவேரிப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

32—

## புதிய குடியிருப்புக் கட்டடம்

**வினா எண் 5744—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, பெண் ஆசிரியைகள் குடியிருப்புக் கட்டடம் பழுதடைந்துள்ளதால் புதிய குடியிருப்புக் கட்டடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, பெண் ஆசிரியை குடியிருப்புக் கட்டடம் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்ய ரூ.72,000/– மதிப்பீடு ஆகும். ரூ.72,000/– மதிப்பீட்டில் பழுது பார்க்க புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒன்றியக் குழுவின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

## குடிநீர் வசதி

**வினா எண் 6602—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை 1010 காலனியில் நெசவாளர்களுக்குக் குடிநீர் வசதி, கழிவுநீர்க் கால்வாய் வசதி மற்றும் சாலை வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், சென்னிமலை 1010 காலனியில் நெசவாளர்களுக்குக் குடிநீர் வசதி செய்ய, மாநில நிதி ஆணையம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிகளிலிருந்து வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறுசேமிப்பு ஊக்க நிதி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி நிதியில் ரூ.13 இலட்சத்தில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. வடிகால் வசதியும், விடுபட்ட சாலை வசதிகளும் அமைக்க வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 6610—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஓலப்பாளையம், வி.வெள்ளோடு கிராமத்தில் கழிவுநீர்க் கால்வாயை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஓலப்பாளையம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய் ஆழப்படுத்தும் பணி வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

35—

## மின் விளக்கு வசதி

**வினா எண் 6700—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பெருந்துறை ஒன்றியம், வடமுகம் வெள்ளோடு கிராமம், கொளத்துப்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் சாலை, மின் விளக்கு மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், வடமுகம் வெள்ளோடு கிராமம், கொளத்துப்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மின் விளக்கு, சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

36—

## பேருந்து நிலையம்

**வினா எண் 7080—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, இராயக்கோட்டையில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, இராயக்கோட்டையில் பேருந்து நிலையம் அமைப்பது



தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை விண்ணப்பம் எண்கள் 3099/2006 மற்றும் 3216/2006, நாள் 3-2-2006-ல் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வழக்கினைத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழக்கு முடிவு பெற்றவுடன் இராயக்கோட்டையில் நிரந்தரப் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 7657—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மருள்பட்டி கிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருள்பட்டி கிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய் வசதி ஊராட்சியின்மூலம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

38—

## புளிய மரங்கள்

**வினா எண் 3067—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள தரிசு நிலங்களில் புளிய மரங்கள் வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு, நிலமில்லாத ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 2 ஏக்கர் அரசு தரிசு நிலத்தினை சீர்திருத்தம் செய்து செம்மைப்படுத்தி இலவசமாக வழங்குவதாக ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்தது. அதன்படி அரசு ஆணை (எம்.எஸ்) எண் 555, வருவாய் (நீ.மே.3) துறை, நாள் 26–8–2006–ல் இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படும் நிலங்கள் 3 இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

*இனம் 1—எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசுப் புறம்போக்கு நிலங்கள்*

*இனம் 2–சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசுப் புறம்போக்கு நிலங்கள்*

*இனம் 3–சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு பட்டா நிலங்கள்*

*மேற்காணும் இனம் 1, இனம் 2, இனம் 3–ல் உள்ள நிலங்களை மேம்படுத்த அரசு நிதியுதவி செய்துள்ளது. இதில் இனம் 1 மற்றும் இனம் 2–ல், 10 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பு உள்ள தொகுப்பு நிலங்களில் மட்டுமே நீர் ஆதார வசதி ஏற்படுத்த வாய்ப்பு இருந்தால் தோட்டக்கலைத் துறை மரக் கன்றுகள் நடும் திட்டம் உள்ளது. இத்தொகுப்பு நிலங்களிலும் துறைமூலம் மானியத்தில் வழங்கப்படும் மரக் கன்றுகளை நடும் வாய்ப்பு உள்ளது. புளியங்கன்றுகள் நடுவதைப் பொறுத்தவரையில், தொகுப்பு நிலத்தில் நிலத்தின் தன்மை, நீர் ஆதாரம் ஆகியவற்றை ஆய்வு செய்து, அப்பயனாளிகள் விரும்பினால், புளியங்கன்றுகள் மானியத்தில் வழங்கப்படும் திட்டம், தோட்டக்கலைத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டால் புளியங்கன்றுகள் வழங்க வாய்ப்பு உள்ளது.*

**39—**

## இயந்திரங்கள் வழங்குதல்

**வினா எண் 7035—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 27]

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் விவசாயிகள் பயன்படுத்தும் சோளம் தட்டை வெட்டும் இயந்திரங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் விவசாயிகள் பயன்படுத்தும் சோளம் தட்டை வெட்டும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு முழு மானியத்தில் வழங்கத் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**40—**

## குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 7036—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தொகுதியில் உள்ள வேளாண்மைத் துறை அதிகாரிகளின் குடியிருப்புகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறையின் சார்பில் அனைத்து மாவட்டங்களில் உள்ள வேளாண்மை அலுவலர்/உதவி வேளாண்மை அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்புகள் பழுதடைந்து இருந்தால், அதனைச் சீரமைத்துக் குடியிருக்க வசதியாக அமைத்துத் தருதல் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும்,

[2007 ஜனவரி 27

பழுதடைந்த கட்டடங்களுக்கு உரிய மதிப்பீட்டைப் பொதுப் பணித் துறையிலிருந்து பெற்று அனுப்ப வேண்டுமென அனைத்து வேளாண்மை இணை இயக்குநர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. கோவை, வேளாண்மை இணை இயக்குநரிடமிருந்து மதிப்பீடுகள் வரப்பெற்றதும், அதன்மீது விரைவில் பணிகள் பொதுப் பணித் துறையின் மூலமாக செய்து முடிக்கப்படும்.

**41—**

## விவசாயத் தொழில்நுட்பம்

**வினா எண் 7037—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமத்தில் சுய உதவிக் குழுவினருக்கு உதவி வேளாண்மை அலுவலர்மூலம் விவசாயத் தொழில்நுட்பம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உதவி வேளாண்மை அலுவலர்கள், தங்களின் பயணத் திட்டத்தின்படி கிராமங்களுக்குச் செல்லும்போது, இதர விவசாயிகளைச் சந்திப்பது போன்றே, பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களையும் சந்தித்துத் தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறுகிறார்கள்.

சுய உதவிக் குழுக்கள் நடத்தும் குழுக் கூட்டங்களில், உதவி வேளாண்மை அலுவலர்களும், ஏனைய உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு, தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறுவதோடு, குழு நல்ல முறையில் நடந்திடவும் உதவி செய்கிறார்கள்.

மேலும், சுய உதவிக் குழுக்களை மேம்படுத்தும் நோக்கோடு, நடப்பாண்டில் (2006-2007) மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படும் டான்வேப் திட்டத்தில் 7,366 குழுக்களுக்கு, தொழில் முனைவோருக்கான ஒரு நாள் புத்தூட்டப் பயிற்சி நடத்தப்பட உள்ளது. இதே 7,366 குழுக்களுக்கு, பெற்ற பயிற்சியின்



2007 ஜனவரி 27]

பலனைக் காணும் விதமாக சுய தொழில் தொடங்கும் வகையில் ரூ.3,500/- உதவித் தொகை வழங்கப்பட உள்ளது.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத்தை வளப்படுத்தும் வகையில், அவர்களுக்கு ரூ.66.750 இலட்சம் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள், 25% மானியத்தில் வழங்கப்பட உள்ளன. சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டினைத் தவிர்க்கும் முகமாக, 9 மாவட்டங்களில் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக அமைக்கப்பட உள்ளன. நடப்பாண்டில் ரூ.465 இலட்சத்தில் டான்வேப் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**42—**

## ஆழ்குழாய்க் கிணறுகள்

**வினா எண் 9455—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் பழுதடைந்துள்ள விவசாய ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண் பொறியியல் துறைமூலம், புதிதாக ஆழ்குழாய்க் கிணறுகள் மட்டுமே அமைத்துத் தரப்படுகின்றன. ஆழ்குழாய்க் கிணறுகளின் பராமரிப்புப் பணிகளை அரசு மேற்கொள்வதில்லை.

**43—**

## அரசு பொறியியல் கல்லூரி

**வினா எண் 11617—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளியில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* தளி தொகுதி, தளியில் அரசு பொறியியற் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**44—**

## ஓய்வு எடுக்கும் அறை

**வினா எண் 1729—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையத்தில் ஓட்டுநர், நடத்துநர் ஓய்வு எடுக்க, உடை மாற்ற இடம் ஒதுக்கித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையத்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வு எடுக்க/உடை மாற்றம் செய்ய, போதிய அறை வசதி சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம் மூலமாகப் பெறப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது.

**45—**

## புதிய வழித்தடம்

**வினா எண் 4088—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவையிலிருந்து வால்பாறைக்கு காலையில் பொள்ளாச்சி வழியாக பேருந்து செல்ல புதிய வழித்தடம் வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



2007 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோவையிலிருந்து பொள்ளாச்சி வழியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் மூலமாக வால்பாறைக்கு அதிகாலையில் 2.00 மணி மற்றும் காலை 7.58 மணிக்கும் நேரடிப் பேருந்துகள் இயங்கி வருகின்றன. இது தவிர, கோவையிலிருந்து பொள்ளாச்சிக்கு ஒவ்வொரு 2 முதல் 5 நிமிட இடைவெளியில், தனியார் மற்றும் அரசுப் பேருந்துகள் போதுமான அளவு இயங்கி வருகின்றன. மேலும், பொள்ளாச்சியிலிருந்து வால்பாறைக்கு தினசரி 88 நடைகள் (single trips) சராசரியாக 20 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகிறது. தற்போதைய பயணிகள் அடர்விற்கு இதுவே போதுமானதாகும்.

**46—**

## போக்குவரத்துப் பணிமனை

**வினா எண் 5905—திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சோளிங்கர் தொகுதியில், அரசுப் போக்குவரத்துப் பணிமனை அமைத்திட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள முக்கியமான சோளிங்கர் பேரூராட்சியைச் சுற்றி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்.-ன் வேலூர் மண்டலத்தைச் சார்ந்த ஆற்காடு பணிமனை 29 கி.மீ. தொலைவிலும், காஞ்சிபுரம் மண்டலத்தைச் சார்ந்த திருத்தணி பணிமனை 28 கி.மீ. தொலைவிலும் உள்ளது. சோளிங்கர் பேரூராட்சியை மையமாகக் கொண்டு இயக்கப்பட்டு வரும் இக்கழகத்தின் பேருந்துகள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 பணிமனைகளிலிருந்து இயக்கப்படுகின்றன.

[2007 ஜனவரி 27

அரசாணையின்படி இரண்டு பணிமனைகளுக்கு இடையே உள்ள தூரம் 10 கி.மீ.-க்கும் குறைவாக இருக்கக் கூடாது. எனவே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

**47—**

### கணினிப் பயிற்சி

**வினா எண் 2962—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்தில் எத்தனை பேருக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டது?

(ஆ) இதனால் அரசுக்கு ஏற்பட்ட செலவினம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோவை பதிவு மாவட்டத்தில், மொத்தம் 39 பதிவுத் துறை பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) இதனால் அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூ.18,973/- ஆகும்.

**48—**

### நிழற்குடை

**வினா எண் 5864—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் நகரில் சார்பதிவாளர் அலுவலகத்தில் நிழற்குடை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் சார்பதிவாளர் அலுவலகம் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொதுமக்கள் அமர்வதற்கு அலுவலக வராண்டாவில் நீளமான பெஞ்சுகள் போடப்பட்டுள்ளன. எனினும், இந்த அலுவலகத்திற்கு நிழற்குடை அமைத்துத் தரும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

### புதிய கட்டடம்

**வினா எண் 11955—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஆரணி தொகுதியிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு, இந்த நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

### சொந்தக் கட்டடம்

**வினா எண் 11977—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

[2007 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**51—**

## இயற்கை இடர்ப்பாடுகள்

**வினா எண் 2873—திரு. கி. ஆறுமுகம்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இயற்கை இடர்ப்பாடுகளுக்கு 2004-2005 மற்றும் 2005-2006-ல் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு, எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*இயற்கை இடர்ப்பாடுகளுக்காக 2004-2005 மற்றும் 2005-2006 ஆகிய ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகைகளின் விவரம்:*

*(ரூபாய் இலட்சத்தில்)*

| வ.எண் | வருடம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | 2004-2005 | 126643.48 | 100679.70 |
| 2. | 2005-2006 | 176496.63 | 23122.60 |



2007 ஜனவரி 27]

**52—**

## மாற்று இடம்

**வினா எண் 5899—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனைக்குச் சொந்தமான இடத்தில் பல ஆண்டுகளாக வசித்து வருபவர்களுக்கு மாற்று இடம் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

மாற்று இடம் அமைத்துத்தர போதிய காலியிடம் இல்லை.

**53—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 9248—திரு. வை. காவேரி:** *மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் பாட்டப்பன் நகரில் வசிக்கும் பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓடைப் புறம்போக்கு மற்றும் நீர்நிலைப் புறம்போக்குகளில் வீட்டுமனைப் பட்டா வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் ஓடைப் புறம்போக்கு புல எண்கள் 194 மற்றும் 195-ல் உள்ள பாட்டப்பன் நகர் பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

[2007 ஜனவரி 27

54—

## இலவச மனைப் பட்டா

**வினா எண் 9860—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பான் ஸ்டாண்டர்டு கம்பெனி குத்தகைக்கு எடுத்த தரிசு நிலத்திற்கான குத்தகைக் காலம் முடிந்துவிட்டதால், அந்நிலத்தை ஏழைகளுக்கு இலவச மனைப் பட்டாவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி எல்லைக்குள் வரும் நிலங்களுக்கு நில ஒப்படை வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, சேலம் மாநகராட்சிக்குட்பட்ட ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் சேலம் பான் ஸ்டாண்டர்டு கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களைக் குத்தகைக் காலம் முடிந்துள்ள நிலையில், வீட்டு மனைகளாகப் பிரித்துப் பொதுமக்களுக்கு ஒப்படை வழங்க இயலாது. அந்நிலத்தில் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் பொருட்டு, எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய அரசு பரிசீலித்து வருகிறது.

55—

## இழப்பீடு வழங்குதல்

**வினா எண் 10224—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆப்பக்கூடல் கிராமம், சுக்காநாயக்கனூர் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆப்பக்கூடல் கிராமம், சுக்காநாயக்கனூர் பகுதியில் 14–5–2006–ல் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு முழு நிவாரணத் தொகையாக ரூ.2,000/–, 5 கிலோ அரிசி, வேட்டி ஒன்று, சேலை ஒன்று ஆகியவை பவானி வருவாய் வட்டாட்சியரால் 15–5–2006 மற்றும் 16–5–2006 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேறு வகையான இழப்பீடு வழங்க அரசு விதிகளில் இடமில்லை.

56—

## நிவாரணம்

**வினா எண் 10235—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை கிராமம், நல்லிபாளையம் மேற்கு வீதியில் இயற்கைச் சீற்றத்தினால் சேதமடைந்த வீடுகளுக்கு நிவாரணம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 14–05–2006 மற்றும் 15–05–2006 ஆகிய தேதிகளில், வீசிய பலத்த காற்றினால் 18 நபர்களின் கூரை வீடுகளின் மேற்கூரை மட்டும் சேதமடைந்துள்ளது. சுவர்கள் நல்ல நிலையில் உள்ளன. வேறு உயிர்ச் சேதமோ, பொருட்சேதமோ ஏதும் இல்லை. மேலும், மேற்கூரை மட்டும் பாதிக்கப்பட்டதற்கு நிவாரணத் தொகை வழங்க தற்போதுள்ள நடைமுறைகள் மற்றும் பேரிடர் நிவாரண நிதி வழிமுறைகளின்படி வழிவகை இல்லாததால், நிவாரணம் ஏதும் வழங்கப்படவில்லை. எனினும், இயற்கைச் சீற்றத்தினால்

பாதிப்படைந்த வீடுகளுக்குத் தகுதியின் அடிப்படையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும்படி ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**57—**

## வட்டாட்சியர் அலுவலகம்

**வினா எண் 10796—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கீழ்ப் பகுதியில் உள்ள ஊராட்சிகள், சிறப்பு ஊராட்சிகளைக் கொண்டு தனி வட்டாட்சியர் அலுவலகம் ஒன்று தனியாக ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**58—**

## மழைநீர் வடிகால்

**வினா எண் 11932—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி, பெரியார் நகர், கம்பன் நகர் மற்றும் பூங்கா நகர்ப் பகுதிகளில் மழைக் காலங்களில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.32.16 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட அரசாணை (டி) எண் 43, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 2-2-2006-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை நகராட்சி நிர்வாகமே எடுத்துச் செயல்படுத்திட அனுமதி வழங்கக் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு 22-9-2006-ல் கடிதம் அனுப்பியுள்ளார். அரசு அனுமதி கிடைத்தவுடன் திட்டம் செயல்படுத்தப்படும். அவ்வாறு பணி மேற்கொள்ளப்படும்போது, பெரியார் நகர், கம்பன் நகர் மற்றும் பூங்கா நகர்ப் பகுதிகளில் தண்ணீர் புகுவது முற்றிலும் தடுக்கப்படும். மழைநீர் வடிகால் வரும் நிதியாண்டில் பல்வேறு திட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு, செய்து முடிக்கப்படும்.

**59—**

## காவலர்கள் நியமனம்

**வினா எண் 14253—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறைச்சாலைக்கு போதிய ஆண், பெண் காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறையில் அங்கீகரிக்கப்பட்ட 261 இரண்டாம் நிலை ஆண் காவலர் பணியிடங்களில், 237 ஆண் இரண்டாம் நிலைக் காவலர்கள் பணிபுரிகிறார்கள். இதேபோல, இரண்டாம் நிலைக் காவலர்களில் 9 அங்கீகரிக்கப்பட்ட பெண் இரண்டாம் நிலைக் காவலர்களில்

[2007 ஜனவரி 27

9 பணியிடங்களிலும் பெண் காவலர்கள் பணிபுரிகிறார்கள். காலியாக உள்ள மீதமுள்ள 21 ஆண் காவலர் பணியிடங்கள் தற்போது வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில பயிற்சியில் உள்ள காவலர்கள்மூலம் தேவையின் அடிப்படையில் விரைவில் நிரப்பப்படும். ஆகவே, தற்போது கோவை மத்திய சிறையில் போதிய அளவில் ஆண், பெண் இரண்டாம் நிலைக் காவலர்கள் பணிபுரிகிறார்கள் என்பதனால் புதிதாக ஆண், பெண் நியமனம் செய்ய வேண்டிய நேர்வு எழவில்லை.

**60—**

## காவலர்கள் நியமனம்

**வினா எண் 14256—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி கிளைச் சிறைச்சாலைக்குப் போதிய ஆண், பெண் காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி கிளைச் சிறையில் ஆண் சிறைவாசிகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். ஆகவே, இக்கிளைச் சிறையில் பெண் காவலர்களை நியமனம் செய்யும் நேர்வு எழவில்லை.

**61—**

## கூடுதலாக மாணவர் சேர்க்கை

**வினா எண் 14315—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஜனவரி 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இக்கல்வியாண்டில் (2006–2007) தமிழ்நாட்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் 402 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஆ) எழவில்லை.

**62—**

## மருத்துவமனையை விரிவுபடுத்தல்

**வினா எண் 14925—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலை மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறையின் மருத்துவமனையில், அங்கீகரிக்கப்பட்ட படுக்கை வசதிகளுக்குக் குறைவாகவே சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறை மருத்துவமனையில் எக்ஸ்–ரே கருவி, இரத்தப் பரிசோதனைக் கூடம், ஈ.சி.ஜி. கருவி ஆகியனவும், போதுமான மருந்துகளும் உள்ளன. மேலும், இச்சிறையில் நோயுற்ற சிறைவாசிகளைத் தனியே அனுமதித்து சிகிச்சை அளித்திட ரூ.23.26 இலட்சம் மதிப்பீட்டில் தனித் தொகுதி கட்ட அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

**63—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 6011—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 27

(அ) கபிலர் மலை ஒன்றியம், ஜேடர்பாளையம் அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) சுற்றுலாத் துறையின்மூலம் எந்த ஒரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. கபிலர் மலை ஒன்றியம், ஜேடர்பாளையம் அணைககட்டுப் பகுதியைச் சுறறுலாத் தலமாக மாற்ற செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**64—**

## கேபிள் கார்

**வினா எண் 7793—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டபெட்டாவிலிருந்து உதகமண்டலம் நகருக்கு கேபிள் கார் விடப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தொட்டபெட்டாவிலிருந்து உதகமண்டலம் நகருக்கு கேபிள் கார் விட செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

## விளம்பரச் சாதனங்கள்

**வினா எண் 8468—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு நவீன தகவல் தொடர்பு மற்றும் விளம்பரச் சாதனங்கள் வழங்க அரசு முன்வருமா?



2007 ஜனவரி 27]

(ஆ) ஆம் என்றால், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு ஏற்கெனவே ஜெராக்ஸ் மெஷின், கணினி மற்றும் டிஜிட்டல் கேமரா ஆகியன வழங்கப்பட்டுள்ளன. தற்போது செல்லுமிடத் தொலைபேசி வழங்கப்பட்டுள்ளது. ஸ்கேனர், பிரிண்டர் வழங்கப்படும் நிலையில் உள்ளன. மேற்கொண்டு தகவல் தொடர்பு மற்றும் விளம்பரச் சாதனங்கள் வழங்கும் திட்டம் அரசின் இவ்வருடப் பரிசீலனையில் இல்லை.

**66—**

## அரசு கிளை அச்சகம்

**வினா எண் 12918—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு கிளை அச்சகம் செங்கல்பட்டில் துவக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் தற்போது இயங்கிவரும் 7 அரசு அச்சகங்களின் மூலமாகத் தமிழ்நாட்டில் உள்ள மாநில அரசு அலுவலகங்களுக்குத் தேவையான படிவங்கள், புத்தகங்கள் மற்றும் அரசிதழ்கள் ஆகியவை நவீன அச்சு இயந்திரங்கள் மூலமாக முழுமையாக அச்சிட்டு வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, செங்கல்பட்டில் புதிதாக அரசு கிளை அச்சகம் துவக்கும் தேவை எழவில்லை.

**67—**

## திரைப்பட நகர்

**வினா எண் 13697—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 27

உதகமண்டலத்தில் திரைப்பட நகர் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

68—

## தரமான அரிசி

**வினா எண் 7886—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியிலுள்ள பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்திற்கு தரமான அரிசி வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியிலுள்ள பள்ளிகளில் மட்டுமல்லாது அனைத்துத் தமிழகப் பள்ளிகளிலும் வழங்கப்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்திற்கும் தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

69—

## மலிவு விலையில் உடைகள்

**வினா எண் 9138—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில், மலிவு விலைச் சேலைகள், வேட்டிகள், சுடிதார்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைகளில் மலிவு விலைச் சேலைகள், வேட்டிகள், சுடிதார்கள் வழங்கும் திட்டம் எதுவுமில்லை.



2007 ஜனவரி 27]

70—

## மாநில ஆலோசனைக் குழு

**வினா எண் 5312—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக மாநில ஆலோசனைக் குழு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், தொழிலாளர் ஆணையர் தலைமையில் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு சட்டரீதியற்ற குழுவாகும். இக்குழு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழ், வீட்டு வசதி அல்லாத இதர வரையறுக்கப்பட்ட நலத் திட்டங்களை ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. இக்குழுவில் தொழிலாளர் தரப்பில் 7 உறுப்பினர்களும், நிர்வாகத் தரப்பில் 7 உறுப்பினர்களும் உள்ளனர். இக்குழுவின் காலம் 3 ஆண்டுகள் ஆகும். மேற்படி குழு, அரசாணை 2(டி) எண் 14, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21–2–2006 மூலம் மறு அமைப்பு செய்யப்பட்டது.

71—

## அடுக்குமாடி வீடுகள்

**வினா எண் 10846—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளை மாற்றி அடுக்குமாடி வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

[2007 ஜனவரி 27

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளை மாற்றி, அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**72—**

## ஓய்வு இல்லம்

**வினா எண் 10855—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகரில் தொழிலாளர் ஓய்வு இல்லம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையிலுள்ள தொழிலாளர்களுக்கான சிங்காரவேலர் ஓய்வில்லம் கட்டி, 2-9-1987 முதல் 30 படுக்கைகள் கொண்டதாக இயங்கி வருகின்றது. தற்போது புதியதாகத் தொழிலாளர் ஓய்வு இல்லம் வால்பாறையில் கட்டித் தர திட்டம் ஏதும் இல்லை.

**73—**

## தனி வாரியம்

**வினா எண் 14818—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 27]

மண்பாண்டத் தொழிலாளர்களுக்குத் தனியாக வாரியம் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 1-8-2006-ன்படி மண்பாண்டத் தொழிலாளர்களுக்கென்று தனியாக வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாரியம் 1-8-2006 முதல் இயங்கி வருகின்றது.

**74—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 8623—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, குமரலிங்கம் கிராமத்தில் பழனி தேவஸ்தான நிதியிலிருந்து பக்தர்கள் தங்குவதற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான, குமரலிங்கம் கிராமத்தில் உள்ள காலியிடத்தில் "சமுதாயக் கூடம்" கட்டுவதற்கான செயற்குறிப்பு, பழனி திருக்கோயில் நிர்வாகத்தின் பரிசீலனையில் உள்ளது.

**75—**

## ஆலய முன் மண்டபம்

**வினா எண் 8627—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 27

*(அ)* உடுமலைப்பேட்டை தொகுதி, அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் ஆலய முன் மண்டபம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இந்திரா காந்தி வனச் சரணாலயப் பகுதியில் அமைந்துள்ள இத்திருக்கோயிலுக்கு முன் மண்டபமாக அலங்கார மண்டபம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, வனத் துறையால் வனப் பகுதியில் புதிய கட்டுமானம் ஏதும் செய்திடக்கூடாது எனத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மண்டபத் திருப்பணி தொடர்பாக பணிகள் நிறைவு செய்திட வனத் துறையிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்த பின்பே, அப்பணி தொடர்ந்து செய்திட இயலும்.

**76—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 11336—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூர் வைதீஸ்வரன் கோயில், திருவேங்கடநாத பெருமாள் கோயில், அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் ஆகிய கோயில்களின் திருப்பணிகள் தொடர, நிறுத்தி வைக்கப்பட்ட அரசு நிதியுதவிகளை மீண்டும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், சூலூர் கிராமத்திலுள்ள அருள்மிகு திருவேங்கடநாத பெருமாள் திருக்கோயில் மற்றும் சூலூர் வைதீஸ்வரன் திருக்கோயில்களுக்கு திருப்பணிக்காக அரசு மானியமாக ரூ. 5.95 இலட்சம் 2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு, அத்திருப்பணிகளில் சில பணிகள் முடிக்கப்பட்டு, சில பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன.



2007 ஜனவரி 27]

அய்யம்பாளையம் அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் திருக்கோயிலின் வளாகத்தில் "கியூ லைன்" அமைக்கும் பணி ரூ. 1.10 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இத்துடன் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இத்திருக்கோயிலின் முன் வாயிலில் நடைபாதை அமைத்தல் மற்றும் பாலம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு ரூ.2.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**77—**

## திருக்கோயில் திருப்பணி

**வினா எண் 11593—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியம், விருவீடு ஊராட்சியில், மேல அச்சனம்பட்டி கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் கோயிலைப் பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆதி திராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்கள் திருப்பணித் திட்டத்தின்கீழ் மேல அச்சனம்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் இடம் பெற்றுள்ளது. இத்திருக்கோயில் திருப்பணிக்கு ரூ. 25,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**78—**

## கோயிலுக்குக் குளம் அமைத்தல்

**வினா எண் 11750—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, பாளேகுளி கிராமத்தில் உள்ள அருள்மிகு பெரியமலை பெருமாள் திருக்கோயில் மற்றும் பொன்னேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு குளம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 27

விடை—

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாளேகுளி கிராமத்தில் உள்ள அருள்மிகு பெரியமலை பெருமாள் திருக்கோயிலுக்கு ஏற்கெனவே உள்ள திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது. மேலும், தற்போது கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகத்தின் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் ஒரு குளம் அமைக்கப்பட்டு பணி முடியும் நிலையில் உள்ளது.

அருள்மிகு பொன்னேஸ்வர சுவாமி திருக்கோயில், தென்பெண்ணை ஆற்றங்கரை அருகில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு மிகவும் குறைவான அளவிலேயே பக்தர்கள் வருகின்றனர். குளம் அமைத்திடத் தேவையான இட வசதியும், நிதி வசதியும் திருக்கோயிலில் இல்லாத காரணத்தினால், இத்திருக்கோயிலுக்குக் குளம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

**79—**

## உதவி ஆணையர் அலுவலகம்

**வினா எண் 11805—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டக் கோயில்களைப் பராமரிக்க தனி மாவட்ட அலுவலகம் உருவாக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல், கரூர், திருவாரூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குப் புதியதாக உதவி ஆணையர் அலுவலகங்கள் தோற்றுவிக்க ஆணை வழங்கப்பட்டு, அம்மாவட்டங்களில் புதிய அலுவலகம் அமைப்பது தொடர்பான பூர்வாங்கப் பணிகள்



2007 ஜனவரி 27]

நடைபெற்று வருகின்றன. விரைவில் திண்டுக்கல் உள்ளிட்ட மேற்படி மாவட்டங்களில் உதவி ஆணையர் அலுவலகம் செயல்படத் தொடங்கும்.

**80—**

## சேலை உற்பத்தி

**வினா எண் 8923—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் சரக கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகும் இரகங்களைக் கோ-ஆப்டெக்ஸ்-க்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

கும்பகோணம் சரகம், பெரம்பலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் பருத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தால் (கோ-ஆப்டெக்ஸ்) 20,903 சேலைகளுக்கு உற்பத்தித் திட்டம் அளிக்கப்பட்டு, அக்டோபர் 2006 வரையில் 14,641 சேலைகள் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தால் கொள்முதல் செய்யப்பட்டன. பருத்தி இரகச் சேலைகளைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து கொள்முதல் செய்து வருகிறது. கும்பகோணம் சரகத்தில் இயங்கிவரும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 7 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் half-fine zari பட்டுச் சேலைகளை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் உடனுக்குடன் கொள்முதல் செய்து வருகிறது.

**81—**

## அரசு நிதியுதவி

**வினா எண் 11514—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் பெரிய வாளவாடி, சின்னபொம்மன் சாலை, மலையாண்டிபட்டணம், பாப்பாகுளம்

[2007 ஜனவரி 27

ஆகிய பகுதிகளில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபகரமாக இயங்க மறு சீரமைப்பு செய்ய அரசு நிதியுதவி வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கஞ்சம்பட்டி ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரி சங்கம், பெரிய வாளவாடி பேரறிஞர் அண்ணா சங்கம், பூளவாடி ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரி சங்கம் மற்றும் மடத்துக்குளம் ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரி சங்கம் ஆகிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 550 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. மேற்கண்ட சங்கங்களில், பெரிய வாளவாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தவிர, இதர சங்கங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனம் கோவை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் காசுக்கடனாக வழங்கப்பட்டு, சங்கங்கள் இலாபகரமாக இயங்கி வருகின்றன. எனவே, தற்போது அரசு பிரத்தியேகமாக நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**82—**

## நவீனமயமாக்குதல்

**வினா எண் 12450—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சரிகை ஆலை நவீனமயமாக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறிப் பட்டுக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குத் தரமான சரிகையை உரிய விலையில் தயாரித்து விநியோகிக்கும் பொருட்டு, தமிழ்நாடு சரிகை நிறுவனம் காஞ்சிபுரத்தில் 23-1-1974 ஆம் தேதி துவக்கப்பட்டு சரிகை உற்பத்தி செய்து வருகிறது. ஆலையின் உற்பத்தியினை நவீனமயமாக்கிட பின்வரும் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன:



2007 ஜனவரி 27]

(அ) சரிகைத் தயாரிப்புக்கு முக்கிய மூலப் பொருளான வெள்ளி இழையினை இந்நிறுவனத்திலேயே தயாரிக்கும் பொருட்டு, மத்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் தொழிலியல் ஆராய்ச்சித் துறையின் அனுமதியுடன் ரூ. 60.00 இலட்சம் மூலதன செலவில் சிறப்பு நுண்ணிய வெள்ளியிழை இழுவை இயந்திரங்களை பரீட்சார்த்த முறையில் இயக்கும் அடுத்த தலைமுறையின் இயந்திரம் என்ற முன்னோடித் திட்டம் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது.

(ஆ) வெள்ளிப் பட்டிழை உற்பத்தியினை அதிகரிக்கும் முனைப்பில் மத்திய அரசின் டைபாக் (TIFAC) (Technology Information Forecasting Assessment Council) நிறுவன ஒத்துழைப்புடனும், கோயம்புத்தூர் குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி உதவியுடனும் "இயந்திரத் தொழில்நுட்ப முன்னேற்றம்" எனும் திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

(இ) தங்கப் பூச்சில் நிறம் மற்றும் பளபளப்பினை அதிகரிக்கும் நோக்கில் ஐதராபாத் என்.எப்.டி.டி.சி. நிறுவன தொழில்நுட்ப உதவியுடன் "தங்கப் பூச்சில் முன்னேற்றம்" எனும் திட்டம் ரூ.7.07 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்ட தொழில்நுட்ப முறையில் நடைபெற்று வருகிறது.

(ஈ) பொன் இழை தட்டைப் பிரிவில் தட்டையாக்கும் தரத்தினை மேம்படுத்த ரூ.0.65 இலட்சம் செலவில் நீளம் அளக்கும் கருவி மாதிரிகள் இரண்டு கதிர்களில் பொருத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகினறது. இம்முயற்சி வெற்றி இலக்கினை நோக்கிச் சென்று கொண்டுள்ளதால், இவை மேலும் உள்ள அனைத்து கதிர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளன.

மேற்கண்ட அனைத்து நவீனமயமாக்கப்படும் திட்டங்களும் காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள சரிகை நிறுவனத்தில் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**83—**

## கைத்தறித் தொழில்

**வினா எண் 14223—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதியில், சோமனூர், பல்லடம் ஆகிய பகுதிகளில் கைத்தறித் தொழில்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

பல்லடம் தொகுதியில், சோமனூர், பல்லடம் ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் கணபதிபாளையம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், வாகை விவேகானந்தா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், செம்மாண்டம்பாளையம் ஸ்ரீ சௌடாம்பிகை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சுப்பராயன்புதூர் தேவாங்கா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய நான்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 644 தறிகளுடன் இயங்கி வருகின்றன. இங்குள்ள கைத்தறி நெசவாளர்கள் அனைவருக்கும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்படுவதோடு, அரசு நலத் திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு வருவதால், பல்லடம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கைத்தறித் தொழிலுக்கு பாதிப்பு ஏதும் இல்லை.

**84—**

## நெசவுத் தொழிற்பேட்டை

**வினா எண் 15070—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள ரமணமுதலிப்புதூரில் நெசவுத் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ரமணமுதலிப்புதூரில் கூட்டுறவு அமைப்பின்கீழ் 40 தறிகளும், கூட்டுறவு அல்லாத அமைப்பின்கீழ் 47 தறிகளும் உள்ளன. எனவே, அங்கு நெசவுத் தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



2007 ஜனவரி 27]

**85—**

## தேர்வு மையம்

**வினா எண் 8608—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்-2 தேர்வு மையம் அமைக்க அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்-2 தேர்வு மையம் அமைப்பதற்கான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

**86—**

## நீச்சல் குளம்

**வினா எண் 8814—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு நீச்சல் குளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தருமபுரி மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள இலக்கியம்பட்டி ஊராட்சியில் ஒரு நீச்சல் குளம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) நிலை எழவில்லை.

[2007 ஜனவரி 27

87—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 9957—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கஞ்சாநகரம் ஊராட்சியில், விளையாட்டு மைதானம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கஞ்சாநகரம் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

88—

## அனாதை இல்லம்

**வினா எண் 4264—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் வயது முதிர்ந்தவர்களுக்கு அனாதை இல்லம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில், பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் அரசு முதியோர் இல்லம் அமைக்கும் திட்டம் ஏதும்



2007 ஜனவரி 27]

தற்போது அரசிடம் இல்லை. பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் தொண்டு நிறுவனங்கள் ஏதும் முதியோர் இல்லம் நடத்த முன்வருமாயின், அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உதவி பெறத் தகுதி பெற்றிருப்பின், மத்திய அரசின் மானிய உதவி பெற மாநில அரசு மூலம் பரிந்துரைக்கப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

89—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 7152—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, பொன்மலையில் உள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

2006–2007 ஆம் ஆண்டில் திருவட்டாறு தொகுதி, பொன்மலையில் உள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

90—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 9999—திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, உமராபாத்திலுள்ள கால்நடை துணை மருந்தகத்தை மாற்றி, முழு நேரக் கால்நடை மருத்துவமனையாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 27

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட உமராபாத் கால்நடைக் கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த அரசுத் தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**91—**

## கால்நடைக் கிளை நிலையம்

**வினா எண் 10073—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கூலம், முசரவாக்கம், கம்பராஜபுரம் ஆகிய கிராமங்களில் கால்நடைக் கிளை மருத்துவமனைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்த முசரவாக்கம் என்ற இடத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்போது அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கூலம், கம்பராஜபுரம் ஆகிய கிராமங்களில் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**92—**

## கால்நடைக் கிளை நிலையம்

**வினா எண் 12664—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஜனவரி 27]

செங்கல்பட்டு தொகுதியில் வழுவத்தூர், பாண்டூர், நென்மேலி, சாலூர், பெருமானேரி, பட்டிக்காடு, நல்லாத்தூர் ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை மருத்துவ நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், செங்கல்பட்டு தொகுதியினைச் சார்ந்த வழுவத்தூர், பாண்டூர், நென்மேலி, சாலூர், பெருமானேரி, பட்டிக்காடு, நல்லாத்தூர் முதலான கிராமங்களில் புதிதாகக் கால்நடைக் கிளை நிலையம் தொடங்க தற்போது அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**93—**

## கூடுதல் ஆசிரியர்கள்

**வினா எண் 3690—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நெரும்பூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

நெரும்பூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை மொத்தம் 403 மாணவ/மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். வகுப்பு வாரியான விவரம் வருமாறு:—

| வகுப்பு | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| ஒன்றாம் வகுப்பு | 15 | 10 | 25 |
| இரண்டாம் வகுப்பு | 15 | 10 | 25 |
| மூன்றாம் வகுப்பு | 19 | 17 | 36 |

| | | | |
|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 16 | 20 | 36 |
| ஐந்தாம் வகுப்பு | 15 | 17 | 32 |
| ஆறாம் வகுப்பு | 50 | 36 | 86 |
| ஏழாம் வகுப்பு | 33 | 39 | 72 |
| எட்டாம் வகுப்பு | 47 | 44 | 91 |
| மொத்தம் | **210** | **193** | **403** |

இப்பள்ளிக்கு 4 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், ஆக மொத்தம் 9 ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. தற்போது 6 ஆசிரியர்கள் இப்பள்ளியில் பணிபுரிந்து வருகிறார்கள். 3 இளநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதனை உடனடியாக பூர்த்தி செய்ய காஞ்சிபுரம் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும், பள்ளியின் தேவைக்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் அமையும்.

**94—**

## பால்மூலம் உணவுப் பொருட்கள்

**வினா எண் 8612—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் ஆவின் பால்மூலம் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும் ஆவின் பால் பண்ணையிலும், மானாமதுரைக்கு அருகில் மதுரையில் செயல்படும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திலும், பால் மற்றும் பால் உப பொருட்கள் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, மானாமதுரையில் தனியாக ஆவின் பால்மூலம் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழில் தொடங்கும் வாய்ப்புகள் இல்லை.



**95—**

## பசும்பால் விலை நிர்ணயம்

**வினா எண் 8743—திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழு விற்பனை செய்யும் பசும்பாலின் விலையை அரசு நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடமிருந்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் பசும்பாலின் விலை, அரசு நிர்ணயித்த லிட்டர் ஒன்றுக்கு ரூ.10.50 வீதம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மீண்டும் நிர்ணயம் செய்யும் உத்தேசம் இல்லை.

**96—**

## தேனீ வளர்ப்புத் தொழில்

**வினா எண் 2779—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தேனீ வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**97—**

## பனைசார் பொருட்கள் உற்பத்தி

**வினா எண் 5858—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஜனவரி 27

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, புங்கம்பட்டி பகுதி பனைசார் தொழிலாளர்களுக்கு பனைசார் பொருட்கள் உற்பத்தி செய்ய அரசு கடன் வழங்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பனைசார் தொழிலாளர்களுக்கு பனைசார் பொருட்கள் உற்பத்தி செய்ய மும்பை, கதர் ஆணைக் குழு, கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தில் பரிந்துரைக்கப்பட்ட தொழில்களுக்கும் மற்றும் சிறு தொழில்களுக்கு விளிம்புத் தொகை (Margin Money Scheme) திட்டத்தின்கீழ் தேசிய வங்கிகள்மூலம், அந்தந்த மாவட்ட உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில் அலுவலகத்தின்மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, காவேரிப்பட்டினம் சார்ந்த மக்களுக்கு சேலம், உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) அலுவலகம்மூலம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற வாய்ப்புகள் உள்ளன.

**98—**

**கதர் சாயச் சாலை**

**வினா எண் 12307—திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகரில் அமைந்துள்ள கதர் சாயச் சலவை மற்றும் அச்சு அலகுத் தொழிற்சாலை மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) பவானிசாகரில் சாயமிடுதல், சலவையிடுதல், அச்சிடுதல் அலகு 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில் 48 தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய விகிதத்தில் கூலி வழங்கி செயல்படுத்தப்பட்டது. கதர் உற்பத்தியில் முன்பிருந்த உற்பத்தியைவிட



2007 ஜனவரி 27]

தொடர்ந்து உற்பத்தியில் குறைவு ஏற்பட்டதால், தொழிலாளர்களுக்கு முழு அளவில் வேலை கொடுக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. பவானிசாகர் சாயச் சலவை அச்சு அலகு தொடர்ந்து 6 வருட காலமாக நட்டத்தில் இயங்கி வந்ததால், 1-1-2003 முதல் செயல்படுத்த இயலாமல் மூடப்பட்டது. மூடப்பட்ட அலகினை மீளவும் செயல்படுத்திட தொழிலாளர்கள் அரசிடம் கோரிக்கை வைத்ததைத் தொடர்ந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. தொழிலாளர்கள் "பீஸ் ரேட்" அடிப்படையில் ஊதியம் பெற்று பணிபுரியவோ, ஆண்கள் சுய உதவிக் குழு அமைத்து செயல்படவோ, தொழிற்கூட்டுறவுச் சங்கம் அமைத்து செயல்படவோ முன்வரவில்லை. தினக் கூலி அடிப்படையில் மட்டுமே பணிபுரிய இயலும் என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர். பவானிசாகர் சாயச் சலவை அச்சு அலகு 01-01-2003 அன்று மூடப்பட்டதிலிருந்து இயந்திரங்கள் பயன்படுத்தப்படாததால், இயந்திரங்கள் துருப் பிடித்துள்ளன. இதனைப் பழுது நீக்கம் செய்து மீண்டும் இயக்குவதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. கதர் வாரியம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால், இதனைப் பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் உள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில், தொழிலாளர்கள் கோரியபடி தினக கூலி அடிப்படையில் கூலி வழங்கி அலகினை செயல்படுத்தினால் வாரியத்திற்கு மேலும் நட்டம் ஏற்படும் என்பதால், பவானிசாகர் சாயச் சலவை அச்சு அலகினை மீளவும் திறந்து செயல்படுத்திட இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**99—**

**விளம்பரம் செய்தல்**

**வினா எண் 14335—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் கதர் கிராமக் கைத்தொழில்களில் தயாராகும் கைவினைப் பொருட்களை மக்கள் வாங்குவதற்கு விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஜனவரி 27

விடை—

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் 2 கதர் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கதர் அங்காடிகள் மூலம் கதர் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும், மாவட்ட அளவில் நடத்தப்படும் கண்காட்சியில் அரசுத் துறைகள் பங்கு கொள்ளும்போது, வாரியமும் பங்குகொள்கிறது. அந்தச் சமயங்களில் கதர் கிராமத் தொழில் பொருட்களை மக்கள் அதிக அளவு வாங்குவதற்கு விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இதேபோல், ஒவ்வொரு வருடமும் கோயம்புத்தூரில் நடைபெறும் கண்காட்சியில் வாரியம் பங்குகொள்ளும் சமயங்களில் வாரியத்தின் நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு கதர் கிராமக் கைத்தொழில்களில் தயாராகும் கைவினைப் பொருட்களை மக்கள் அதிக அளவில் வாங்குவதற்குத் தேவையான விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

**100—**

**கதர்க் கடைகள்**

**வினா எண் 14339—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலும், கோட்டூரிலும் கதர்க் கடைகள் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் தற்போது 'கிராமசில்பா' ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வால்பாறையின் மக்கள் தொகையினைப் பொறுத்தவரை, வால்பாறை கிராமசில்பா ஒன்றே கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனைக்குப் போதுமானது. மேலும், கோட்டூர் சுமார் 10,000 மக்கள் தொகை கொண்ட சிறிய ஊர் என்பதாலும், கோட்டூரில் இருந்து 20 கி.மீ. தொலைவில் பொள்ளாச்சியில் கதர் அங்காடி ஒன்று செயல்பட்டு வருவதாலும், கோட்டூரில் புதியதாக கதர் அங்காடி திறக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.



(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு கோஷமிடத் தொடங்கினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரி, அரி, அரி (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைக்கு இடைஞ்சல் பண்ணக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைக்கு இடையூறு பண்ணுகிறீர்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து தவறுகிறீர்கள். (குறுக்கீடுகள்) போங்கள். (குறுக்கீடுகள்) வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) நீங்கள் அவையினுடைய நடவடிக்கைக்கு இடையூறு பண்ணுகிறீர்கள். (குறுக்கீடுகள்) அவையினுடைய நடவடிக்கைக்கு இடையூறு பண்ணுகிறீர்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள், வெளியேற்றுங்கள், அவ்வளவு பேரையும் (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள் அவ்வளவு பேரையும். (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவு பேரையும். வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) A.I.A.D.M.K. Members அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) A.I.A.D.M.K. M.L.A.s அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டே இருந்தனர்.)*

போகிறீர்களா? (குறுக்கீடுகள்) நான் வெளியேற்றுகிறேன். என்னுடைய உத்தரவு வெளியேற்றுங்கள் அவ்வளவு பேரையும். (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) வெளியேற்ற முடியும். (குறுக்கீடுகள்) நீங்கள் போய்ப் பாருங்கள் எங்கே வேண்டுமானாலும். (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள் அவ்வளவு பேரையும். (குறுக்கீடுகள்) வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) முடியாது. (குறுக்கீடுகள்) போங்கள்.

(குறுக்கீடுகள்) காவலர்கள், வெளியேற்றுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) அ.தி.மு.க.வைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக இடையூறு பண்ணுவதால், அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள், உடனே வெளியேற்றுங்கள் அவ்வளவு பேரையும்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியிலிருந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

லாபியில் நின்று இடையூறு பண்ணுகிறார்கள். வெளியேற்றுங்கள். (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஞானசேகரன்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் குறித்து நான் நேற்றைக்கு முன்தினம் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தேன். ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. அது பரிசீலனையில் இருக்கிறது. உட்காருங்கள்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்



முற்பகல் 9-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினுடைய 26 மற்றும் 27 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 16 முதல் 30 வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். மேற்படி அறிக்கைகள், போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, படியெடுத்த பிரதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பெறும்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும், பதிலுரையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டு முதல் திங்களிலே ஜனவரித் திங்களில் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே சொல்ல விழைகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2007 ஜனவரி 27

2006 ஆம் ஆண்டு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஓராண்டு ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை விவாதங்களில் ஆற்றிய உரைகள், செய்த அறிவிப்புகள் குறித்த பணிகளைத் தமிழக அரசு எந்த வகையிலே செய்துகொண்டிருக்கிறது என்பதையெல்லாம் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் ஆய்வு செய்து பார்த்தோம். ஆய்வு செய்து பார்த்த வகையில், இந்த ஆண்டு ஆளுநர் உரையைப் படித்துப் பார்த்து, இதை நாங்கள் மூன்று கட்டமாகப் பிரித்துப் பார்க்கின்றோம். ஒன்று, இந்த அரசு என்ன செய்திருக்கிறது, இரண்டாவது, என்ன செய்யப் போகிறது, மூன்றாவது, என்ன செய்ய வேண்டும் என்று பட்டியலிட்டுப் பார்க்கின்றோம். அப்படிப் பார்க்கின்ற வேளையில், தமிழக அரசினுடைய ஓராண்டுச் சாதனைகளைப் பார்க்கும்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த வேளையில் அவரைப் பற்றி எண்ணிப் பார்க்கின்ற வேளையில், வரலாற்று நிகழ்வுகளை, வரலாற்றில் இடம்பெற்றவர்கள் பலரை நாம் கோடிட்டுப் பார்க்கிறோம். இன்று, தமிழுக்குப் பெருமை சேர்த்த, தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த திருவள்ளுவர் அவர்களைப் பற்றி பேசுகிற நேரத்தில், மொழி, மதம், இனம் கடந்து எல்லோருக்கும் பொதுவான திருக்குறள், உலகப் பொது மறை என்று சொல்லக்கூடிய அளவில், வரலாற்றில் இடம் பெற்றிருப்பவர் திருவள்ளுவர். அதேபோல இராஜராஜ சோழனைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்கிறோம், தமிழக மன்னர்களுள். இப்படி ஒவ்வொருவரையும் எண்ணிப் பார்க்கின்ற வேளையில், இந்த வரலாற்று நிகழ்வுகளை, வரலாற்றுச் சாதனையாளர்களைப் பார்க்கின்றபோது, வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெற்றவர்கள், நீடித்த புகழுக்குச் சொந்தக்காரர்கள் பல பேர் என்ற வரிசையில், இப்படித் திருவள்ளுவரையும், இராஜராஜ சோழனையும், வரலாற்றுச் சாதனையாளர்களாக எண்ணிப் பார்க்கிறோம். வரலாற்று நிகழ்வுகளைப்பற்றி திருவள்ளுவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

'நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு'

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இப்பூமியின் எல்லை அளவுக்குப் பரவியிருக்கும் புகழ்தரும் செயல்களை ஒருவர் செய்வாரானால், உலகத்தவர் தேவரைப் போற்றாது அவரையே போற்றுவர் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதற்கடுத்து, ஒரு இடத்தில் சொல்கிறார்,



2007 ஜனவரி 27] [திரு. ஜி.கே. மணி]

'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு'

படை, குடி, உணவு, அமைச்சர், நண்பர், நாட்டைக் காக்கும் உறுப்பு ஆறினையும் உடையவர் அரசருள் சிங்கம் போன்றவர் ஆவார் என்று வள்ளுவர் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆக, இப்படி இந்தத் திருக்குறளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, வரலாற்று நிகழ்வுகளை சாதித்தவர்களை எண்ணிப் பார்த்து, ஒப்பிடுகிற வேளையில், எனக்குத் தெரிவதெல்லாம், நான் புரிந்துகொண்ட வகையில், நீடித்த புகழுக்கும், நிலைத்த பெருமைக்கும் உரியவர் தமிழ் மண்ணுக்குச் சொந்தக்காரர் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நான் முதலில் பாராட்டிச் சொல்ல விரும்புகிறேன்

முற்பகல் 9-40

இப்படி வரலாற்று நிகழ்வுகளைத் தமிழ்நாட்டிலே நிகழ்த்தியவற்றைப் பார்க்கின்ற அதேவேளையில், இப்போது மத்திய-மாநில அரசுகளின் ஆட்சியைப் பற்றியும் பார்க்கிறோம். மத்திய அரசு, மூன்று ஆண்டுகளை எட்டிக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரை ஓராண்டு முற்றுப் பெறாது, ஓராண்டை எட்டிக்கொண்டிருக்கிற நிலையிலே நாம் இருந்துகொண்டு இருக்கிறோம். இந்த வேளையில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு, Hindustan Times பத்திரிகை நிறுவனமும், CNN – IBN தொலைக்காட்சி நிறுவனமும், இந்தியா முழுவதும் ஓர் ஆய்வு செய்தன. அந்த ஆய்வு அறிக்கையிலே அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். இந்த இரண்டு நிறுவனங்களும், 3 ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சாதனைகளைச் சொல்கிறவேளையில், இதுவரையிலே இல்லாத அளவிற்கு இந்த அரசு அரிய சாதனைகளைச் செய்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, பட்டியலிட்டுப் பார்க்கின்றவேளையில், திருமதி சோனியா காந்தி அம்மையார் தலைமையிலே, அவரது வழிகாட்டுதலோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு, மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்துக்கொண்டிருக்கிறது; (மேசையைத் தட்டும் ஒலி) இன்று

[திரு. ஜி.கே. மணி] [2007 ஜனவரி 27

தேர்தல் நடந்தால்கூட, கூட்டணி ஆட்சியில் இடம் பெற்று இருக்கிற கட்சிகள் மட்டும் போட்டியிட்டாலே 300 இடங்களைப் பெறும்; தனிப் பெரும்பான்மை பெறும் என்று ஆய்வின் அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். இப்போது இருப்பது 222 இடங்கள். தேர்தல் வந்தால் 300. தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் சார்பிலே இருப்பவர்கள் 189. ஆனால், தேர்தல் நடந்தால் வெற்றி பெறப்போவது 115 இடங்களாக இருக்கும் என்று ஆய்வு அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி மத்திய அரசைப் பற்றிய கணிப்பு மட்டுமல்ல, அதைச் சொல்லிவிட்டு, பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் சிறப்பாக ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார்; எனினும், மக்கள் மத்தியிலே எழுந்திருக்கிற எண்ணம், மேலோங்கி இருப்பது என்னவென்று சொன்னால், இந்த நாடுதான் எனக்கு முக்கியம், நாட்டு மக்கள்தான் முக்கியம், எனக்குப் பிரதமர் பதவி தேவையில்லை என்று பிரதமர் பதவியையே தூக்கி எறிந்த தியாகத் தலைவியாக இருக்கின்ற அன்னை சோனியா காந்தி அவர்கள் பிரதமராக வரவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கருத்தையும் மக்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்ற செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். இப்படி மத்திய அரசைப் பற்றிய ஒரு செய்தி ஆய்வு அறிக்கையிலே உள்ளது.

மாநில அரசைப் பற்றிச் சொல்கிறார்கள். மாநில அரசு, ஓராண்டை எட்டிக்கொண்டு இருக்கிறது. இந்த ஓராண்டு ஆட்சியில், இந்தியாவில் இருக்கிற பல்வேறு முதலமைச்சர்களைப் பட்டியலிட்டுப் பார்த்தோம் என்று சொன்னால், ஒவ்வொருவருக்கும் தரவாரியாக இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த 5 ஆண்டு காலம் ஆய்வு நடத்தப்பட்டது. அன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இறுதியிலே இருந்தார், கடைசி இடத்தில் இருந்தார் என்ற நிலையை ஆய்வு அறிக்கையிலே, ஓராண்டு மட்டுமல்ல, தொடர்ந்து சொல்லப்பட்டு வந்தது. இந்த நிலை ஒருபுறம் இருக்க, நம்முடைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி அவர்கள் சொல்கின்றபோது, பட்டியலில் எடுத்த எடுப்பிலேயே நான்காவது இடத்திற்கு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்ற செய்தியைச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு மூன்றாவது இடம் என்று சொன்னார்கள். நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், எடுத்த எடுப்பிலே கலைஞர், நான்காவது இடத்திலே இருந்தார். இப்போது ஓராண்டை எட்டிக்கொண்டிருக்கிற இந்தவேளையிலும் அந்த நான்காவது



2007 ஜனவரி 27] [திரு. ஜி.கே. மணி]

இடத்தையே தக்க வைத்துக்கொண்டிருக்கிறார். முறையாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார். ஆனால், முதல் இடத்திலே இருந்தவர்கள், இரண்டாம் இடத்திலே இருந்தவர்கள், பத்தாம் இடத்திலே இருந்தவர்கள் எல்லாம், மாறி மாறி வந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தர வரிசையிலே இறங்கு வரிசையிலே எல்லோரும போய்க்கொண்டு இருக்கிறார்கள். முதல் இடத்தில் இருந்தவர் இரண்டாவது இடத்திற்கு, இப்படி மாறி மாறி வந்துவிட்டார்கள் ஆனால், இருந்த இடத்தைவிட்டுக் கீழே இறங்காமல் மேலே போகத் துடித்துக்கொண்டு இருப்பவர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த ஆய்வு அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். அந்த அளவிற்குச் சிறப்பான ஒரு ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது.

முற்பகல் 9–15

இப்படிப்பட்ட ஆட்சியைப் பார்த்து, அ.தி.மு.க.–வினுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இந்த ஆட்சி கலைக்கப்படவேண்டும் என்கிறார்கள். எதற்காக கலைக்கப்படவேண்டும்? உள்ளாட்சித் தேர்தலிலே, மாநகராட்சித் தேர்தலிலே முறைகேடு நடந்து இருக்கிறது என்கிறார்கள். முறைகேடு நடந்ததா, இல்லையா என்பது ஒருபுறமிருக்க. 2001–லே உள்ளாட்சித் தேர்தல் நடந்தது. சென்னை மாநகராட்சித் தேர்தலிலே நடந்தது என்ன ஊழல், என்ன முறைகேடு? நாம் எண்ணிப் பார்க்கிறோம். இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள் அன்று மேயர் தேர்தலிலே போட்டியிட்டார்கள். அவர் எந்த வாக்குச் சாவடிக்கும் செல்ல முடியவில்லை. பாட்டாளி மக்கள் கட்சித் தோழர்கள் அவரோடு சென்றார்கள். ஏன் என்றால், பாதுகாப்பே இல்லாத நிலை. காவல் துறையே அடித்தார்கள். அ.தி.மு.க.–வினர், நம்முடைய கூட்டணிக் கட்சியினர் எல்லோரையும் விரட்டி, விரட்டி அடித்தார்கள். வாக்கு எண்ணிக்கையிலே, வாக்குச் சாவடிகளிலே மை இருக்கிறதல்லவா, எழுதுகின்ற மை, அந்த இங்கை ஊற்றி எல்லாம் செல்லாத வாக்குகளாக மாற்றினார்கள். அப்படிப்பட்ட அராஜகமும், ஊழலும், முறைகேடும் தலைவிரித்தாடியது. அதைத் தொடர்ந்துவந்த சட்டமன்ற இடைத் தேர்தல்கள், எல்லாத் தேர்தல்களிலும் முறைகேடுதான். ஆகவே, இதற்கு அ.தி.மு.க. அரசு அன்று இராஜினாமா செய்திருக்க வேண்டுமென்று சொன்னால், ஆட்சி கலைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று சொன்னால், எத்தனை முறை கலைத்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதையெல்லாம்

மறைத்துவிட்டு, இப்போது இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்கிறார்கள். ஏன்? நல்லாட்சி, நான்காவது இடத்திலே இருக்கிற முதலமைச்சர் ஆட்சி என்ற காரணத்தாலா?

முன்னாள் முதலமைச்சர் ஒரு செய்தியைச் சொல்கிறபோது, "அரசமைப்புச் சட்டத்தில் 356–வது பிரிவைப் பயன்படுத்த வேண்டும்" என்று சொல்கிறார். ஆனால், அதே அம்மையார் சொன்னார்; 28–8–2003–ல் இந்து நாளிதழில், தினத் தந்தி நாளிதழில் வந்த செய்தி இருக்கிறது. காஷ்மீரில் முதலமைச்சர்கள் மாநாடு. 'முதலமைச்சர்கள் மாநாட்டுக்கு அலுவல் காரணமாக முதலமைச்சர் நான் செல்லவில்லை, நிதியமைச்சர் பொன்னையன் வாயிலாக இந்த அறிக்கையைக் கொடுத்தனுப்புகிறேன்; அவர் படிக்கிறார்' என்று கூறி, பொன்னையன் படிக்கிறார். அவர் அதைப் படிக்கிற நேரத்தில், அந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலே ஜெயலலிதா அவர்களின் குரலாகப் பொன்னையன் ஒலித்தது, "இந்த 356–வது பிரிவு அரசியல் சட்டத்தில் இருக்கக் கூடாது" — நிறையச் சொல்லியிருக்கிறார்கள். நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இதைச் சொல்லிவிட்டு அவர் சொன்னது—இந்த 356–வது பிரிவு என்பது வேரோடும் வேரடி மண்ணோடும் அறவே அழித்தொழிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி அந்தச் சட்டமே இருக்கக்கூடாது என்று சொல்லியவர், இன்று அந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்வது, அவருடைய பன்முகத் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அந்த அம்மையார் சொன்னார்கள், ஓர் அறிக்கையிலேகூடச் சொல்லியிருந்தார்கள்; 'எனக்குப் பன்முகம் இருக்கிறது' என்று. ஆகவே, 28–8–2003–லே ஒரு முகம், இப்போது ஒரு முகம். இது தெரிகிறது. அவர்களின் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட ஒரு பாட்டுப் பாடினார்கள்:

"அன்று வந்ததும் இதே நிலா
இன்று வந்ததும் அதே நிலா
என்றும் உள்ளது ஒரே நிலா
இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா"

அரசியல் தலைவர்கள் பார்க்கிற பார்வையில், ஒரு சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்கிற வேளையில், ஒரே நிலைப்பாடு இருக்க வேண்டுமா, வேண்டாமா? ஆனால், ஒன்று, அந்த





ஆட்சிக் காலத்தில், 2001–லேயிருந்து 2006 வரையிலான அன்றைய தமிழக ஆட்சிக் காலத்தில், எவ்வளவு கொடுமைகள்? அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பாதிப்பு; தமிழினத்தினுடைய, இந்தியாவினுடைய மூத்த தலைவராக இருக்கிற கலைஞர் கைது; அரசியல் கட்சிகளின்மீது அவதூறு வழக்கு; நாடு அலங்கோலப்பட்டது. அவ்வளவு அலங்கோல நிலையில்கூட பிரிவு 356–ஐப் பயன்படுத்த வேண்டாமென்று சொன்னவர்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் அவருக்கே இருக்கிற அரசியல் நாகரிகம். நாகரிகம் மட்டுமல்ல, அவருக்கிருக்கிற உயர்ந்த பெருந்தன்மையும், மனிதநேயப் பண்பும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதையெல்லாம் சொல்வது, அவரைப் பாராட்டுவதற்காக அல்ல. இன்றைய அரசியல் நெருக்கடி சூழ்நிலையில் தமிழகம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட நல்லாட்சி தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 9–50

ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு, வரக்கூடிய பிப்ரவரி 5 ஆம் தேதி வெளி வரவிருக்கிறது. அதில் தமிழக விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அடையக்கூடிய செய்தியாக வரும் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்களும் அந்த மகிழ்ச்சியிலே பங்குகொள்கிறோம், வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால், கடந்தகால அனுபவத்தையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1974–லே காவிரிப் பிரச்சினை துவங்கியது. நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்டது, 16 ஆண்டுகள் கழித்து. இப்போது 16 ஆண்டுகள் கழித்து தீர்ப்பு வந்திருக்கிறது. ஒருவேளை இன்னும் 16 ஆண்டுகள் ஆகுமோ என்று தெரியவில்லை. 32 ஆண்டுகள் காவிரிப் பிரச்சினை, மிக நீண்ட கொடுமை. இந்த 32 ஆண்டு காலத்தில், தமிழகம் சொல்லி மாளாத அளவிற்கு, சோதனையைத் தழுவி இருக்கிறது. இந்தச் சோதனை போதும், இனி தமிழகத்திற்குச் சோதனை வேண்டாம் என்ற அளவில், வரக்கூடிய நல்ல தீர்ப்புக்கு நாம் வடிவமைக்கிற, அதனை வரவேற்கிற அதேவேளையில், இந்தத் தீர்ப்பை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர், முத்தமிழ்

அறிஞர் கலைஞர் அவர்களும், தமிழக அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வேகம், ஜெட் வேகம் என்று சொல்வார்கள்; ஆனால், இந்த நடவடிக்கைகளில் ஜெட் வேகத்தைவிட Supersonic விமானம் என்று சொல்வார்களே, அந்த வேகத்தில் தமிழக அரசு விரைந்து செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட்டால்தான் நம்முடைய உரிமையைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீர்ப்பு வந்தவுடனேயே நடைமுறையில் இருக்கிற காவிரி நதி நீர் ஆணையம், கண்காணிப்புக் குழு போன்றவையெல்லாம் காலாவதியாகிவிடும். அவை இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. அப்படிக் காலாவதியாகிவிட்டால், அடுத்து இதை நிறைவேற்றக்கூடியது யார்? மத்திய அரசு நிறைவேற்றுமா? நான் அந்தக் கேள்விக்குள் போகவில்லை. ஆனாலும்கூட, மீண்டும் ஒரு ஆணையத்தை உருவாக்க வேண்டும். அந்த ஆணையம் என்பது இதுவரையிலே, C.R.A.- காவிரி நதி நீர் ஆணையம் இருந்ததே, அதிகாரம் இல்லாத ஆணையமாக, அப்படிப்பட்ட ஆணையமாக இருந்துவிடக்கூடாது. அது முழு அதிகாரம் உள்ள ஆணையமாக, நீதிமன்றத்திற்கு இருக்கிற அதிகாரத்தைப்போல அதிகாரம் உள்ள ஆணையமாக வருவதற்கு முதலமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும். அந்த ஆணையத்தில் இடம் பெறக்கூடியவர்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடாது. முழுவதும் நிர்வாக அலுவலில், நிர்வாகத்தில் இருக்கக்கூடிய உயர் அதிகாரிகள், மூத்த அதிகாரிகள், திறமையுள்ள நடுநிலை அதிகாரிகள், அதேபோல சட்ட வல்லுநர்கள், மேதைகள் போன்றவர்கள் அந்தக் 'குழுவிலே இடம் பெறவேண்டும். அப்படிப்பட்ட ஒரு குழுவை நியமிப்பதற்கும், அந்தக் குழுவை முழு அதிகாரம் உள்ளதாக மாற்றுவதற்கும், அந்தத் தீர்ப்பை உடனடியாக நிறைவேற்றுவதற்குமான ஆணையத்தை உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இந்த அளவிலே நிறைவேற்றப்படும் என்று சொன்னால், நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமை கட்டாயம் கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையோடு, ஒட்டுமொத்தமாக இந்த ஆணையத்திற்குப் பிறகு, அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் தமிழகத்தினுடைய உரிமையைப் பாதுகாக்கக்கூடிய ஒரு நல்ல நிலையை முதலமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, இங்கே மிக அற்புதமான ஒரு கருத்து முதலமைச்சருடைய எண்ணத்தின் வெளிப்பாடாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது, காலத்திற்கேற்றவாறு இந்திய அரசமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்று. இதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். காரணம், இந்த அரசமைப்புச் சட்டம் என்பது 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ஆம் தேதி அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டு, அதற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தலைவராகவும் மற்றும் அவரோடு சேர்ந்து 7 பேர் கொண்ட குழு — அவர்கள் எல்லாம் மேதைகள் — ஒரு நல்ல சட்டத்தை உருவாக்கி, 1949 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனாலும்கூட, அன்றைய பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவாகள் அதை உடனடியாக நடைமுறைப்படுத்தவில்லை. 1950 ஜனவரி 26 ஆம் தேதி நடைமுறைப்படுத்தினார்கள். அதற்குச் சொல்லப்படுகிற காரணம் என்னவென்று சொன்னால், 1947–லே நாம் சுதந்திரம் பெற்றாலும்கூட, சுதந்திரம் பெறுவதற்கு முன்பு, அன்றைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சுதந்திரத்திற்குப் போராடிய வேளையில், 1930–லிருந்து ஜனவரி 26 ஆம் தேதியை சுதந்திர தினமாகக் கொண்டாடி வந்தார்கள். சுதந்திரத்தினுடைய முன்னோட்டமாக, எதிர்பார்ப்பாக. அந்தவகையிலே, 1949 நவம்பரிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடுத்துவந்த ஜனவரி 26 ஆம் தேதி, 1950 ஆம் ஆண்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டது. அதை வரவேற்கிறோம். ஆனாலும்கூட, இதுவரையிலே அது 100 முறை மாற்றப்பட்டிருக்கிறது. என்ன காரணம்? அன்றைய நாட்டினுடைய கட்டமைப்பு, மக்கள் தேவைகள், மக்களுடைய பிரச்சினைகள், அன்றைய நிலவரத்தையொட்டி அந்தச் சட்டம் வடிவமைக்கப்பட்டது. ஆனால், அந்தச் சட்டத்தை வடிவமைத்து, நமக்கெல்லாம் வகுத்தளித்த அண்ணல் அம்பேத்கர் அவர்களை இந்த நேரத்திலே நாம் நினைவுகூர வேண்டும். மிகப்பெரிய மாமேதை. அவர்கள் வடித்தளித்தார்கள். அன்றைய சூழ்நிலைக்கேற்ப அது வடிவமைக்கப்பட்டது. ஆகவே, இப்போது நாங்கள் தெரிவித்துக்கொள்வது எல்லாம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்த அந்தச் சட்டத்தை ஒட்டியே, இன்றைய தேவையை உணர்ந்து, இன்றைய நிலவரத்திற்கேற்ப, அரசியல், பொருளாதார, சமூக நிலைக்கேற்ப, இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

[திரு. ஜி.கே. மணி] [2007 ஜனவரி 27

முற்பகல் 9–55

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இதை உடனடியாக மாற்றியமைபபதற்கு இந்திய அரசை வற்புறுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்கிறேன். ஏனென்றால், அது இந்திய அரசியல் சட்டமாக இருந்தாலும், இந்த அரசியல் சட்டத்தினுடைய உயிர் நாடியாக இருக்கிற சமூக நீதிக் கொள்கைக்கு வித்திட்டது தமிழகம்; தந்தை பெரியார், தொடர்ந்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் என்பதை நான் இங்கே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தமிழகம், தனித்த வரலாறும், பின்னணியும் கொண்ட அபூர்வ பூமி. இதேநேரத்தில் நம்முடைய தாய் மொழி தமிழை இந்தியாவிலே இருக்கிற 22 மொழிகளைப் போல சாதாரண மொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய மொழிக்கு பழம்பெருமையும், இலக்கண இலக்கிய வளங்களும், தொன்மையும் உண்டு. அதேநேரத்தில் செம்மொழியாக இருக்கிற தமிழுக்கு நிகராக மற்ற மொழிகளை ஒப்பிட முடியாது. அப்படித் தமிழினமும் மூத்த இனம் என்பது வரலாறு.

அதுமட்டுமல்ல; இந்தியாவிற்கு சமூக நீதியில் வழி காட்டியது தமிழ் மண்; தந்தை பெரியார். அந்த அடிப்படையிலே 1989 ஆம் ஆண்டு, தமிழகத்திலேயிருந்த சமூக நீதிக் கொள்கையை, இந்தியா முழுவதும் பரவச் செய்தவர் சமூக நீதிக் காவலர், முன்னாள் பிரதமர், திரு. வி.பி. சிங் அவர்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறோம். அவர்கள் மண்டல் குழு பரிந்துரையின் அடிப்படையிலே 27 சதவீத விழுக்காட்டை நடைமுறைப்படுத்தினார்கள். அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. ஆனால், அந்த மண்டல் சாசனம் எங்கே எழுதப்பட்டது என்பதை எண்ணிப் பார்த்தால், அந்த மண்டல் சாசனம் தமிழகத்தின் தலைநகர் சென்னையில், பெரியார் திடலில், பெரியாருடைய பேச்சுகளையும், எழுத்துகளையும் அடிப்படையாக வைத்து, பெரியார் திடலிலேயே தயாரிக்கப்பட்டது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் பெருமையோடு எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே, அதிலும் நமக்குத்தான் பெருமை. திரு. வி.பி. சிங் நிறைவேற்றினாலும்கூட அதைத் தயாரிப்பதற்குக் காரணமாக இருந்ததும் தமிழ் மண்.

இப்படி வேலைவாய்ப்பிலே, நிர்வாகப் பணியிலே 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் பெற்றாலும் மத்திய அரசுக்குச் சொந்தமான கல்வி



2007 ஜனவரி 27] [திரு. ஜி.கே. மணி]

நிறுவனங்களிலே இட ஒதுக்கீடு இல்லை. அதைத்தான், மத்திய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைசசர் திரு. அர்ஜுன் சிங் அவர்களும், அவருக்கு உறுதுணையாக பிரதமர் அவர்களும், அன்னை சோனியா காந்தி அவர்களும் இருந்து, இப்போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சட்டமாக்கி இருக்கிறார்கள், வரவேற்கிறோம். ஆனால், இந்தச் சட்டம் வந்ததற்கு யார் காரணம் என்பதை எண்ணிப் பார்க்கிற வேளையில், இந்தச் சட்டம் வந்ததற்குத் தமிழகத்திற்குத்தான் பெருமை. அதற்கு முன்னோடியாக இருந்து, சட்டமாக்குவதற்கு முழுமுதற் காரணமாக இருந்தவர்கள், சமூக நீதிக்குப் பெரியார் வழியிலே போராடி, பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும (மேசையைத் தட்டும் ஒலி), பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்களும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த இரு பெரும் தலைவர்கள் முன்னோடிகளாக இருந்தார்கள். மருத்துவர் அய்யா அவர்கள், நாட்டினுடைய எல்லா மாநிலங்களுக்கும் சென்று, எல்லா மாநிலங்களிலும் கருத்து ஒற்றுமையை உருவாக்கி, டெல்லியிலே கருத்தரங்குகள், மாநாடுகள் வாயிலாக எடுத்துச்சொன்னார்கள். எடுத்துச்சொல்லி, நிறைவேறுமா என்ற கேள்விக் குறி இருந்த நேரத்தில், இதை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று மத்திய அரசுக்கு அழுத்தமாகச் சொன்னவர், வற்புறுத்திச் சொன்னவர், நிறைவேற்றுவதற்குக் காரணமாக இருந்தவர் சமூக நீதிப் போராளி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை மீண்டும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து பாருங்கள்; சமூக நீதிக்கு வித்திட்டதும், தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருப்பதும் தமிழ் மண்தான்.

அதற்குப் பிறகு, இப்போது தமிழ்நாட்டில் நிலவிக்கொண்டு இருக்கின்ற 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு மிகப் பெரிய சோதனை ஏற்பட்டுள்ளது. நீதிமன்றம் தலையிடுகிறது. இந்தச் சோதனை ஏற்பட்ட நேரத்தில், 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டு இருந்தாலும்கூட, மறு ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்ற நிலையை நாம் பார்த்து வேதனையுறுகிறோம். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலை உயரவேண்டும் என்று சொன்னால், இந்தச் சமூக நீதிக் கொள்கையை நாம் மேலும் நிலைபெறச் செய்யவேண்டும் என்ற அந்த அடிப்படையில் எங்களுடைய சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா

அவர்கள் ஒரு நிபுணர் குழுவை அமைத்து அவர்கள் மூலமாகப் பேசி ஓர் அறிக்கையைத் தயாரித்தார்கள். அந்த அறிக்கை முழு வடிவம் பெற்றது இந்த மாதம், ஜனவரி, 18 ஆம் தேதி. இந்த அறிக்கையை 19, 20-ல் வெளியிடலாம் என்று எண்ணியபொழுது, ஆளுநர் உரை வரவிருக்கிறது, முதலமைச்சர் அவர்கள் கட்டாயம் இதைப் பற்றிச சொல்வார்கள். 69 விழுக்காட்டுக்கு என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்த்துவிட்டு அவரோடு கலந்தாலோசித்து இந்த அறிக்கையை வெளியிடலாம் என்று மருத்துவர் அய்யா அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால், 20 ஆம் தேதி ஆளுநர் உரையைப் பார்த்து நாங்கள் எல்லாம் ஆச்சரியமுற்றோம், அகமகிழ்ந்தோம். என்ன காரணம் என்று சொன்னால், அய்யா அவர்கள் தயாரித்து வைத்திருந்த அறிக்கையின் மறு வடிவமாகவே இந்த ஆளுநர் உரை அமைந்திருந்தது என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-00*

பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்கள் எல்லாம் கல்வியிலேயும், வேலைவாய்ப்பிலேயும், பொருளாதாரத்திலேயும் இந்த அளவிற்கு முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் முதலமைச்சருக்கு இருக்கின்ற காரணத்தினாலேதான் இந்தச் சமூக நீதி பற்றி இந்த ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆளுநர் உரையில் சொல்லப்பட்டவாறு உடனடியாக இந்தச் சட்டம், புதிய சட்டமாக வடிவமைப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அன்றுகூட அம்பேத்கர் அவர்கள் இந்தச் சட்டத்தை வடித்த நேரத்தில் சொன்னதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அவர் வார்த்தையிலே சொல்லவேண்டும் என்று சொன்னால், இந்தச் சட்டத்தை வடித்த சிற்பியான அம்பேத்கர் அவர்களின் வார்த்தைகளில் கூறுவது என்றால், அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆணிவேர், அதிகாரம், இறையாண்மை ஆகியவை மக்களிடமே இருக்கவேண்டும் என்ற அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரின் விருப்பத்திற்கேற்ப அரசியல் சட்டத்தின் முகப்புரை அமைந்திருப்பதாக அம்பேத்கர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆக, அரசியல் சட்டத்தின் வேராகவும்,





அதிகாரமாகவும் இருப்பவர்கள் மக்களே என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதோடு அரசியல் சட்டத்தின் தோற்றுவாயிலே மேலும் சொல்லியிருப்பது, 'பாரத நாட்டை மதச்சார்பற்ற, சமதர்மக் குடியரசாக அமைப்பதற்கு இந்திய மக்களாகிய நாங்கள் உறுதிபூண்டு, இந்திய மக்கள் அனைவருக்கும், சமூக, பொருளாதார, அரசியல் நீதி ஆகியவற்றை அளிப்பதற்கும், எங்களிடையே எண்ண, எழுத, எடுத்துச்சொல்ல, நம்பிக்கை வைக்க, வழிபாடு செய்ய சுதந்திரம் ஆகியவற்றை அளிப்பதற்கும், எங்களது அரசியல் நிர்ணய சபையில் 1949 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 26 ஆம் நாள் இந்த அரசியல் சாசனத்தை உருவாக்கி ஏற்றுக் கொண்டு, எங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்' என்ற சொற்கள் எவ்வளவு பொருட்செறிவுடையன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த வடிவத்தில் இந்தச் சட்டம் வரவேண்டும் என்பதுதான் மக்களுடைய ஆசை.

சமூக நீதியின் புதிய வடிவத்தைத் தருவதற்கான உரிமையும், அதிகாரமும் படைத்தவர்கள் இந்தியக் குடிமக்களே. ஏனெனில், நாட்டின் இறையாண்மையின் ஊற்றுக் கண் மக்கள். உண்மை அப்படியிருக்க அரசியல் சட்டம் வரையறுத்துள்ளபடி அதனதன் வரம்புக்குட்பட்டு இயங்க வேண்டிய உயர்நிலை அமைப்புகளில் ஒன்றான நீதித் துறை அதன் பொறுப்பிற்கேற்ப அரசியல் சட்டத்திற்கு விளக்கம் அளிப்பதும், அதோடுகூட சட்ட ஆட்சியைத் துடிப்புடன் செயல்படுவதற்கான யோசனைகளைக் கூறுவதுடன் நிறுத்த வேண்டுமேயொழிய, அரசியல் சட்டத்தில் கூறப்படாத அதிகாரங்களையும், உரிமைகளையும் எடுத்துக்கொள்வது ஜனநாயகத்தின் ஆரோக்கியத்திற்கு உகந்ததாக இருக்க முடியாது. ஆகவே, ஜீவாதாரப் பிரச்சினையான சமூக நீதிக் கொள்கையையும் அதற்கு உரிய இடத்தையும் நிர்ணயிக்கவேண்டியது மக்களே. அந்த முறையில் இந்தியக் குடிமக்களின் உணர்வுகளை ஒருங்கிணைத்து, அந்த அடிப்படையில் புதிய அரசியல் நிர்ணய சபை உருவாக்கி, அதன்மூலம் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆகவே, அந்த அடிப்படையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களே புதிய அரசியல் சட்டம் வருவதற்கு எல்லாவகையிலும் ஆலோசனை வழங்க வேண்டும்.' உங்கள் சமூக நீதிக் கொள்கையின் அடிப்படையில் அந்தச் சட்டம் வருவதற்கு அடித்தளம் இடுவதற்குத் தாங்கள் காரணமாக அமையவேண்டும், அந்த முயற்சியினை எடுக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2007 ஜனவரி 27

முற்பகல் 10-05

இவ்வாறு ஒட்டுமொத்தமாக, இந்த ஆளுநர் உரையில் பல்வேறு நல்ல அம்சங்கள், வரவேற்கக்கூடிய அம்சங்கள் இடம் பெற்றிருப்பதை நாம் பார்க்கிறோம். நிறையச் சொல்லிக்கொண்டே போகலாம். இந்திய அரசமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும்; காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு வர இருப்பதற்கு உண்டான நடவடிக்கை; தொடர்ந்து நிறைய உள்ளன. வரவேற்கிறோம். வரவேற்றுப் பேசினால் நேரம் போதாது; பிறகு சபாநாயகர் மணியடித்து விடுவார்.

இதிலே இன்னொன்று மிக முக்கியமானது. தமிழகத்தினுடைய, சென்னை உயர் நீதிமன்றத்தில் அலுவல் மொழியாக, வாதாடுதல், தீர்ப்புரைத்தல் மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்ற உயர்ந்த நிலையை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் எடுத்திருப்பது வரவேற்கக்கூடியது, நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், இப்படி வரவேற்கிற இந்தச் சூழ்நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் என்ன நிலவரம் என்று சொன்னால், உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் எண்ணிக்கை 49 இருக்க வேண்டும். இருப்பதோ 45. ஆனால், இந்த 45 நீதிபதிகளிலேயும் முதன்மை நீதிபதிகள், மூத்த நீதிபதிகளுக்குத்தான் முழு அதிகாரம். அந்த மூத்த நீதிபதிகளாக இருக்கிற 5 பேர், தலைமை நீதிபதி உட்பட, யார் என்று சொன்னால், தமிழ்நாட்டைச் சார்ந்தவர் ஒருவர்கூட இல்லை. இந்த 5 பேரும் வெளி மாநிலங்களைச் சார்ந்தவர்கள். ஆனால், இதுவரை உயர் நீதிமன்ற வரலாற்றில், சென்னையில் இப்படி ஒரு நிலையில்லை. இதைப்போல மற்ற எந்த உயர் நீதிமன்றத்திலும் அந்த நிலையில்லை. தலைமை நீதிபதி வேறு மாநிலத்தைச் சார்ந்தவராக இருக்கலாம். ஆனால், மூத்த நீதிபதிகள் அந்த மாநிலத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். இங்கே 5 பேர் மூத்த நீதிபதிகளாக இருக்கிறார்கள். என்ன விந்தையென்று சொன்னால், காலியாக இருக்கக்கூடிய இடங்களுக்கு 4 நீதிபதிகளை நியமிக்கிற அந்தக் குழுவில் தலைமை நீதிபதியும் அவரோடு சேர்ந்து 2 நீதிபதிகளும் இடம் பெறுவார்கள். அந்த இடத்திலே இப்பொழுது இருப்பவர்களும் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் இல்லை, வட நாட்டைச் சார்ந்த இருவர். இன்னும் ஒரு வாரத்திலே ஒருவர் மாறுதலாகப் போகிறார். சரி, அவர் மாறுதலாகிப் போய் அந்த இடத்திற்காவது தமிழர் நீதிபதியாக வருவாரா என்றால், இல்லை. அவரும் தமிழ்நாட்டைச் சாராத ஒருவர். ஆகவே, இப்படி பிற மாநிலங்களைச் சேர்ந்த 5 மூத்த நீதிபதிகள், அந்தத் தேர்வுக் குழுவிலே இருப்பவர்களும் பிற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் என்றால் எப்படித்



2007 ஜனவரி 27] [திரு. ஜி.கே. மணி]

தமிழ்நாட்டு நீதிபதிகள் அதிலே தேர்வு பெறுவதற்கு வாய்ப்பிருக்கும்? அப்படி வாய்ப்பிருந்தாலும்கூட, இந்த மூத்த 5 நீதிபதிகள் இருக்கிற வேளையில், தமிழை நடைமுறைப்படுத்துவது எந்த வகையிலே சாத்தியப்படும்? ஆகவே, இதற்குரிய வழிவகைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளையும் இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இதுவரையிலே முன்னாள் முதலமைச்சர் செய்த அந்த அநீதியைப் போக்கி, முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே அரியலூர் மாவட்டத்தைத் தாங்கள் பிரித்தீர்கள். நாங்களெல்லாம் பெரிதும் பாராட்டினோம். அந்த மாவட்டத்து மக்கள் முழுவதும் வந்து நன்றி சொன்னார்கள். ஆனால், அப்படிப் பிரிக்கப்பட்ட அந்த மாவட்டம் இன்னும் செயல்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதலாக எல்லா அலுவலகங்களும் அங்கே வருவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய நிலைமை மிக மோசமாக இருந்தது. உள்ளபடியே விவசாயி வாழ்வதா, சாவதா என்ற கேள்வியில் இருந்த நேரத்தில் விவசாயிகளுடைய வாட்டத்தைப் போக்குகின்ற வகையில், அவர்கள் வயிற்றில் பால் வார்க்கின்ற வகையில், விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்தீர்கள். அப்படி கடனைத் தள்ளுபடி செய்யவில்லையென்றால் நிறையப் பேர் இந்த வருடம் என்ன ஆகியிருப்பார்களோ, தெரியவில்லை. விவசாயிகளிடத்தில் அப்படிப்பட்ட நிலை. உழவர் சந்தை கொண்டு வந்த பெருமையும் தங்களுக்கே. அதை நாங்கள் தொடர்ந்து பாராட்டினோம். கடந்த கூட்டத்தில்கூடச் சொன்னோம்; எப்படி வந்தது என்கின்ற காரண விளக்கத்தோடுச் சொன்னோம்.

விவசாயிகளுக்குக் கரும்பு விலையை நிர்ணயம் செய்கிறீர்கள். வரவேற்கிறோம். கூடுதல் விலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல நெல் கொள்முதல் விலை. அதையும் ஏற்றுக்கொள்கிறோம். அது டெல்டா பகுதிகளில் மட்டுமே இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் வேண்டும். தமிழக வரலாற்றில் ஏரிகள் நிறைந்த மாவட்டம் காஞ்சிபுரம் என்று சொல்கிறார்கள். அங்கு நிறைய நெல் விளைகிறது. மற்ற மாவட்டங்களிலும் நெல் விளைகிறது. அங்கெல்லாம் நெல் கொள்முதல்

செய்யக்கூடிய நிலை இல்லை. அங்கே இருக்கிற விவசாயிகள் நிலைமை என்ன? ஆகவே, அந்தப் பகுதிகளிலேயும் நெல் கொள்முதல் செய்வதற்கு வழிவகுக்க வேண்டும். அதைப்போல, பருத்தி, மரவள்ளிக் கிழங்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற முறை ஆட்சியிலே அப்படித்தான் டெல்டா பகுதிகளில் மட்டும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. புதிதாக, தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே ஆங்காங்கே விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்று சொன்னால், திறக்க வேண்டுமென்று அரசு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஆணை பிறப்பித்திருக்கிறது. சென்ற வாரம்கூட, மாவட்ட விநியோக அதிகாரிகள் அதாவது, D.S.O.-க்களை அழைத்து, எங்கெங்கெல்லாம் நெல் அதிகமாக உற்பத்திச் செய்யப்படுகிறதோ, அங்கெல்லாம் நேரடிக் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். காஞ்சிபுரத்தில்கூட இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் அனைத்து இடங்களையும் பார்த்து வந்திருக்கிறோம். உடனே திறக்கவிருக்கிறோம்.

முற்பகல் 10–10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலுக்கு நனறி. வரவேற்கிறோம். அதை எல்லா மாவட்டங்களிலும், விரைவாகப் பல பகுதிகளிலும் திறக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். அதேபோல, மரவள்ளிக் கிழங்கு, பருத்தி, இப்படி விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய எல்லாப் பொருட்களுக்கும் உரிய விலை கிடைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நுழைவுத் தேர்வை இரத்து செய்திருக்கிறீர்கள், தொடர்ந்து வரவேற்றுக் கொண்டிருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால், 12 ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கும், நுழைவுத் தேர்வு இருந்தால் அதைச் சுலபமாகத் தட்டிப் பறிப்பதற்குமாக சில பள்ளிகள் அதற்குண்டான தேர்வு முறையை வைத்திருக்கிறார்கள். அங்கே தேர்விலே முறைகேடுகள் நடப்பதாகவும் சொல்கிறார்கள். அது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட முறைகேடு நடக்காமல் இருப்பதற்காக, அப்படிப்பட்ட பள்ளிகள் இருக்கின்றன என்று கருதப்படுமேயானால், அந்தப் பள்ளிகளின் தேர்வு மையத்தில் அந்தப் பள்ளி மாணவர்களையே உட்கார வைக்காமல், அருகிலே இருக்கிற பள்ளிகளின் மாணவர்களையும் கலந்து உட்கார வைத்தால் அப்படிப்பட்ட முறைகேடுகள் நடக்காமல் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினை குறித்து ஒரு விரிவான விவாதம் செய்து நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் நானும் நம்முடைய துறை அதிகாரிகளிடத்திலே விரிவாகக் கலந்து பேசியிருக்கிறோம். நுழைவுத் தேர்வு இந்த ஆண்டிலிருந்து இல்லாத சூழ்நிலையில், அரசாங்கத்தினுடைய சார்பில் நடைபெறக்கூடிய Government Examinations முறையான வகையிலே, மக்களுடைய நம்பிக்கையைப் பெறக்கூடிய வகையிலே, சிறப்பான வகையிலே நடைபெற வேண்டும் என்பதற்குத் தெளிவான கருத்துரைகளை நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் நானும் அவர்களிடம் வழங்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல இப்போதும் நடைமுறையிலே இருக்கக்கூடியது என்னவென்று சொன்னால், அந்தத் தேர்வு நடக்கக்கூடிய பள்ளியிலே அந்தப் பள்ளி மாணவர்கள் மாத்திரமல்லாமல், பக்கத்திலே இருக்கக்கூடிய clubbing schools என்று சொல்லக்கூடிய அருகில் இருக்கக்கூடிய பள்ளி மாணவர்களும் வந்துதான் இப்போது எழுதக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தொடர்ந்து அந்த முறை கடைப்பிடிக்கப்படும். தேர்வு முறையைப் பொறுத்தமட்டிலே எந்தவிதமான சந்தேகத்திற்கும் அல்லது குற்றச்சாட்டிற்கும் இடமில்லாத வகையிலே தேர்வு நடத்த, இந்த முறை நுழைவுத் தேர்வு இல்லாதபொழுது, மக்களுடைய முழு நம்பிக்கையும் நம்முடைய அரசாங்கம் நடத்துகிற பிளஸ்-2 தேர்வை எதிர்நோக்கியிருக்கக்கூடிய சூழ்நிலையில், தேர்வு மையத்திலே வரக்கூடிய, Invigilators, அதைப்போல அங்கிருக்கக்கூடிய Supervisors அவர்கள் எல்லோரையும் எப்படி மாற்ற முடியும் என்பதையெல்லாம்

குறித்து விரிவான ஆலோசனைகள் நடத்தியிருக்கிறோம். மிகச் சிறப்பான வகையிலே, முறையான வகையிலே இந்த முறை அரசாங்கத்தினுடைய தேர்வுகள் நடத்தப்படுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. தொடர்ந்து இந்த ஆண்டும் நேற்றைய முன்தினம் 25 மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளை அனைத்து அரசியல் கட்சிகளும் கடைப்பிடித்தன. அவர்களை நினைவுகூர்ந்து, நம்முடைய முன்னோர் வழிகளைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த வேளையிலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், தமிழுக்காக வாழ்ந்து மறைந்த மறைமலையடிகள் அவர்களது நினைவாக அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்ற கோரிக்கை மேலோங்கியிருக்கிறது. ஆகவே, அஞ்சல் தலை வெளியிட்டு மறைமலையடிகளுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே நான் முன்வைக்கிறேன்.

அதைப்போல, 1975 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலே டெல்லியிலே திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது. நம்முடைய முதலமைச்சர் அன்றைய நேரத்திலே அந்தத் திருவள்ளுவர் சிலை அமைப்பு விழாவிற்குத் தலைமையேற்றார்கள். அன்றைய மத்திய அமைச்சராக இருந்த பெருமைக்குரிய சி. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலை வகிக்க, அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த பக்ருதீன் அலி அகமது அவர்கள் அந்தத் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார்கள். நாங்கள் எல்லாம் தமிழ்ச் சங்க விழாவிற்கு, பல முறை சென்றோம். அங்கே பார்க்கின்ற நேரத்தில், டெல்லியில் மத்திய அரசு அலுவலகத்திற்கு முன்பாக திருவள்ளுவர் சிலை இருக்கிறது. அதற்கு முன்பே ஒரு சுற்றுச் சுவர், மதில் சுவர் உயரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டியே கழிப்பிடம் இருக்கிறது; மறைத்துக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அங்கே செடி கொடிகள் எல்லாம், முட்புதர்கள் எல்லாம் வளர்ந்து மறைத்துக் கொண்டிருக்கிற நிலை. டெல்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பிலே அவர்கள் வேண்டுகோள் வைத்தார்கள், இந்த நிலையைப் போக்கிட முதலமைச்சர் அவர்களிடத்திலே தாங்கள் எடுத்துச் சொல்லுங்கள் என்று. அந்தச் சிலையை நிறுவியவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சிலை நிறுவிய குழுவிலே, முன்பு அமைச்சராக இருந்த பெருமதிப்பிற்குரிய



பெரியவர் க. இராசாராம் அவர்களும் இடம்பெற்றிருந்தார்கள். அவர்களும், மற்றவர்களும் இந்தச் சிலையைப் பாதுகாக்க, திருவள்ளுவர் சிலையை தமிழ்ச் சங்க வளாகத்திலே அமைக்கலாம் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதையும் நிறுவி பெருமை சேர்க்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல டெல்லியிலே வாழக்கூடிய தமிழர்கள் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தமிழ்ப் பாடங்கள் இல்லை என்ற ஓர் ஏக்கம் இருக்கிறது. ஆகவே, டெல்லி பள்ளிக்கூடங்களிலே தமிழ்ப் பாடங்களை நம்முடைய குழந்தைகள் படிப்பதற்கும்—உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் இன்று தமிழ்ப் பற்று இருந்தாலும்கூட, அவர்கள் படிப்பதற்கே வாய்ப்பில்லாத நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது—ஆகவே, தமிழர்கள் வாழக்கூடிய நாடுகளில் தமிழை எழுதப் படிக்க, கற்றுக்கொள்ளக்கூடிய வகையில் புத்தகங்களை வழங்க வேண்டும். அங்கே நூலகங்கள், மற்ற நிலையில் அவர்கள் அந்தக் கல்வி நிலையங்களை அமைத்துக்கொள்வதாகச் சொல்கிறார்கள். அதையும் தங்கள் காலத்திலே விட்டாலொழிய வேறு காலத்தில் செய்ய வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதற்கும் நீங்கள் முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் நிறையப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்; தமிழுக்கு நிறையச் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இந்தத் திருக்குறள் தேசிய நூலாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. பல்வேறு முனைகளிலிருந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தி, அதையும் தங்கள் காலத்திலேதான் செய்ய முடியும். ஆகவே, அந்த வேண்டுகோளையும் இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். காவிரி, தருமபுரி மாவட்டத்தின் வழியாகத்தான் நுழைகிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நிலத்தடி நீரிலே fluoride நச்சுத் தன்மை இருக்கிறது. காமராஜர் காலத்திலே போடப்பட்ட திட்டம் என்று சொல்கிறார்கள்; இதுவரையும் நிறைவேறவில்லை. பல போராட்டங்கள், வாக்குறுதிகள்; ஆனால், ஒரு பெருமையுண்டு.

[திரு. ஜி.கே. மணி] [2007 ஜனவரி 27

கடந்த முறை தாங்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேதான் அந்தப் பணியைத் தொடங்கினீர்கள். 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்து முதற்கட்டப் பணியைத் தொடங்கினீர்கள். பொக்ரான் அணுகுண்டு வெடித்த காரணத்தால், ஜப்பான் நாட்டின் நிதி நிறுத்தப்பட்டது; இத்திட்டம் நின்றுபோய்விட்டது. ஆனால், இன்று எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். காவிரியிலிருந்து நீர் இராமநாதபுரத்திற்குப் போகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். எவ்வளவு தூரம் போகிறது! இராமநாதபுரம் வறண்ட மாவட்டம், குடிநீர் இல்லாத மாவட்டம், அங்கு தண்ணீர் வழங்குவதை நாங்கள் வரவேற்கிறோம்; பெருமைப்படுகிறோம். ஆனால், காவிரி நுழைகின்ற மாவட்டத்தில் காவிரித் தண்ணீர் கிடைக்கவில்லையே! நிலத்தடி நீரில் Fluoride நச்சுத் தன்மையிருந்தும் கிடைக்கவில்லையே! ஆகவே, ஜப்பான் நிதியை விரைவில் பெற்றால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லையென்று சொன்னாலும்கூட, மாநில அரசின் நிதியிலாவது, மத்திய அரசிடம் பெற்றாவது இந்த ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்கிறேன். கடந்த ஆட்சியில் நாங்கள் கேட்டோம், நடக்கவில்லை. நடக்கவில்லையென்பதால், அந்த ஆட்சியை எதிர்த்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, என்னுடைய பெயரில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தேன். அப்போது அரசின் சார்பிலே சொல்லப்பட்ட பதில், படிப்படியாக ஆறு ஆண்டுகளில் நிறைவேற்றித் தருகிறோம் என்று சொன்னார்கள். ஐந்து ஆண்டுகள் போய்விட்டன. இப்போது ஆறாவது ஆண்டு நம்முடைய முதல்வரின் நல்ல ஆட்சி. அவர்கள் படிப்படியாக நிறைவேற்றித் தரவில்லை. நீங்கள் முழுமையாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மக்கள் தொகை, போக்குவரத்து நெரிசல் மிக்க நம்முடைய சென்னையிலே, இந்த மெட்ரோ இரயில் தேவை. நாங்கள் இந்த மெட்ரோ இரயில் வேண்டுமென்று கடந்த ஐந்து ஆண்டுகளாக வாதாடினோம். ஆனால், அன்றைய முதலமைச்சர் மெட்ரோ இரயில் முடியவே முடியாது, மோனோ இரயில்தான் என்று சொன்னார். எவ்வளவோ கேட்டோம், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில். அது கிடைக்காத காரணத்தால், உயர் நீதிமன்றத்திற்குச் சென்று நாங்கள் தடையாணை பெற்றோம். மோனோ இரயில் திட்டம் கூடாது என்று உயர் நீதிமன்றத்திலே தடை விதிக்கப்பட்டது. இப்போது மெட்ரோ இரயில் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, மனதார



2007 ஜனவரி 27] [திரு. ஜி.கே. மணி]

அதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம், அந்தத் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. போக்குவரத்துத் துறை ஊழியர்கள், பணியாளர்களெல்லாம் ஒட்டுமொத்தமாக நம்முடைய ஆட்சியை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலேயும் சரி, இப்போதும் முழுமையாக நம்பிக் கொண்டிருப்பது — கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக மாற்றினார்கள். அது ஆறு ஆண்டுகளாகப் போய்விட்டது — ஆனால், தங்கள் காலத்தில் அந்தப் பேச்சுவார்த்தைக் காலம் மீண்டும் ஐந்து ஆண்டுகளிலிருந்து, ஆறு ஆண்டுகளிலிருந்து, மூன்று ஆண்டுகளாக வரவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

பிறகு எல்லோருக்கும் பொங்கல் போனஸ்; எந்த போனசும் இல்லையென்று கடந்த ஆட்சியிலே சொன்னார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்த உடனே எல்லோருக்கும் போனஸ் வழங்கி மகிழச் செய்தீர்கள். அரசு ஊழியர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி. ஆனால், இந்தக் கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு மட்டும் இல்லை. எல்லாத் துறைக்கும் வழங்கினீர்கள். கூட்டுறவுத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு போனஸே வழங்கப்படவில்லை என்ற குறை மேலோங்கியிருக்கிறது. அதிலேயும் பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்தக் கூட்டுறவுத் துறையின் நியாய விலைக் கடைகளில் பணியாற்றக்கூடிய விற்பனையாளர்கள், எடையாளர்கள் அவர்களுக்கெல்லாம் சம்பளம் மிக குறைவு; ரூ.2,200, ரூ.1,150 தான் சம்பளம். இவர்களுக்கு போனஸ் வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்ற அதேவேளையில், இவர்களுக்கு ஊதிய உயர்வும் வழங்கவேண்டும். இதே பணியைச் செய்யக்கூடியவர்கள், விற்பனை, எடை போடுபவர்கள், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றக்கூடியவர்களுக்கு ரூ.7,000 சம்பளம். இதே பணித் தன்மைதான், இதே நேரம் தான்; அவர்களுக்கு ரூ.7,000. துறை மாறியிருந்தாலும்கூட, அவர்களுடைய வாழ்க்கை நிலையை, அவல நிலையை எண்ணிப்பார்த்து,– இந்த ரூ.2,200 சம்பளத்திலே குடும்பம் நடத்தமுடியாது; ரூ.1,150 சம்பளத்திலே குடும்பம் நடத்த முடியாது. அதை எண்ணிப்பார்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தாங்கள் இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு இந்த ஊராட்சிப் பணியாளர்களே நிறையப் பேர் இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றி, நிலைமைகளையெல்லாம் அறிந்தார்கள். அவ்ர்களிடத்திலேயும் கோரிக்கை வைத்தார்கள், அங்கே இருந்த ஊராட்சிப் பணியாளர்கள். அதைப்போல இந்தத் தண்ணீர்த் தொட்டி பராமரிப்பாளர்கள். அவர்களுக்கு சம்பளம் மிக குறைவு. அவர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–20*

பிறகு காங்கிரஸ் கட்சியின் கொறடாவாக இருக்கிற என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையை அரசுக்குச் சொன்னார்கள். உடனடியாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் சென்று ஆய்வு செய்த பின்னர், வறுமைக்கோட்டிற்குக்கீழே இருப்பவர்களுடைய பட்டியலை முறையாகத் தயாரிக்க வேண்டுமென்ற கட்டளையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய தளபதி அவர்களும் பிறபபித்தார்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆண்டிப்பட்டியிலே நாம் பார்த்தோம்; விகிதாசாரம் 80%-லிருந்து 20%-க்கு வந்திருக்கிறது. இதை மிகவும் வரவேற்கிறோம். ஆனாலும், இன்னொரு நடைமுறையை நான் சொல்கிறேன். பல்வேறு மாவட்டங்களில்—ஏனென்றால், நான் ஆதாரத்தோடுகூட மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே கொடுக்கவிருக்கிறேன்—அந்த வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்பவர்களுடைய பட்டியலைத் தயாரிக்கின்றவேளையில், ஒருசிலர் பட்டியலைக் கொடுத்து, இதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தப் பட்டியல் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், உள்ளபடியே வறுமைக்கோட்டிற்குக்கீழே இருப்பவர்கள், வறுமையிலிருந்து விடுபடவேண்டும்; பொருளாதாரத்திலே மேலே வரவேண்டும் என்று சொன்னால், உண்மையானவர்களின் பட்டியலை முறையாகத் தயாரிக்க வேண்டும். அதை இந்த அரசின் கடமையாகக் கருத வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஒருசில கோரிக்கைகளைச் சொல்லி, சீக்கிரம் உரையை முடித்துக்கொள்கிறேன். கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிலே கடன் வாங்கியவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகள். எல்லோரும் ரூபாய் 25





ஆயிரம், 10 ஆயிரம், 30 ஆயிரம் என்று இப்படித்தான் கடன் வாங்கியிருக்கிறார்கள். எல்லோரையும் பார்த்தீர்களென்றால், 15 வருடங்கள், 20 வருடங்கள் கட்டமுடியாமல் எல்லோரும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் கடன் தள்ளுபடி என்று சொன்னவுடனே, எல்லோரும் தலை தூக்கிவிட்டார்கள். பெண்கள் எல்லோரும், முதலமைச்சரைப் பார்ப்பதற்காக வந்தார்கள். நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சரைத்தான் பார்த்துவிட்டுப் போனோம்; முதலமைச்சரைப் பார்க்கமுடியவில்லை என்று சொன்னார்கள் பல மாவட்டங்களிலே. அவர்களுடைய கடன் தொகை ஒன்றும் அதிகமாக இல்லை. ஆகவே, அந்தக் குறையைப் போக்கக்கூடிய வகையில், தாலுகா அளவிலான அந்தக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களிலே கடன் பெற்றவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, முதியோர் உதவித் தொகையை 200 ரூபாயிலிருந்து, 400 ரூபாயாக உயர்த்தியிருப்பதால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் எல்லோரும். அது கிடைப்பதிலே சற்றுத் தயக்கம் இருக்கிறது. எல்லோரும் மனு கொடுக்கிறார்கள்; சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோரும்கூட மனு கொடுக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்திலேகூட, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள்கூட, பல பேருக்குப் பரிந்துரை செய்தார்கள். அங்கேயுள்ள கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர் போன்ற அதிகாரிகள் சென்று, இதெல்லாம் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அமைச்சர் சொன்னதற்கே கிடைக்கவில்லையே என்று சொல்லி எல்லோரும் வந்து நிற்கிறார்கள். அதிலே அவர்கள் சொல்கிற காரணம் என்னவென்று சொன்னால், கிராம நிர்வாக அதிகாரிகள் பலபேர், இப்போது பணி நீக்கம் செய்யப்படக்கூடிய அளவிற்கு, 'உங்கள் காலத்திலே கொடுக்கப்பட்ட பணத்தை நீங்கள் திருப்பிச் செலுத்தவேண்டும்' என்று கூறி சேலம் மாவட்டத்திலே, மேட்டூர் போன்ற பல பகுதிகளிலே அவர்களிடம் recovery போட்டு, V.A.O. எல்லோரும், எங்களால் 1 இலட்சம், 1½ இலட்சம், 2 இலட்சம் ரூபாய் கட்டமுடியாது என்று சொல்லி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலே அருள்கூர்ந்து கவனத்தைச் செலுத்தவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றாகச் சொன்னீர்கள்; வாரிசு இருந்தாலும் விட்டுவிட்டு வேலைக்குப் போய்விடுகிறான்; வெளி மாநிலத்திற்குச் சென்று, 6 மாதங்கள், 3 மாதங்கள் வரை வருவதில்லை; அப்படிப்பட்ட

குடும்பங்களுக்கும் வழங்கலாம் என்ற நல்ல யோசனையைச் சொன்னீர்கள். ஆனால், நடைமுறையிலே சிக்கல் இருக்கிறது. அந்த நடைமுறைச் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்று நான் உங்களை அனபோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இந்த வேலையில்லாத பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதிவுமூப்பு அடிப்படையிலே பணி நியமனம் அளிப்பதை வரவேற்கிறோம்; கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது, நன்றி பொருளாதாரம், வரலாறு உட்பட எல்லாப் பாடப் பிரிவு ஆசிரியர்களையும், நியமிக்கவேண்டும். பள்ளியிலே இடமில்லை என்று சொன்னால், விடுதிக் காப்பாளர் பணியிடத்திலேகூட அவர்களை நியமனம் செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அரசுக் கல்லூரி, சட்டக் கல்லூரிகளில் உள்ள கணினி ஆசிரியர்கள். பள்ளிகளிலே இருக்கிற கணினி ஆசிரியர்களுக்கு வாய்ப்பு அளித்தீர்கள். கல்லூரிகளிலே இருக்கிற கணினி ஆசிரியர்களுக்கும் நீங்கள் தொகுப்பூதியத்தை மாற்றி, அதைக் காலமுறை ஊதியமாக மாற்ற வேண்டும்; அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்கிறேன்.

அடுத்து, எல்லோரும் எதிர்பார்ப்பது நம்முடைய காவல் துறை; காவல் துறையிலே இருப்பவர்களுடைய கோரிக்கையை ஏற்று நீங்கள் குழு அமைத்திருக்கிறீர்கள். வரவேற்கிறோம்; மிகவும் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, காவலர்கள் நீண்ட காலமாகப் பதவியிலே இருந்தாலும்கூட, தகுதி அடிப்படையிலே— என்னிடம் நிறைய குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசுவதற்கு நேரமில்லை—அவர்களுக்கு ஊதிய உயர்வு, 8, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது பதவி உயர்வு தேவை. ஏனென்றால், பணித் தன்மை கடுமையானது; சம்பளம் குறைவு. இதையெல்லாம் கவனத்திலேகொண்டு, அந்தக் காவல் துறையிலே உள்ளவர்களின் முழுக் கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இட ஒதுக்கீடு என்பது மிக முக்கியமான பிரச்சினை. இதில் கலைஞர் அவர்களுக்குத்தான் பெருமையிருக்கிறது. சிறுபான்மையினர் என்று சொல்லக்கூடிய இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் இட ஒதுக்கீடு இல்லை. நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். 'மாண்புமிகு முதலமைச்சரிடம் கொஞ்சம் சொல்லுங்கள். சீக்கிரம் நடைமுறைப்படுத்த வேண்டும்' என்று அவர்கள் சொல்கிறார்கள். அந்த சிறுபான்மையினர், இஸ்லாமியர்,





கிறிஸ்துவர் இட ஒதுக்கீட்டை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிற அதேவேளையில், இன்றைக்கு அனைத்து தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லோரும் அரசு வேலைக்குப் போகமுடியவில்லை. அரசுப் பணி மிகவும் குறைவாக இருக்கிறது. இப்போது 2½ இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்று நீங்கள்தான் அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வந்தால், சற்று வாய்ப்பாக இருக்கும். அதையும் தங்கள் காலத்திலே நிறைவேற்ற வேண்டும்.

அதைப்போல, மிக முக்கியமானது மற்றொன்று. மாநிலங்களுக்குத் தகுந்தாற்போல, மக்கள் தொகை, வகுப்புப் பிரதிநிதித்துவம் எல்லாம் வேறுபட்டிருக்கிறது. நிலைமை வேறாக இருக்கிறது. ஜாதி எண்ணிக்கை, மக்கள் தொகையின் அடிப்படையிலே ஜாதிகள் வேறுபாடெல்லாம் இருக்கிறது. எனவே, அதையெல்லாம் களையக்கூடிய வகையில், அந்தந்த மாநிலங்களின் நிலைமைகளுக்கேற்ப, அந்த மாநிலங்களே இட ஒதுக்கீட்டை வகுத்துக்கொள்ளலாம் என்ற சட்டத் திருத்தம் என்பது, காலத்தின் கட்டாயம். விரைவாக அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீடு இருக்கிறது; பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு வேண்டும். அதையும் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படி இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துகிற முழுப் பொறுப்பு இருக்கிறது. அதைத் தங்கள் காலத்திலே நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

நான் சொன்னேன், இப்போது நான்காவது இடத்தை முதலமைச்சர் இந்த 7, 8 மாத ஆட்சிக் காலத்தில் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார் என்று. முதல் இடத்திற்கு வருவார் என்று நமக்கு நம்பிக்கை இருக்கிறது. மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மற்ற நிலையிலே இருக்கிற மூத்த அதிகாரிகள், நடுநிலையாளர்கள் எல்லாம் நிறையப் பேர் எங்களிடம் சொன்னார்கள். அதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நீங்கள் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். மக்கள் பயன் அடைந்துகொண்டிருக்கிறார்கள்; மகிழ்ச்சி கொள்கிறார்கள். அதே வேளையில் நீங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற திட்டங்கள் முறையாகக் கீழே மக்களுக்குப் போய்ச் சேருவதிலே சற்று குறை

இருக்கிறது என்ற ஏக்கம் அவர்களுக்கு உள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைத்தான் நம்முடைய அன்பிற்குரிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். வாய்க்கால்களை செம்மைப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள், மறைமுகமாகச் சொன்னார்கள், அவருடைய பாணியிலே. ஆகவே, நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த மக்கள் நலத் திட்டங்கள், பல்வேறு நலத் திட்டப் பணிகள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழக்கூடிய மக்களைச் சென்று அடைவதற்கு — அதிலே இருக்கின்ற குறைபாடுகளை தங்களால் ஆய்வு செய்து அதை நிவர்த்திக்க முடியும் — அதையும் நீங்கள் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

அது ஒன்று. மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுகிற அதே வேளையிலே இந்த சமூகச் சீரழிவுப் பிரச்சினைகள், இன்னும் மக்களை அழித்திருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலேயும் கவனம் செலுத்த வேண்டும். உதாரணத்திற்குச் சொன்னால் எங்கள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களால் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்துச் சொல்லப்பட்டது. நான் குடியரசு தின விழாவில் நிறைய பள்ளிகள், கல்லூரிகளுக்குப் போய்விட்டு வந்தேன். அங்கே குழந்தைகளைக் கூப்பிட்டுத் தனியாகக் கேட்டேன். இங்கே எல்லாம் கஞ்சா சாக்லெட் என்று சொல்கிறார்களே, பான் பராக், குட்கா, ஹான்ஸ் எல்லாம் விற்கிறார்களா என்று கேட்டால், ஆமாம் விற்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் ஒரு பையனைக் கூப்பிட்டுக் கேட்டேன்; ஏனப்பா, யாராவது வாங்கினார்களா என்று கேட்டால் பக்கத்தில் இருந்த பையன் வாங்கிச் சாப்பிட்டதாகச் சொல்கிறான். இது எவ்வளவு சீரழிவு என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். சென்னையில் ஒருவரிடம் கேட்டேன். பாரதி மகளிர் கல்லூரி அருகிலேயும், மகளிர் விடுதியில் படிக்கிற உயர்ந்த குடும்பத்துப் பெண்கள், பணக்காரக் குடும்பத்துப் பெண்கள்கூட அந்தக் கஞ்சாவையும், கஞ்சா சாக்லெட்டையும் வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்ற நிலை நமக்குக் கவலையளிக்கிறது; பெண்களுக்கு இந்த நிலையா என்ற எண்ணம் எழுகிறது. ஆகவே, இதைச் சமூகப் பார்வையோடு நோக்க வேண்டும். நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட கஞ்சா, அபின், இந்த பான் பராக், குட்கா, ஹான்ஸ், இவையெல்லாம் தடைசெய்யப்பட்டிருந்தாலும்கூட அவை தாராளமாக





விற்கப்பட்டு வருகின்றன. அதை நீங்கள் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணன் ஆற்காட்டார் அவர்கள்கூட சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கிறேன் என்று இங்கே சொன்னார்கள். அவற்றைக் காட்ட நான், சபாநாயகரிடம் அனுமதி வாங்கவில்லை. இருந்தாலும்கூட, நான் வைத்திருக்கிறேன், கையில்.

சமூகச் சீரழிவு ஏற்படுத்தி மக்களை மிகவும் அழித்துக் கொண்டிருக்கிற இன்னொன்று இந்த லாட்டரிச் சீட்டு. 4,000, 5,000 ரூபாய் சம்பளம் வாங்குபவர்கள் இருக்கிறார்கள். அப்படிச் சம்பளம் வாங்குபவர்களைப் பார்த்தீர்களென்றால், கந்து வட்டியில் பணம் வாங்கிவிட்டு வந்து, தினமும் லாட்டரிச் சீட்டு வாங்குவார்கள். அல்லது கடனாக வாங்கிக்கொண்டு, மாதச் சம்பளத்தை அப்படியே கொண்டுபோய் லாட்டரிச் சீட்டு கடைக்காரர்களிடம் கொடுத்துவிடுவார்கள். இதனால் எவ்வளவு குடும்பங்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன? அந்த வேதனையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கள் கட்சிக்காரர்களிடமெல்லாம் சொன்னோம். உங்கள் மாவட்டத்திலே, உங்கள் ஒன்றியத்திலே இருந்தால், நீங்கள் வாங்கி வாங்கி அனுப்பி வையுங்கள் என்று கேட்டோம். வாங்கி அனுப்பியிருக்கிறார்கள். எல்லா இடத்திலேயும் லாட்டரிச் சீட்டு தாராளமாக விற்கிறது. விற்கிறவர்களை கடையோடு புகைப்படம், ஒளிப்படம் எடுத்து வந்திருக்கிறேன். விற்கிறவன், கடைப் பெயர் எல்லாம் அப்படியே என்னிடம் இருக்கிறது. வேண்டுமானால், ஆதாரத்தோடு தருகிறேன். ஆகவே, தடை செய்யப்பட்ட இந்த லாட்டரிச் சீட்டு விற்பனை, தமிழ்நாட்டில் முழுவதுமாகத் தடை செய்யப்பட வேண்டும். இதில் பல பேருடைய குடும்பங்கள் சீரழிந்துகொண்டிருக்கின்றன என்ற நிலையை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

என்னுடைய தொகுதியில் நல்ல திட்டங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்டத்து அமைச்சர் அவர்களும் நிறைய திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மேட்டூர் தொகுதியில் நம்முடைய அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் பொறுப்பிலுள்ள மின் வாரியத்தின்கீழ் ஒரு அனல் மின் நிலையம் வர இருக்கிறது. ஆகவே,

[திரு. ஜி.கே. மணி] [2007 ஜனவரி 27

இந்தத் திட்டங்களுக்கு மேட்டூர் தொகுதி மக்களின் சார்பிலே, சேலம் மாவட்டத்து மக்களின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தோணி மடுவுத் திட்டத்தைப் பற்றித் துணைக் கேள்வியா கேட்பது என்று. அது நீண்ட நாளையத் திட்டம். காட்டுப் பகுதியிலே அந்தத் திட்டம் இருக்கின்ற காரணத்தினால் அது தள்ளிப் போடப்பட்டு வருகிறது. தோணி மடுவு என்ற ஒரு ஆறு பாலாற்றிலே, காவிரியிலே கலக்கிறது. குறுக்கே அணையைக் கட்டிவிட்டால் குளத்தூர் ஒன்றியம் முழுவதும் பாசனம் பெறும். மேட்டூர் அணை இருக்கிற அந்த தொகுதியில் பாசனம் எங்கும் இல்லை. ஆகவே, அந்தத் தோணி மடுவுத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அனல் மின் நிலையத்தில் இருக்கின்ற சாம்பல் தண்ணீர் எல்லாம் வீணாகப் போய்க்கொண்டிருக்கின்றது. அது காவிரியில் கலந்து மாசுபடுத்துவதாகச் சொல்கிறார்கள். ஆனால், அந்த நீர், பாசனத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும். பக்கத்திலே இருக்கிற நங்கவள்ளி ஒன்றியப் பகுதியிலே அதைக் கொண்டு சென்றால் பாசனத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டும்.

முற்பகல் 10–30

அடுத்து, துத்தநாகம் முலாம் பூசும் ஆலை, மின் வாரியப் பணிமனை நலிவடைந்ததால் இவற்றையெல்லாம் மூடிக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் எல்லாம் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அதைச் சீரமைத்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூரிலே சிறந்ததொரு தொழிற் பயிற்சி நிலையம் I.T.I. இருக்கிறது. இடம் இருக்கிறது, கட்டடம் இருக்கிறது, அதிலேயே ஒரு பல்தொழில்நுட்பப் பயிலகம், Polytechnic வந்தால் அதுவும் வாய்ப்பாக இருக்கும். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.



2007 ஜனவரி 27] [திரு. ஜி.கே. மணி]

அடுத்து, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திடடப் பணிகளைச் சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரிலே எடுத்தால் வாய்ப்பாக இருக்கும் என்று எல்லோரும் சேர்ந்து என்னிடம் சொன்னார்கள்; நேற்றுகூட அதைப்பற்றிச் சொன்னார்கள், நீங்கள் கொஞ்சம் முதலமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே, அதைப் பெரிதும் மனது வைத்து நீங்கள் செய்ய வேண்டும். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்பட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். இப்படி நிறையப் பிரச்சினைகள் உள்ளன.

இன்னொன்று முக்கியமானது, இந்தச் சாலைப் பணியாளர்களுக்கு நீங்கள்தான் வாழ்வு கொடுத்தீர்கள். வாழ்வு கொடுத்தாலும் அவர்களில் ஏறக்குறைய 58 பேர்களுக்குமேலே இறந்துவிட்டார்கள். அவர்களுடைய குடும்பத்தார் இன்றைக்கு வாரிசு அடிப்படையிலே, கருணை அடிப்படையிலே வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்தக் குடும்பங்களுடைய வறுமையைப் போக்கக்கூடிய வகையிலே அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி விளக்கு ஏற்றி வைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணியாளர்கள் ஏறக்குறைய 510 பேர் இளநிலை உதவியாளர்களாகச் சேர்க்கப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக இருக்கிறது, கடந்த ஆட்சிக் காலத்திலேயிருந்து. அதையும் நிறைவேற்றித் தர வேண்டும். இப்படிப் பல கோரிக்கைகள் இருக்கின்றன. எழுதிக் கொடுத்துவிடுகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளுவர். அந்த அடிப்படையிலே (குறுக்கீடுகள்) நான் மாற்றிச் சொல்லிவிட்டேன், மாற்றிச் சொல்லிவிட்டேன், மன்னிக்க வேண்டும். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலார் மனம் உருகிப் பாடினார். ஆனால். வள்ளலார் வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களே, அந்த வள்ளலார் வாழ்ந்த பகுதியிலே இருந்து கேட்டிருக்கிறார்கள், என்ன கேட்டிருக்கிறார்கள் என்றால், இந்தத் தைப் பூசத் திருநாளிலே மதுக் கடைகளை மூட வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குப்

பெருமை சேர்க்கின்ற வகையிலே கடலூர் மாவட்டத்தின் சார்பிலே கேட்டிருக்கிறார்கள். அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டு, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த ஆளுநர் உரையை முழுக்கப் படித்துப் பார்த்தோம், மூன்று கட்டங்களாக என்ன செய்யப்பட்டிருக்கிறது, என்ன செய்யப் போகிறது, என்ன செய்ய வேண்டுமென்று மூன்று கட்டங்களிலே ஆலோசித்துப் பார்த்தால் இதைக் காலத்தின் கண்ணாடியாக முதலமைச்சர் எண்ணத்தின் பிரதிபலிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆளுநர் உரை காலத்தின் கண்ணாடி என்று பாராட்டி வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையிலே சிறப்பான பல்வேறு அம்சங்கள் நிறையவே இருக்கின்றன. கவர்னர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகளையும், அரசு செய்த திட்டங்களையும், அரசு செய்ய இருக்கின்ற திட்டங்களையும் அறிவிக்கின்ற ஒரு நிலைதான். புத்தாண்டு பிறந்தவுடனே நடைபெறுகின்ற அந்தச் சட்டமன்ற நிகழ்ச்சியில் சம்பிரதாயமாக ஆற்றுகின்ற உரை அந்த கவர்னர் உரை. இந்த கவர்னர் உரைக்குப் பெருமை சேர்க்கின்ற வகையிலே தமிழ்ப் புத்தாண்டு தைத் திங்கள் பிறந்து எல்லா மக்களும் இந்த நாட்டிலே இருக்கின்ற எளிய மக்கள், சமுதாயத்திலே பின்தங்கிய மக்கள், வாழ்க்கையிலே பலவீனமான மக்கள், இவர்களுடைய வாழ்க்கைத் தரம் எல்லாம் உயர்கின்ற வகையில் இந்த அரசு பொறுப்பேற்று எட்டு மாதங்களுக்குள்ளாக மிகப் பெரிய திட்டங்களைத் தீட்டி அறிவித்திருக்கிறது.

*முற்பகல் 10–35*

முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்ற ஒரு நிலையை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சென்னையிலே ஒரு பிடி மண்கூட இரண்டு ரூபாய்க்குக் கிடைப்பதில்லை. சென்னை மாநகரத்திலே ஒரு பிடி மண்கூட இரண்டு ரூபாய்க்குக் கிடைக்காத இந்த நிலையில், ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்குக் கொடுத்த தமிழக முதலமைச்சர்





அவர்களை, இந்த நாட்டிலேயிருக்கின்ற கோடானு கோடி ஏழை மக்கள், எளிய மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல, விவசாயிகளுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றவேண்டும் என்றெண்ணி, நைந்துபோயிருக்கின்ற விவசாயிகள், நலிந்துபோயிருக்கின்ற விவசாயிகள், கூலித் தொழில் செய்கின்ற விவசாயத் தொழிலாளர்கள், இவர்களுக்கெல்லாம் நல்வாழ்வைத் தேடிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, விவசாயிகள் பட்ட கடன், சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாயை இந்த அரசு இரத்துச் செய்திருக்கிறது என்பதற்கு இந்த நாட்டிலேயிருக்கின்ற அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களும், டாக்டர் கலைஞர் அவர்களையும், இந்த அரசையும் மனமாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேநேரத்தில், இந்த கவர்னர் உரையிலே, பல்வேறு சிறப்பம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. இந்த கவர்னர் உரையிலே, ஊனமுற்றோர், மீனவர்களுக்குத் தனி நல வாரியங்கள்; பிப்ரவரி 15 முதல் இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் பேருக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்; ரூபாய் 2,700 கோடியில் 6 பெருந்தொழில் திட்டங்கள்; 50,000 பேருக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு; மனிதக் கழிவை மனிதனே சுமந்து அகற்றும் கொடுமையைப் போக்க அப்பணியாளர்களுக்கு 58.45 கோடி ரூபாயில் மாற்றுத் தொழில் திட்டம்; 11–வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், திட்ட ஒதுக்கீடு 80 ஆயிரம் கோடி; ஆண்டிற்கு 9 சதவிகிதப் பொருளாதார வளர்ச்சி; தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மத்திய அரசை வலியுறுத்தல்; 10 ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களிலே வசிப்பவர்களுக்கு 6 மாத காலத்திலே இலவச வீட்டு மனைப் பட்டா; தமிழகம் முழுவதும் மின் கட்டணம் செலுத்தும் முறையைக் கம்ப்யூட்டர் மயமாக்குதல்; 103 கோடி ரூபாய் செலவிலே 4 இலட்சத்து 84 ஆயிரம் மாணவ, மாணவியர்க்கு இலவச சைக்கிள் வழங்குகின்ற திட்டம்; 70 ஒன்றியங்களிலே பின்தங்கிய பிரிவினர் முன்னேற்றத்திற்காக 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம்; இலங்கைப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்வு; நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களிலே பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு சட்டமுன்வடிவை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்தல்; தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு கொண்டுவர மத்திய அரசைக் கோருதல் என்று பல சிறப்பான திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள்.

[திரு. டி. சுதர்சனம்] [2007 ஜனவரி 27

ஆனால், இந்த கவர்னர் உரையைக் குப்பைத் தொட்டியிலே தூக்கிப் போடுங்கள் என்று பிரதான எதிர்க்கட்சியினுடைய தலைவர் அறிக்கை விட்டிருக்கின்றார்கள். எவ்வளவு சிறப்பான திட்டங்கள்? இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தனை சிறப்பான திட்டங்களையும் அறிவித்திருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுவதற்கு மனமில்லாத காரணத்தினால், அவர்கள் இந்த கவர்னர் உரையைக் குப்பைத் தொட்டியிலே போடுங்கள் என்று சொன்னார்கள், அறிக்கை விட்டார்கள்.

அதுமட்டுமல்ல, இவர்கள் கவர்னரையே குப்பைத் தொட்டியிலே போட நினைத்தவர்கள். கவர்னர் அவர்களுக்கும், முதலமைச்சருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டபோது, அவரை, அன்றைக்கு இருந்த அரசில், அவருடைய கட்சித் தொண்டர்களே திண்டிவனத்திலேயிருந்து பாண்டிச்சேரிக்குப் போகின்ற வழியிலே, அவரை அடிப்பதற்கு ஆள் வைத்து, அங்கே கறுப்புக் கொடிப் போராட்டம் என்ற பெயரிலே, அவர் சென்று கொண்டிருந்த வாகனத்தை அடித்தார்கள்; நொறுக்கினார்கள். கவர்னருக்கே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையைச் சென்ற அரசு உருவாக்கியது என்பதைத் தமிழக மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

அதுமட்டுமல்ல, இவர்கள் அவைக்கு வருகிறார்கள்; காலையிலே வருகிறார்கள்; கையெழுத்துப் போடுகிறார்கள்; போட்டுவிட்டுப் போகின்றார்கள். போகின்றபோது என்ன சொல்கிறார்கள்? 'கலைஞர் ஒழிக' என்று சொல்லவில்லை. 'கருணாநிதி ஒழிக', 'ஸ்டாலின் ஒழிக', 'அரசே, இராஜினாமா செய்' என்று சொல்கிறார்கள். எதற்காக இந்த அரசு இராஜினாமா செய்ய வேண்டும்? இந்த நாட்டிலேயிருந்த பல்வேறு பிரச்சினைகள், 8 மாத காலத்திற்குள்ளாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசுக்கு மக்கள் அளித்திருக்கின்ற தீர்ப்பின்படி, இன்னும் நான்கு ஆண்டுகள், நான்கு மாதங்களுக்கு இந்த அரசு இருக்க வேண்டும். அதைப் பொறுக்க முடியவில்லை, அவர்களாலே.

முற்பகல் 10-40

இந்த எட்டு மாத காலத்திலே பல்வேறு நலத் திட்டங்களைச் செய்திருக்கின்றீர்கள்; வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை நீங்கள் கொடுத்துக்கொண்டிருக்கின்றீர்கள். தாய்மார்களுக்கு இலவச Gas அடுப்பு; இந்த மார்ச் மாதத்திற்குள்ளாக மூன்று இலட்சம் பேருக்கு



2007 ஜனவரி 27] [திரு. டி. சுதர்சனம்]

இலவச Gas இணைப்பைக் கொடுக்க இருக்கின்றீர்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் பாராட்டுவதற்கு அவர்களுக்கு மனமில்லை. அவர்களுக்குப் பாராட்டுவதற்கு மனமில்லாமல் போனாலும்கூட, பெருந்தன்மையாகவாவது இருக்கவேண்டும்.

ஏதோ இந்த நாட்டிலே ஒரு மிகப் பெரிய பேரழிவு ஏற்பட்டுவிட்டது போலவும், இந்த நாட்டிலே மிகப் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது போலவும், இந்த நாட்டிலே இருக்கின்ற மக்கள் துன்பப்படுகிறார்கள் என்பது போலவும், இந்த அரசாங்கம் பொருளாதாரத் துறையிலே மிகவும் திவாலாகிப் போய்விட்டது போலவும் இவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். வருகிறார்கள், போகிறார்கள், கையெழுத்துப் போட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். நேற்று கறுப்புச் சட்டை அணிந்து வந்தார்கள். என்ன காரணத்தினாலே கறுப்புச் சட்டை அணியவேண்டும் இந்த நாட்டிலே? அப்படிக் கறுப்பு தினம் கொண்டாடுவதற்கு என்ன காரணம்? இந்த நாட்டிலே இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் வெகு வேகமாகத் தேய்ந்துவருகின்ற ஒரு இயக்கமாக தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை வேண்டுமானால் அவர்கள் துக்க தினமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்களோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. கறுப்புத் துணி அணிந்து வருவது துக்கத்தின் அடையாளம். அந்த துக்கத்தின் அடையாளத்தை — இவர்கள் எதற்காக, யாருக்கு துக்கம் கடைப்பிடிக்கிறார்கள் என்று நமக்குப் புரியவில்லை.

அதுமட்டுமல்ல. அன்றைக்குப் பேசுகின்றபோது — சென்ற கவர்னர் உரையிலே—ஆட்சிப் பொறுப்பை ஏற்று 10 தினங்களுக்குள்ளாக கவர்னர் உரை வந்தது. வந்தபோது என்ன சொல்லிவிட்டுப் போனார்கள்? 10 தினங்களுக்குள்ளாக இந்த அரசு தேர்தல் அறிக்கையிலே அறிவித்த பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது; அதனாலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு வெளியே போனார்கள்; பத்திரிகையிலே செய்தி கொடுத்தார்கள், 10 தினங்களுக்குள்ளாக தேர்தல் அறிக்கையிலே சொன்னதைச் செய்யவில்லையென்று சொல்லி; எட்டு மாத காலத்திற்குள்ளாக தேர்தல் அறிக்கையிலே சொன்னதையும், சொல்லாததையும் இந்த அரசு செய்திருக்கிறது. அதற்காகத் தமிழக மக்கள் நம்முடைய முத்தமிழ்

அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை மனமார, உளமார இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜனநாயகத்திலே, உள்ளாட்சித் தேர்தலிலே மிகப் பெரிய கறுப்புப் புள்ளியாக இருந்த நாட்டார்மங்கலம், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல் போன்ற கிராமங்களுக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்று, அவர்களையெல்லாம் ஒன்று திரட்டி அங்கே நீங்கள் தேர்தலிலே பங்கு கொள்ளுங்கள் என்று வேண்டுகோள் விடுத்து, அதற்குப் பின்னாலே ஜனநாயகத்தினுடைய கறும்புள்ளியாக இருந்த அந்த நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல், பாப்பாபட்டி, கீரிப்பட்டி ஆகிய இடங்களிலே சமீபத்தில் சுமூகமான முறையிலே தேர்தல் நடைபெற்றிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை மன்மாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியிலே தேர்தல் நடைபெற்றது. தமிழகம் பூராவும் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது; எங்கும் பிரச்சினை இல்லை. ஆனால், சென்னையிலே அவர்கள் சட்டமன்றத் தேர்தலிலே சில இடங்களிலே வெற்றிபெற்ற காரணத்தினாலே, 'நாம் இங்கே மாநகராட்சியைப் பிடித்துவிடுவோம்' என்ற எண்ணத்தின் அடிப்படையில் தேர்தல் களத்திலே நின்றார்கள். தேர்தலைச் சந்தித்தார்கள். சந்திக்கின்றபொழுது அவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டது. அந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்கின்ற மனப்பக்குவம் அவர்களுக்கு இல்லை. ஆட்சியை விட்டுப் போவதற்கு மனப்பக்குவம் அவர்களுக்கு இல்லை. நம்முடைய முதலமைச்சர்கூட பல ஆண்டுகள் முதலமைச்சர் பொறுப்பிலே இல்லை. ஆனால், எதிர்க்கட்சியாக அவர்கள் செயல்பட்டார்கள். எட்டு மாதங்கள்கூட ஆகாத ஒரு நிலையில், நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு எட்டு மாதங்கள்கூட அவர்கள் பதவியில் இல்லாத ஒரு நிலையில், அவர்கள் பதவி சுகத்தை அனுபவிக்க முடியாமலிருக்கிறதே என்ற எண்ணத்தின் அடிப்படையிலே மிகக் கேவலமாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநகராட்சி மன்றத் தேர்தலிலே முறைகேடுகள் நடைபெற்றது என்று சொன்னார்கள். சொல்லி, நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்றத்திற்குப் போனபோது, நீதிமன்றத்திலே இரண்டு நீதிபதிகளிலே ஒரு நீதிபதி ஒரு தீர்ப்பை அளித்தார், இன்னொரு நீதிபதி





இன்னொரு தீர்ப்பை அளித்தார். மூன்றாவது ஒரு நீதிபதியை வைத்து விசாரித்து அவர்கள் என்ன தீர்ப்பு சொல்கிறார்களோ அந்த அடிப்படையிலும், அதற்குப் பின்னாலே உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கின்ற வாய்ப்பு இருந்தும்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த 99 நகரமன்ற உறுப்பினர்கள் பணி செய்யமுடியாமல் போனால் சென்னை மாநகராட்சியினுடைய வளர்ச்சி பாதிக்கப்படும், சென்னை மாநகராட்சியினுடைய வளர்ச்சி குந்தகப்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, தேர்தலிலே ஒரு நீதிபதி இப்படிச் சொல்லியிருக்கின்றார்; அந்த நீதிபதியினுடைய கருத்தை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்ற எண்ணத்தைக்கூட எண்ணாமல், 99 பேராலே இந்தப் பிரச்சினை, அதனாலே நீங்கள் இராஜினாமா செய்யுங்கள் என்று தன்னுடைய கட்சிக்காரர்களை, தோழமைக் கட்சிக்காரர்களையெல்லாம் அழைத்துப் பேசி, 99 நகர்மன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–45

இராமாயணத்திலே ஒரு கதை உண்டு. இராமாயணத்தை நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனால், இராமன் எல்லா சண்டைகளையும் முடித்து, தான் திரும்பவும் பட்டாபிஷேகம் சூட்டிக்கொண்ட பின்னாலே, சீதையும் இராமனும் ஒரு இடத்தில் அமர்ந்திருந்தபோது, தெருவிலே ஒருவன் இராவணனிடத்திலே சீதை இவ்வளவு நாட்கள் இருந்தாளே, இவள் கற்புடையவளாக எப்படியிருப்பாள் என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டு போக, அதை இராமன் பார்த்து அந்த அம்மையார் கற்புக்கரசிதான் 'என்று தனக்குத் தெரிந்திருந்தாலும்கூட, நீங்கள் அக்கினிப் பிரவேசம் செய்யுங்கள் என்று மறுநாள் அக்கினிப் பிரவேசம் செய்த நிலை போல, இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை நகர்மன்ற உறுப்பினர்களும் தவறு செய்யாதவர்கள் என்ற நிலை இருந்தபோதிலும்கூட அக்கினிப் பிரவேசம் செய்யுங்கள் என்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

அந்தத் தேர்தலைச் சந்திக்க முடியாமல், சிலர் என்ன சொல்கிறார்கள். 'முதலமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும்' என்கிறார்கள். எதற்காக, இராஜினாமா செய்ய வேண்டும்? 'உள்ளாட்சித் துறை அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும் என்கிறார்கள். எதற்காக இராஜினாமா செய்ய வேண்டும் அதுதான் போகட்டும். 'போலீஸ் டி.ஜி.பி. இராஜினாமா செய்ய வேண்டும்.

போலீஸ் கமிஷனர் இராஜினாமா செய்ய வேண்டும்' கூடுதல் கமிஷனர் இராஜினாமா செய்ய வேண்டும். தேர்தல் துறை ஆணையர் இராஜினாமா செய்ய வேண்டும் என்கிறார்கள். ஒரு முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தவர் இப்படிப்பட்ட ஓர் அறிக்கையைக் கொடுக்கிறார். இவர்கள் இருக்கின்றவரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே போட்டியிடாது என்று அறிவிக்கிறார்கள். அறிவித்தபடி நிற்பார்களா என்பது வேறு விஷயம். ஆனால், அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் 5 ஆண்டுக்காலம் பதவி வகிப்பார் என்று தெரியும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதவி வகிப்பார் என்று தெரியும்.

தேர்தல் துறை ஆணையரைப் போடுகின்ற அதிகாரம்தான் இந்த அரசுக்கு உண்டே தவிர, மாற்றுகின்ற அதிகாரம் இந்த அரசுக்கு இருக்கிறதா என்று எண்ணிப் பார்ப்பார்களேயானால், இந்த அரசுக்குக் கிடையாது. (குறுக்கீடு) சொல்கிறேன். அந்தத் தேர்தல் துறை ஆணையரை மாற்றுகின்ற அதிகாரம் இந்த அரசுக்கு இல்லை. அந்தத் தேர்தல் துறை ஆணையர் என்ற பதவி உயர் நீதிமன்ற நீதிபதிக்குச் சமமான ஒரு பதவி. அந்தப் பதவியை விட்டு அவரை நீக்க வேண்டுமென்று சொன்னால், நாடாளுமன்றத்திலே அதற்குத் தீர்மானம் கொண்டு வரவேண்டும். Impeachment கொண்டு வர வேண்டும். ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியை எப்படி நீக்கமுடியுமோ, அப்படித்தான் நீக்க வேண்டும். ஆனால், சென்ற ஆட்சிக் காலத்திலே என்ன நடைபெற்றது? ஒருவர் அந்தத் தேர்தல் துறை ஆணையராக நியமிக்கப்பட்டார். ஒரு பதவிக்கு நியமிக்கப்படுகிறபோது மூன்று முறை ஒருவரை நியமிக்கலாம். இரண்டு ஆண்டுகளுக்கு என்று மூன்று முறை நியமிக்கலாம். அப்படி நியமித்தார்களா என்பது வேறு விஷயம். மூன்று முறை நியமிக்கலாம். ஆனால், எந்தப் பதவியாக இருந்தாலும் சரி, 62 வயது வரை அந்தப் பதவியில் இருக்கலாம் என்று சட்டம் இருந்தது. ஆனால், இந்தச் சட்டமன்றத்திலே, ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து தனக்கு வேண்டியவர் ஒருவருக்கு, எத்தனை முறை வேண்டுமானாலும் பதவி நீட்டிப்பு கொடுக்கலாம், எத்தனை வயது வேண்டுமானாலும், ஆயுள்காலம்வரை அவர் அந்தப் பதவியிலே இருக்கலாம் என்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டத் திருத்தத்தின்மூலமாக என்ன நடைபெறும் என்று கருதினார்கள் என்றால், அவர்கள் ஏதோ திரும்பவும் ஆட்சியைப் பிடிப்பது போலவும் அவர்களுக்கு வேண்டியவர் தேர்தல் ஆணையராக இருந்தால் தாங்கள் சுலபமாக வெற்றி பெறுவதற்கு வழிவகை இருக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே பல்வேறு





விதமான பிரச்சினைகளை அந்தத் தேர்தல் ஆணையர் விஷயததில் செய்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

எதற்காக அப்படி, அந்தத் தேர்தல் .ஆணையர் ஆயுள்காலம் வரை இருக்கலாம், எத்தனை முறை வேண்டுமானாலும் பதவி நீட்டிப்புக் கொடுக்கலாம் என்றார்கள்? என்ன அப்படிப்பட்ட தியாகம் புரிந்துவிட்டார், இந்த நாட்டிலே அந்தத் தேர்தல் அதிகாரி? இந்த நாட்டிலே எத்தனையோ அதிகாரிகள் இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள்; ஐ.பி.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்டவருக்கு மட்டும் அப்படிப்பட்ட சலுகை ஏன் வழங்கப்பட்டது என்பதை நீங்கள் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முற்பகல் 10–50

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பல்வேறு இடங்களிலே பல்வேறுபட்ட பிரச்சினைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இங்கே அவர்கள் பேசினால், ஒன்றைப் பேசினால் ஒன்பதை வாங்கிக்கொண்டு போகவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஏனென்று சொன்னால், இந்த கவர்னர் உரையிலே இருக்கின்ற நலத் திட்டங்களைப் பற்றிப் பேசுவதற்கு பல நண்பர்களுக்கு மனம் இருக்கிறது. ஆனால், அவர்களுடைய தலைவர்கள் அவர்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். கட்டுப்படுத்துகின்ற காரணத்தினாலே, பாராட்டுவதற்கு மனம் இல்லாத காரணத்தினாலே, நாம் உள்ளே இருந்தாலும் நமக்கு மனதிலே வேதனை, அதனாலே வெளியே போய்விடலாம் என்று அவர்கள் வெளியே போய்க்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட ஒரு நிலை இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறது. அன்றைக்கு பல்வேறுபட்ட நிலைகளிலே, சென்ற ஆட்சிக் காலத்திலே எப்படியெல்லாம் இந்த ஆட்சி நடைபெற்றது? இந்தச் சட்டமன்றத்திலே இவ்வளவு நேரம் யாராவது பேச முடிந்ததா? கேள்வி:, கேட்க முடிந்ததா? நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் நேற்று குறிப்பிட்டார்கள். பேசுகின்றபோது குறுக்கீடுகளையெல்லாம் சேர்த்து, பேசுகின்ற உறுப்பினர்கள் நேரத்தில் கழித்து உட்கார வைத்து விடுவார்கள் சென்ற ஆட்சிக் காலத்திலே என்று ஞாபகப்படுத்தினார்கள். அதேபோன்று அமைச்சர் பேசுவதற்கு உரிமை இல்லாத சட்டமன்றமாகத் திகழ்ந்தது.

[திரு. டி. சுதர்சனம்] [2007 ஜனவரி 27

யாரிடத்திலாவது போய் — போக்குவரத்துத் துறை அமைச்சர் இருந்தார், அவரிடத்திலே போய் எங்களுக்கு, எனது தொகுதியிலே பஸ் விட வேண்டும் என்று கேட்க முடிந்ததா? உயர் கல்வித் துறை அமைச்சரிடத்திலே போய் எங்கள் ஊரிலே பள்ளிக்கூடம் கட்டிக்கொடுங்கள், கல்லூரியைக் கட்டிக் கொடுங்கள் என்று ஏதாவது கேட்க முடிந்ததா? உணவு அமைச்சரிடத்திலே போய் ஏதாவது சொல்ல முடிந்ததா? எங்கள் ஊரிலே ரேஷன் கடையிலே அரிசி போடவில்லை என்று சொல்ல முடிந்ததா? ஒன்றும் முடியவில்லையே. இன்றைக்கு யாரிடத்திலே வேண்டுமானாலும், எந்தச் சட்டமன்ற உறுப்பினர் வேண்டுமானாலும் போய் சொல்ல முடிகிறது. இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சரைப் பார்க்கிறோம், மின்சாரத் துறை அமைச்சரைப் பார்க்கிறோம், பொதுப் பணித் துறை அமைச்சரைப் பார்க்கிறோம். அத்தனை அமைச்சர்களையும் பார்க்கிறோம். அதற்கு மேலாக முதலமைச்சர் அவர்களை எப்போது வேண்டுமானாலும் நாங்களெல்லாம் appointment வாங்காமலேயே போய்ப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு சுமுகமான சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை எந்தக் காலத்திலே வரப்போகிறது! தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய காலங்களிலேதான் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை. எல்லோரும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற ஓர் அரசு இந்த அரசு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசு இன்றைக்குப் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துவிட்டது. படித்தவர்கள் முதல் பாமரர்கள்வரை இந்த அரசினுடைய இந்த கவர்னர் உரையைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு திட்டங்கள்; தினம் தினம் ஒரு திட்டம் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. இதற்கு மேலும் மக்கள் நலத் திட்டங்களை அறிவிக்கக்கூட முடியுமா என்ற ஒரு நிலை.

முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள், இந்த அரசு திவால் ஆகப்போகிறது என்று. எப்படி திவால் ஆகிவிடும்? முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையிலே சொல்லுகின்றபோது, இப்படிப்பட்ட இலவசத் திட்டங்களையெல்லாம் — வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கிறீர்கள், Gas அடுப்பு கொடுக்கிறீர்கள், இலவசத் திட்டங்களையெல்லாம் அறிவிக்கின்றீர்களே, இந்த ஆட்சி திவாலாகிப் போய்விடாதா என்று கேட்டு, இலவசத் திட்டங்களை நிறுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏன்? ஏழை எளிய மக்கள்மீது



2007 ஜனவரி 27] [திரு. டி. சுதர்சனம்]

அவர்களுக்கு நம்பிக்கையில்லை. ஏழைகளுக்குக் கிடைக்கக்கூடிய நலத் திட்டங்கள்மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏழைகளுக்கு 'வருமுன் காப்போம்' திட்டத்தைக் கொண்டுவந்து, இன்றைக்கு அத்தனைப் பகுதிகளிலும் இருக்கின்ற கிராமப்புறத்திலே வாழ்கின்ற மக்கள் தங்களுடைய நோயினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தீர்த்துக் கொள்வதற்கு நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். என்னுடைய தொகுதியிலே, பூவிருந்தவல்லியிலே தொடங்கிவைத்த திட்டம் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் சீரோடும் சிறப்போடும், பொலிவோடும் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. அதற்காகத் தமிழக மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் அறிவித்த பின்னாலும்கூட நாங்களும் சில கோரிக்கைகளை உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேயராக இருந்தபோது, எழில்மிகு சென்னை 2000 என்று சொன்னார்கள். எழில்மிகு சென்னை 2000 என்று அறிவித்துப் பல்வேறு திட்டங்களைப் போட்டார்கள். போட்ட உடனே, 2001 ஆம் ஆண்டு தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையாத காரணத்தினாலே, போடப்பட்ட திட்டங்கள், கட்டி முடிக்கப்பட்ட பாலங்கள் சோதனை என்ற பெயரிலே அதிலே பல்வேறு குளறுபடிகள் செய்து 5 ஆண்டு காலம் கழித்துவிட்டார்கள்.

முற்பகல் 10–55

பெரம்பூர் மேம்பாலம் கட்டப்படவில்லை. இப்போது அரசு கட்ட வேண்டுமென்று சொன்னால், அந்த பெரம்பூர் மேம்பாலப் பணிக்கு, விலைவாசி ஏற்றத்தினாலே, பல கோடிக்கணக்கான ரூபாய் இந்த அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அந்தப் பாலத்தைக் கட்டுகின்ற முயற்சியிலே இப்போது இந்த அரசு, ஈடுபட்டிருக்கிறது. இருந்தாலும், அந்த எழில்மிகு சென்னை 2000 எப்படி இருக்கிறது என்று பார்க்கின்றபோது, சென்ற ஐந்தாண்டு காலம் மாநகராட்சியிலே இருந்தவர்கள், அரசை ஆண்டவர்கள், சென்னையைப் பற்றி எந்தக் கவலையும்படவில்லை. ஏனென்று சொன்னால், சென்னையிலே தனக்கு வாக்கு கிடைக்காது என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, சென்னையை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

இந்த அரசு, எழில்மிகு சென்னை 2010 என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கவேண்டும். குடிசையே இல்லாத நகரமாக இந்த சென்னை மாநகரத்தை நீங்கள் மாற்றவேண்டும். சென்னை மாநகரம், குடிசையில்லாத ஒரு நகரமாக வேண்டும். வேகமாக வளர்ந்து வருகின்ற நேரத்திலே, கிராமப்புறத்திலேயிருந்து வருகின்றவர்கள் குடிசைகளைப் போட்டுக்கொள்கின்றார்கள். அதனால் அங்கே அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுகின்றன. அப்படி தீ விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தினாலே மக்கள் அவதிப்படுகின்றார்கள். அதனாலே அவர்களுக்கு நிரந்தரமாக, தமிழக குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக ஆண்டொன்றுக்கு 2.5 இலட்சம் வீடுகளை, சுமார் 600 சதுர அடி பரப்பளவிலே, வாடகைக்குக் கட்டிக் கொடுத்து, இந்த ஆட்சி 2010–க்குள்ளாக சென்னை மாநகரத்திலே, குடிசைகளே இல்லை, அத்தனை வீடுகளும் குடிசை மாற்று வாரிய வீடுகள் என்று சொல்கின்ற அளவுக்கு செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று போக்குவரத்து நெரிசல் மிக்கது சென்னை. ஒரு பக்கத்திலே வேகமாக தென்சென்னை வளர்ந்துகொண்டு இருக்கின்றது. இன்னொரு பக்கத்திலே பூவிருந்தவல்லி, ரெட்ஹில்ஸ், தாம்பரம் பகுதிகள் மிக வேகமாக விரிவடைந்து வருகின்றன. போக்குவரத்து நெரிசலை நாம் குறைக்க வேண்டியிருக்கிறது. அதற்காக நாம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும். அதேபோன்று, நடப்பதற்கு சாலையோரம் நடைபாதை இல்லை. இந்த நாட்டிலே இருக்கின்ற மனிதர்களுக்கு பிளாட்பாரம் நடைபாதை இருக்கவேண்டும். ஆனால், அந்த பிளாட்பாரத்தில் ஆக்கிரமிப்புகள் நிறையவே இருந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது vinyl board–களை ஆங்காங்கே வைத்துவிடுகின்றார்கள். ஒரு நிகழ்ச்சி நடைபெறுகின்றது என்று சொன்னால், ஒரு தலைவர் வருகின்றார் என்று சொன்னால், அந்த vinyl board–களை நிகழ்ச்சி முடிகின்ற வரை வைக்கவேண்டும். நிகழ்ச்சி முடிந்தவுடனே மறுநாளே எடுத்துவிடவேண்டும். ஆனால், மாதக் கணக்கிலே இப்படிப்பட்ட vinyl board–கள் வைக்கப்படுகின்ற காரணத்தினாலே போக்குவரத்துக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்ற காரணத்தினாலே, பாதசாரிகள் பிளாட்பாரத்திலே நடக்காமல், சாலையிலே நடக்கின்ற காரணத்தினாலே, விபத்துகள் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு நீங்கள் பெருமுயற்சி எடுத்து அதற்கான ஆக்கபூர்வமான பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.





கூவம் நதியைச் சீரமைக்க வேண்டுமென்று பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களிடத்திலே வேண்டுகோள் வைத்து, ஆயிரம் கோடி ரூபாயைக் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மிகவும் வல்லவர், யாரிடத்திலே, அரசுக்காக எப்படி பணத்தைப் பெறுவது என்பதிலே அவருக்கு நல்ல திறமை இருக்கின்றது. ஆயிரம் கோடி ரூபாயைப் பெற்று, கூவம் நதியைச் சீரமைப்பதோடு, பக்கிங்ஹாம் கால்வாயிலே உள்நாட்டுப் படகுப் போக்குவரத்தை சென்னை மாநகரத்திற்குள் நாம் ஏற்படுத்தினால், சென்னை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசல் தீரும் என்பதை இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு சென்னையிலே பல்வேறு இடங்களிலே, நம்முடைய அருமை நண்பர் மணி அவர்கள் சொன்னதைப் போல, லாட்டரி டிக்கெட்டுகளை நிறையவே விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அதை உடனடியாக காவல் துறையின் கண்காணிப்போடு தடுத்து நிறுத்துகின்ற முயற்சியிலே நீங்கள் ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–00

அதேபோன்று, தமிழகம் தொழில் துறையிலே இன்றைக்கு வேகமாக வளர்ச்சி பெற்றிருக்கின்றது. சென்னையைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில் புதிய, புதிய தொழிற்சாலைகள் வேகமாக வந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் தென்மாவட்டங்களுடைய வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கின்றீர்கள். சேது சமுத்திரத் திட்டம் வெகு விரைவிலே வர இருக்கின்றது. நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா வெகு விரைவிலே வர இருக்கின்றது. திருநெல்வேலியிலே மதுரையிலே டைடல் பார்க் வர இருக்கின்றது. திருச்சி தொழில் துறையிலே டைடல் பார்க் வர இருக்கின்றது. ஆனால், அங்கிருக்கின்ற மக்கள் வேகமாக வளர்ந்து வருகிறது. ஆனால், அங்கிருக்கின்ற மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனாலே இன்னும் வருகின்ற ஐந்தாண்டுகளிலே, பத்தாண்டுகளிலே சரக்குப் போக்குவரத்து, மக்கள் போக்குவரத்து அதிகமாகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனாலே, கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை இரட்டை அகல இரயில் பாதை அமைக்கின்ற பணிக்கு தமிழக அரசு, மத்திய அரசை வற்புறுத்தவேண்டுமென்ற

ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) இன்றைக்கு ஒரு மாதத்திற்கு முன்னாலேயே டிக்கெட் வாங்க வேண்டிய ஒரு நிலை. அப்போதும் டிக்கெட் கிடைக்கிறதா என்று சொன்னால் கிடைப்பதில்லை. அதனாலே, இரட்டை இரயில் பாதைத் திட்டத்தை, அகல இரயில் பாதைத் திட்டத்தை உடனடியாக கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை கொண்டுவருவதற்கு மத்திய அரசை அணுகி, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, நீங்கள் உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. சென்னை விமான நிலைய விரிவாக்கம். சென்னை விமான நிலைய விரிவாக்கம் என்ற பெயரிலே சில ஆண்டுகளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதற்கு நிலம் கையகப்படுத்திக் கொடுக்கவில்லை. இப்போது ஐதாராபாத்திலே விமான நிலைய விரிவாக்கம் முடிகின்ற தருவாயிலே இருக்கிறது. பெங்களூரிலே விமான நிலைய விரிவாக்கம் முடிகின்ற தருவாயிலே இருக்கின்றது. கொல்கத்தாவிலே, மும்பையிலே விமான நிலைய விரிவாக்கம் முடிந்துவிட்டது. ஆனால், சென்னையிலே மட்டும் கடந்த ஆட்சிக் காலத்தினுடைய மெத்தனப் போக்கால் அந்த விரிவாக்கம் நடைபெறவில்லை. அதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. நில ஆர்ஜிதம் செய்கின்றபோது அங்கே இருக்கின்ற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அந்தப் போராட்டங்கள் நடத்துகின்றதன் விளைவாக இங்கே இந்த விமான நிலையம் விரிவாக்கம் செய்யவில்லை என்று சொன்னாலும்கூட ஒரு புதிய இடத்தையாவது அவர்களுக்குத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கவேண்டும். தாம்பரத்திற்கு பக்கத்திலோ அல்லது ஸ்ரீபெரும்புதூருக்குப் பக்கத்திலோ உடனடியாக ஒரு புதிய விமான நிலையம் அமைவதற்குத் தேவையான நிலங்களை அரசு கையகப்படுத்தி தரவேண்டும். அது உள்நாட்டு விமான நிலையமோ அல்லது வெளிநாட்டு விமான நிலையமோ உடனடியாக அதற்கு வேண்டிய கட்டுமானப் பணிகளுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்துகொடுக்கவேண்டியது உங்களது கடமை என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே சொன்ன தமிழகத்தினுடைய சட்டமன்ற மேலவை; சுமார் 20 ஆண்டுகாலமாக அந்த மேலவை அமைக்கின்ற பணி பல்வேறு சூழ்நிலை காரணமாக தாமதப்பட்டு, நீங்கள் இந்த மேலவையைத்





துவக்க வேண்டுமென்று சொல்லி தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினாலே அது முடியாமல் போய்விட்டது. திரும்பவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலே ஆட்சி அமையுமேயானால் சட்டமன்ற மேலவை அமையும் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கின்றீர்கள். அதனாலே நீங்கள் உங்களுடைய காலத்திலே, வெகு விரைவிலே சட்டமன்ற மேலவையைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் என்னுடைய அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல பேர்கள், பல நண்பர்கள் பேசினார்கள். திருப்பூரிலே இருக்கின்ற சாயப் பட்டறைகள் இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகளாலே மூடிக்கிடக்கின்றன; தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; அதன்மூலமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம், இங்கே நண்பர் மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் விவரமாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திருப்பூர் சாயப் பட்டறைத் தொழில், அங்கே 12 ஆயிரம் கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற அந்தத் தொழில் நசியாமலும், அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமலும் பாதுகாத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது கருணை அடிப்படையிலே நிதி உதவி அளிக்கவேண்டியும் இன்றைக்குப் பல்வேறு கோரிக்கைகளை இங்கே நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் தெரிவித்தார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவ்வாண்டு தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே அதிகமான அளவு மழை பெய்தது. ஆனால், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே மழை குறைந்து போய்விட்டது. அதேபோன்று திருவண்ணாமலை மாவட்டத்திலும். இந்த மூன்று மாவட்டங்களிலும் மழை மிகக் குறைந்து போய்விட்டது. மழை குறைந்து போயிருக்கின்ற அந்த மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் வளர்ச்சிக்காக— இன்றைக்கு அந்த மக்கள் குடிதண்ணீருக்குக்கூடக் கஷ்டப்படுகிறார்கள். கடுமையான வறட்சி 'அங்கே நிலவுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு—இந்த அரசு

[திரு. டி. சுதர்சனம்] [2007 ஜனவரி 27

இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

இப்போது பல்வேறு இடங்களிலே ஏழையெளிய மக்கள் தங்களுக்குக் குடும்ப அட்டை கிடைக்கவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள்கூட குடும்ப அட்டை பற்றிப் பேசினார்கள். நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களிலே பல்வேறு சோதனைகள் நடத்துகிறார்கள், பல பேர்களை வேலையை விட்டுப் பணி நீக்கம் செய்கிறார்கள். இருந்தாலும்கூட கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட பல்வேறு முறைகேடுகளின் பயனாக, அங்கே ஊழல் அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தினாலே இவர் எவ்வளவுதான் முயற்சி செய்து பார்த்தாலும் அந்தப் பணி வேகமாக நடைபெறாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. குடும்ப அட்டை கிடைக்காமல் பல பேர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதேநேரத்திலே, ஒவ்வொரு கடையிலும் 20 விழுக்காட்டுக்கு மேல் போலி அட்டைகள் இருக்கின்றன. நான் சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஓர் இடத்திற்குச் சென்றிருந்தேன். அவர்கள் கூட்டம் நடத்தினார்கள்; எப்படி இவ்வளவு செலவு செய்கிறீர்கள் என்று கேட்டால் ஒரு ரேஷன் கடையிலே இவ்வளவு ரூபாய் வாங்கினேன் என்று சொன்னார்கள். ரேஷன் கடையிலே வேலை செய்கின்றவர்கள் நன்கொடை கொடுக்கின்ற அளவிற்கு வசதியும், வாய்ப்பும் இருக்கிறது என்று சொன்னால் எவ்வளவு bogus குடும்ப அட்டைகள், அங்கே இருக்கின்றன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தக் குடும்ப அட்டைகள் வழங்குகின்ற முறையில் புதிதாக நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்தால் ஆய்வு செய்து அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்று அறிவித்தீர்கள். பல சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆய்வு செய்து கொண்டிருக்கிறீர்கள். நிறைய பேர் இலட்சக்கணக்கிலே புதிய அட்டைகள் கேட்டு விண்ணப்பித்திருப்பார்கள். அவர்களுக்கு எல்லாம் போய்ச் சேர்ந்ததா என்று சொன்னால் எங்களுடைய திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை சுமார் 35 ஆயிரம் பேர் புதிய குடும்ப அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்தார்கள். ஆனால், இதுவரை வழங்கிய



2007 ஜனவரி 27] [திரு. டி. சுதர்சனம்]

குடும்ப அட்டைகள் 635. ஏனென்று சொன்னால், இந்தக் குடும்ப அட்டைக்கு மனு கொடுக்கின்றபோது அதைத் தணிக்கை செய்கிறவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பல்வேறு பிரச்சினைகளைத் தாண்டி அந்த Civil Supplies Officer அல்லது Revenue அதிகாரி அல்லது மற்ற அதிகாரிகள் எல்லாம் வந்து அவர்களை verify செய்ய வேண்டும். அதற்குப் பின்னாலே verify செய்து E-Form என்று சொல்கிறார்களே, அதிலே போய்ப் பார்த்து அதிலே இருக்கிறதா, இல்லையா என்று பார்த்து, திரும்பவும் அவர்கள் குடும்ப அட்டைக்கு சிபாரிசு செய்து சென்னைக்கு அனுப்பி, சென்னையிலே நீங்கள் print செய்து, அங்கேயிருந்து திரும்பவும் சம்பந்தப்பட்ட அந்த இடத்திற்குப் போவதற்கு பல மாதங்கள் ஆகிவிடுகின்றன. அதனாலே குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு நியாயமான, உண்மையான குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு இந்தப் பணியை மாவட்ட அளவிலேயே நீங்கள் செய்தால் நலமாக இருக்கும் என்று உங்களுக்கு ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாவட்டங்களிலே இருக்கிறவர்கள் அங்கே தணிக்கை செய்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே அந்தக் குடும்ப அட்டையை அவர்கள் வழங்கினால் ஏழை மக்கள் பயன் அடைவார்கள், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களை வாழ்த்துவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம். சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் நம்முடைய இன்றைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அமைச்சராக இருந்த காலத்தில் R.I.C. 1999, அதற்குப் பின்னாலே வந்த ஆட்சியில் 2001, 2002 என்றும் 2000—லும், அதற்குப் பின்னாலே வரன்முறைப்படுத்துகிற சட்டம் கொண்டு வந்து கட்டடங்களை வரன்முறைப்படுத்துகிற ரூபாய்களை அரசு வசூல் அதன்மூலமாக சில கோடிக்கணக்கான ரூபாய்களை அரசு வசூல் செய்தது. இன்றைக்கு அந்த நான்கு R.I.C.-கள் அடிப்படையில், சென்னையிலே விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்துகிறோம் என்று சொல்லி அரசும் பிளான்களைப் போட்டு, அந்த பிளான்களை submit செய்து அதற்குப் பின்னாலே ஒரு சதுர அடிக்கு இவ்வளவு ரூபாய் என்று கட்டியிருக்கிறார்கள், சில பேர் கட்டியிருக்கிறார்கள். சில பேர் எவ்வளவு கட்ட வேண்டும் என்று அறிவித்த பின்னாலே கட்டுவதாகச் சொன்னார்கள். ஆனால், விஷயம் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. நீதிமன்றம் அந்த R.I.C. 1999 செல்லும், மற்றதெல்லாம் செல்லாது என்று சொல்லியிருக்கிறது.

[திரு. டி. சுதர்சனம்] [2007 ஜனவரி 27

அது மட்டுமல்ல, நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அரசு ஒரு உறுதிமொழியைக் கொடுத்ததன்பேரில்தான் சென்னையிலே நடைபெற்றது. கோவையிலும், மதுரை போன்ற பல்வேறுபட்ட நகரங்களிலே இந்தக் கட்டடங்களை வரன்முறைப்படுத்துகின்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது.

*முற்பகல் 11–10*

இன்றைக்கு அந்தத் திட்டம் எப்படியிருக்கிறது? மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிலத்தின் விலை வேகமாக உயர்ந்துவிட்டது. அடுக்குமாடி வீடுகள் கட்டிவிட்டார்கள். அவர்களுக்கு வரன்முறை சட்டத்தின்கீழ் அதற்கு வேண்டிய பணமும் கட்டிவிட்டார்கள். இந்த அரசு கொடுத்திருக்கின்ற உத்தரவாதத்தின் பேரிலே அவர்கள் பணத்தைக் கட்டிவிட்டார்கள். இதற்கு நாம் இப்போது என்ன செய்வது என்று ஆராய்ந்து பார்ப்போமேயானால், இன்னொரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து அந்தக் கட்டடங்களை வரன்முறைப்படுத்துகின்ற திட்டத்திற்கு உயிர் கொடுக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் தேதி சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலே இரவு நேரத்தில் ஒரு சுமோ கார் விபத்தில் சிக்கியது. விபத்தில் சிக்கிய காரிலிருந்து TEMS booster வகை வெடிமருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக 'Q' Branch Police விசாரணை மேற்கொண்டதில் அந்த வெடி பொருள்கள் தூத்துக்குடி வழியாக இலங்கைக்கு, விடுதலைப் புலிகளுக்காக கடத்தப்பட இருந்தது தெரிய வந்தது. அதன் பின்னர், தமிழகக் கடலோரப் பகுதிகளில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் வலையில் விலை உயர்ந்த ராக்கெட் குண்டுகள் கிடைத்தன. அவை தமிழகத்திலிருந்து இலங்கைக்குக் கடத்திச் சென்றபோது தவறி கீழே விழுந்தவையாக இருக்கலாம் அல்லது கடலோரக் காவல் படையிலிருந்து தப்பிப்பதற்காக, கடத்தியவர்களால் கடலில் தூக்கியெறியப்பட்டவையாக இருக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. கடந்த 24 ஆம் தேதியன்று வெடிகுண்டு தயாரிப்பதற்கும், rocket launcher-களை இயக்கவும் தேவைப்படும் இரும்பு உருளைகளை, சென்னையிலேயிருந்து இலங்கைக்குக் கடத்த முயன்றவர்களை, விடுதலைப் புலிகள் என்று கருதப்படக்கூடியவர்கள் ஐந்து பேரையும்,



2007 ஜனவரி 27] [திரு. டி. சுதர்சனம்]

அவர்களது கூட்டாளிகள் நான்கு பேரையும், 'Q' Branch Police கைது செய்திருக்கிறது. இவர்களிடமிருந்து 5 ஆயிரம் கிலோ எடையுள்ள இரும்பு உருளைகள் கைப்பற்றப்பட்டன. இவர்கள் பயன்படுத்திய கார்; மினி லாரி மற்றும் 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பணம் ஆகியவற்றையும் போலீசார் பறிமுதல் செய்திருக்கிறார்கள். தற்போது கைது செய்யப்பட்டுள்ள தூத்துக்குடியைச் சேர்ந்த பிரபாகரன் கொடுத்திருக்கும் வாக்குமூலத்தில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள இருப்பதாகச் சொல்கிறார்கள். கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் பல முறை வெடிகுண்டுத் தயாரிப்புப் பொருள்களைக் கடத்தி, ஒவ்வொரு முறையும் வெடிகுண்டுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு, 50 இலட்சம் ரூபாய் தந்தனர் என்று சொன்னதாகத் தெரிகிறது. தமிழக அரசு எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். தமிழகம், ஆயுதக் கடத்தல்காரர்களின் தளமாக மாறிவிட்டால் என்ன நடக்கும் என்பதைக் கடந்த காலங்களிலே நாம் அனுபவித்துள்ளோம். தமிழகத்தை ஆயுதக் கிடங்காக மாற்ற யார் முயற்சித்தாலும், அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக, வேண்டியவர்களாக இருந்தாலும், முகதாட்சண்யம் பாராது, கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த வாரம், தமிழகத்திற்கு வந்திருந்த நம்முடைய உள் துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு திருப்திகரமாக இருக்கிறது என நற்சான்றிதழ் அளித்துள்ளார்கள். இந்த நற்பெயரைக் கெடுக்க ஏதாவது சதி நடக்கிறதா என்பதிலும் தமிழக அரசு கவனமாக இருக்க வேண்டும். தமிழக மக்கள் எதை வேண்டுமானாலும் பொறுத்துக்கொள்வார்கள்; தமிழகத்தின் அமைதியைக் குலைக்கும் எந்த முயற்சியையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தமிழகத்தை நோக்கி பெரும் முதலீடுகள் வந்துகொண்டிருக்கின்றன. இதைப் போன்ற ஆயுதக் கடத்தல்களும், வன்முறைகளும், நடமாட்டங்களும் தொழில் வளர்ச்சியைக் கெடுத்துவிடும். சில மாதங்களுக்கு முன்பு ஒரு அரசியல் தலைவர், தமிழகத்தை வெகு விரைவிலே காஷ்மீரமாக மாற்றுவோம் என்று சொன்னதை நமது முதலமைச்சருக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முந்தைய அரசின் மெத்தனப் போக்கின் காரணமாக — இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், எதிர்கால தொழில்நுட்பமாக விளங்கப் போகிற Hydrogen எரிபொருள் மூலக்கூறு

[திரு. டி. சுதர்சனம்] [2007 ஜனவரி 27

ஆய்வுக்காக, சென்னை, I.I.T. மூலமாக ஒரு ஆய்வுப் பூங்கா உருவாக்கத் திட்டமிட்டது. இந்தியாவின் ஆய்வு மற்றும் அபிவிருத்தியில், Research and Development–ல் இது ஒரு புதுமையான முயற்சி. 15 இலட்சம் சதுர அடியில் அமைய இருக்கும் இந்த ஆய்வுப் பூங்கா நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி அமைப்புகளைக் கொண்டிருக்கும். இதற்குத் தேவையான இடத்தைப் பலமுறை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் கேட்ட பின்பும் இடம் வழங்கப்படவில்லை. உடனடியாக, இந்த ஆய்வுப் பூங்கா தொடங்கப்படத் தேவையான இடத்தினை தாமதமின்றி I.I.T.–க்கு வழங்கி ஒரு நவீன முயற்சி சென்னையிலே தொடங்கப்பட மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர், முத்தமிழறிஞர் அவர்கள், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் என்னுடைய பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–15*

இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு பல்வேறு போராட்டங்களை, பல்வேறுபட்ட தலைவர்கள் அன்றைக்கு நடத்தினார்கள். அந்தச் சுதந்திரப் போராட்ட வீரர்கள் இன்றைக்கு சில பேர்களே இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்தச் சில பேர்களுக்கு, மத்திய அரசு, ஓய்வூதியமாக 3 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறது. நம்முடைய அரசு அவர்களுக்கு 500 ரூபாய் கொடுக்கிறது. ஆனால், பல்வேறு மாநிலங்களிலே பார்த்தோமானால், மத்திய அரசு ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கு உத்தரப் பிரதேசத்திலே ரூ. 4,000/– கொடுக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்திலே ரூ.4,000/– கொடுக்கிறார்கள். டெல்லியிலே ரூ. 2,500/–, கேரளாவிலே ரூ. 3,000/–, பாண்டிச்சேரியிலேகூட ரூ. 2,000/- கொடுக்கப்படுகிறது. பாண்டிச்சேரியிலேகூட ரூ.2,000/– கொடுக்கின்ற நிலையில், நம்முடைய தமிழக முதல்வர், சுதந்திரப் போராட்ட வீரர்கள் மீது, மிகவும் பரிவு கொண்டவர்கள், பாசம் கொண்டவர்கள். இந்த நாட்டு விடுதலைப் போராட்டத்திலே பங்கு கொண்ட அவர்களுக்கு, ரூ.500/–லிருந்து நீங்கள் தயவுசெய்து, பிற மாநிலங்களைப் போன்று அந்த ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் துவங்கியபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், சில காரணங்களைச் சொல்லி வெளிநடப்புச் செய்தார்கள். என்ன காரணம் என்று சொன்னால், இந்த அரசு முல்லைப் பெரியாறு



2007 ஜனவரி 27] [திரு. டி. சுதர்சனம்]

அணைப் பிரச்சினையிலே தீவிரம் காட்டவில்லை. உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக நாங்கள் 1 கோடியே 96 ஆயிரம் உழவர் மக்களுக்கு, எங்கள் ஆட்சிக் காலத்திலே பல்வேறு நன்மைகளைச் செய்தோம், ஆனால்; இவர்கள் அதைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்று ஒரு காரணம் காட்டி, அன்றைக்கு ஓர் அறிக்கையை இந்த மன்றத்திலே வாசித்துவிட்டுப் போனார்கள். அந்த அறிக்கையிலே என்ன சொன்னார்கள் என்று சொன்னால், முல்லைப் பெரியாறு பிரச்சினையில், இந்த அரசின் மெத்தனப் போக்கை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது என்று சொன்னார்கள். முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, இன்றைக்கு, நேற்று ஏற்பட்டது அல்ல. நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, இந்த முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையைப் பற்றி, சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினீர்கள். என்ன செய்ய வேண்டும் என்று அத்தனைக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசினீர்கள். அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் கலந்துகொண்டது. அவர்கள் ஏதாவது உருப்படியான யோசனைகள் சொன்னார்களா என்று சொன்னால், உருப்படியான யோசனை ஒன்றும் சொல்லவில்லை.

இன்றைக்கு இந்த அவையைவிட்டு வெளியேறுகின்றபோது, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் இந்த அரசின் மெத்தனப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் 27–2–2006 அன்று தனது இறுதித் தீர்ப்பில் தமிழக அரசின் தற்போதைய நீர்மட்டமான 136 அடியில் இருந்து 142 அடிக்கு நீரைத் தேக்கி வைத்துக்கொள்ளலாம் எனவும், மற்றும் அணையை பலப்படுத்தும் பணியினை மேற்கொள்ளலாம் எனவும், கேரள அரசு, இப்பணிகளை மேற்கொள்வதற்குத் தமிழக அரசிற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவின்படி பெரியாறு அணையினைப் பலப்படுத்தும் பணியில், மீதம் உள்ள பணியான சிற்றணையைப் பலப்படுத்துவதற்கு ரூ.1.72 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியது. இந்தத் தீர்ப்பினை எதிர்த்து கேரள அரசால் தாக்கல் செய்யப்பட்ட மறு சீராய்வு மனு, உச்ச நீதிமன்றத்தில் 27–7–2006 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் 27–2–2006 அன்று அளித்தத் தீர்ப்பினைச் செயல்படுத்த இயலாத வகையில், மறைமுகமாக கேரள அரசு, கேரள நீர்ப் பாசன மற்றும் நீர்வளப் பாதுகாப்புச் சட்டம், 2003–ல் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. இந்தத் திருத்தத்தினை

எதிர்த்து தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கிலே 25-9-2006-ல் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியவாறும் அதனைத் தொடர்ந்து 23-10-2006 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின்படியும் 29-11-2006 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் முன்னிலையில், தமிழக முதலமைச்சர் அவர்களும், கேரள முதலமைச்சர் அவர்களும் புது டெல்லியிலே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் கேரள அமைச்சர்கள் இடையேயான பேச்சுவார்த்தை 18-12-2006 அன்று புது டெல்லியில் நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இந்த நிலையில் தமிழக அரசு 11-01-2007 அன்று இவ்வழக்கில், உச்ச நீதிமன்ற அறிவுரைப்படி புது டில்லியிலே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, ஒரு துணை மனுவை Supplementary Affidavit உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிகிறது.

10 ஆண்டு காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள், இன்றைக்கு என்ன சொல்லிவிட்டுப் போகிறார்கள்? இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது; நாங்கள் ஆட்சியிலே இருந்தால் இந்த நிலையிலே இவ்வாறு தீர்வு காண்போம் என்று ஏதாவது உருப்படியான யோசனையை இந்த அரசிற்குச் சொல்லி இருக்கலாம். எந்த உருப்படியான யோசனையையும் அவர்களாலே சொல்ல முடியவில்லை. நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 5 ஆண்டு காலம் பொதுப் பணித் துறை அமைச்சர் பொறுப்பிலே இருந்தார்கள். ஆனால், பொத்தாம் பொதுவாக முல்லைப் பெரியாறு பிரச்சினையிலே அரசின் மெத்தனப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று ஒரு வரியை மட்டும் சொல்லிவிட்டுச் சென்றார்கள். இந்தத் தீர்ப்பு வந்தபோது யார் ஆட்சியிலே இருந்தது? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் இந்தத் தீர்ப்புக்கு ஏதாவது மனுச் செய்தார்களா என்பதை நான் பொதுப் பணித் துறை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்தது. அது 2-வது மாதம். அதற்குப் பிறகு அவர்கள் ஆட்சியிலே, தேர்தல் வந்து வீட்டுக்குப் போகிற வரையில் ஒன்றே ஒன்றைச் செய்தார்கள். என்ன செய்தார்கள்? உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசு கொண்டு வந்த Kerala Irrigation Amendment Act என்பதை எதிர்த்து ஒரு வழக்கு தொடுத்தார்கள். வழக்கு தொடுத்தார்கள் என்பதுகூடத் தவறு. ஒரு மனு போட்டார்கள். அந்த மனுவின்மீது நம்பர் கூட வாங்கவில்லை. ஒரு கேஸ் நடத்த வேண்டுமென்றால் கேஸ் மனு போட வேண்டும். அதற்கு அப்புறம் நம்பர் வாங்க வேண்டும். நம்பர் வாங்கினால்தான் அதற்கு அப்புறம் அது hearing-க்கு வரும். நம்பரே வாங்காமல் அதைப்பற்றி திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்குப் போய் விட்டது அண்ணா தி.மு.க. ஆட்சி. கலைஞருடைய ஆட்சி வந்த பிறகுதான் அந்த Petition மீது நம்பர் வாங்கி இன்றைக்கு அதனமீது வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் அவர்கள் காட்டிய அக்கறை.

**திரு. டி. சுதர்சனம்:** நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சருடைய பதிலுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் இந்த அரசின்மீது குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டுப் போகிறார்கள். மெத்தனப் போக்கு என்று சொல்லுகிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர்மீது எப்போதுமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களுக்கு அன்பு மிக அதிகம். ஏனென்று சொன்னால், அமைச்சர் மெத்தனப் போக்காக இருக்கிறார் என்று அவர்கள் சொல்லிவிட்டுப் போகிற காரணத்தாலே, பொதுப் பணித் துறை அமைச்சர் என்னுடைய நீண்ட நாள் நண்பர் என்ற முறையிலே அவருக்கு நான் வக்காலத்து வாங்கிப் பேச வேண்டிய நிலை இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் மெத்தனப் போக்கு என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்களே தவிர, இந்த முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையிலே இப்படித்தான் செய்ய வேண்டும் என்று இதற்கு ஆக்கபூர்வமான யோசனைகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 5 ஆண்டுகள் ஆண்டபோதும் சொல்லவில்லை, இப்போதும் சொல்லவில்லை, எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதும் அவர்களாலே சொல்லமுடியவில்லை என்பதை இந்த நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். எதை வேண்டுமானாலும் சொல்லலாம். யார்மீது வேண்டுமானாலும் சொல்லலாம் என்று...

[2007 ஜனவரி 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையில் மட்டுமல்ல, காவிரிப் பிரச்சினையிலும் குளறுபடி செய்துவிட்டுப் போனது அ.தி.மு.க. ஆட்சி. ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன். வழக்கு தொடுத்தோம். Tribunal போட்டோம். அதைக் கொண்டு வந்தது கலைஞர். அதிலே முதலில் 3 கட்டங்கள். ஒன்று cross–examine பண்ண வேண்டும். பிறகு argument and final cross–examination பண்ணுவார்கள். வழக்கு documentation பண்ண வேண்டும். இந்த documentation prepare பண்ணி Tribunal–ல் கொடுத்தது திரு. பராசரன். அதற்கு அப்புறம் cross–examination–லே இருந்ததும் பராசரன். ஆனால், final argument–லே அவர் இல்லை. அவரை எடுத்துவிட்டார்கள். இதே சபையில் கடந்த முறை கேட்டேன் ஏன் எடுத்தீர்கள் என்று. கங்குலி என்று ஒருவர் இருக்கிறார். அவர் இவரைவிட brilliant, ரொம்ப கெட்டிக்காரர் அவர் பார்த்துக்கொள்வார் என்றார் முதலமைச்சர்; அன்றைய முதலமைச்சர். ஆனால், final argument வருகிறபோது திரு. நரிமன் அந்தப் பக்கத்திலே argue பண்ணுகிறார். இந்தப் பக்கம் இந்த 3 கட்டங்களிலும் பங்கேற்காத வைத்தியநாதனைக் கொண்டு வந்து போட்டுவிட்டு, கங்குலியையும் எடுத்து விட்டார்கள். ஆக ஒரு வழக்கில், நீதிமன்றத்தில் போட்ட வழக்கில், வழக்கறிஞர்களை நியமிப்பதில் சொந்த அபிலாஷைகள் காரணமாக பராசரனை எடுத்து விட்டு, அதிருப்தி காரணமாக எடுத்து விட்டு, வழக்கைக் குளறுபடி செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அதற்குமேல்கொண்டு இறுதித் தீர்ப்பு வர இருக்கிறது. ஆகையினால், இதிலே ஏதாவது ஏற்படுமானால்கூட, ஒரு சிறு மாற்றுக் குறையும் என்றால்கூட அதற்கு அண்ணா தி.மு.க.–தான் பொறுப்பு ஏற்க வேண்டும், காவிரி விவகாரத்திலேயும் என்பதை இப்பொழுதே இந்த அவையிலே சொல்லி வைக்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ப. ரங்கநாதன் தலைமை)*

**திரு. டி. சுதர்சனம்:** இப்படி பொத்தாம்பொதுவாக குற்றச்சாட்டுகளைச் சொல்வது மட்டுமல்லாமல், இன்னொன்றையும் அன்றைக்குச் சொல்லிவிட்டுப் போனார்கள். முதலமைச்சருடைய உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று சொல்லி ஏதோ 1 கோடியே 99 இலட்சம் பேர் அந்தத் திட்டத்தின்மூலமாக பயன்பெற்றது போலவும் இந்த



2007 ஜனவரி 27] [திரு. டி. சுதர்சனம்]

ஆட்சியிலே 66 இலட்சம் பேர் மட்டுமே இப்போது பதிவு செய்திருப்பது போலவும் ஒரு வேடிக்கையான விஷயத்தை அவர்கள் குற்றச்சாட்டாக சொல்லிவிட்டுப் போனார்கள்.

முற்பகல் 11–25

இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? முதலிலே 2000 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டது இந்தத் திட்டம். 100 ரூபாய் செலுத்தி உறுப்பினராகலாம். அதிலே இதுவரை 7 இலட்சம் பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படிப் பெறப்பட்ட தொகை வங்கிகளிலே டெபாசிட் செய்யப்பட்டது. 7 கோடி ரூபாய் வங்கிகளிலே டெபாசிட் செய்யப்பட்டது. இந்தியன் வங்கி, தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிறுவனம், Tamil Nadu Power Finance Corporation போன்றவற்றில் டெபாசிட் செய்யப்பட்டது. இத்திட்டம் அ.தி.மு.க. ஆட்சியிலே செயல்படுத்தப்படாமல், பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று 15–8–2005 அன்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 66,49,895 குடும்ப அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், 2,02,73,879 விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் பதிவு செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. 2001–ல் பதிவு செய்யப்பட்ட 7.32 இலட்சம் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இத்திட்டம் அறிவிக்கப்பட்ட 6 மாத காலத்திற்குள் அதாவது 31–3–2006 வரை இத்திட்டத்தால் பயனடைந்தோர் எண்ணிக்கை, சுமார் 6 மாத காலத்திற்குள்ளாக, தேர்தல் வருவதற்கு 3 மாதங்களுக்கு முன்னாலே, அதற்கு முன்னாலே 3 மாதங்களிலே, மொத்தம் 6 மாதங்களிலே இவர்கள் யாருக்குக் கொடுத்தார்கள்? 87.39 கோடி ரூபாய் என்று புள்ளிவிவரங்கள் சொல்லப்படுகின்றதே இன்றைக்கு, அந்தப் பணத்தை யாருக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னால், உண்மையான உழவர்களுக்கு அவர்களால் கொடுக்கப்படவில்லை. ஏழை எளிய மக்களுக்கு அவர்களால் கொடுக்கப்படவில்லை. சமுதாயத்திலே பின் தங்கிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்தத் திட்டம் உதவவில்லை. ஆனால், தேர்தல் வருகிறது என்று சொல்லி இந்தத் திட்டத்தின் மூலமாக அந்த 87.39 கோடி ரூபாயை, அவர்கள் கட்சிக்காரர்களுக்கு வழங்கினார்கள் என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய விவசாயத் தொழிலாளர்கள் சமூகப்

[திரு. டி. சுதர்சனம்] [2007 ஜனவரி 27

பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் மூலமாக எந்தப் பயனையும் எட்டவில்லை என்று இன்றைக்கு அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாகப் பல்வேறு பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏழை எளிய விவசாயப் பெருமக்கள் அந்தத் திட்டத்தின் மூலமாகப் பயனடைந்து வருகிறார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஒரு சிறு பிரச்சினை. சென்னையைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளிலே கல் குவாரி நடத்துகின்ற உரிமையாளர்கள் பிரச்சினை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கனிம வளச் சலுகை விதிகள் உருவாக்கப்பட்டன. விதி 9-ன்படி கருங்கல் குவாரிகளின் குத்தகை காலத்தைத் தொடர்ந்து குத்தகையைப் புதுப்பித்துக் கொடுக்க வகை செய்யப்பட்டிருந்தது. கல் குவாரிகளை உருவாக்கிய குத்தகைதாரர்கள், தொடர்ந்து குத்தகை உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டால்தான், பலனடைந்து வாழ்வு நடத்த முடியும். ஆனால், 16-6-1994-ல் அரசாணை 166-ஐப் போட்டு, விதி 9-ஐ நீக்கிவிட்டு, விதி 39 இணைக்கப்பட்டது. தொடர்ந்து குத்தகையைப் புதுப்பித்துக் கொடுக்காத காரணத்தினால், அந்தத் தொழிலின் ஸ்திரத் தன்மை பாதிக்கப்பட்டது. தற்போது கருங்கல் குவாரிகளை tender-cum-auction-ல் விடுகிறார்கள். புதிய இடங்களிலே tender-cum-auction-ல் விடுவதற்குப் பதிலாக, ஏற்கெனவே முதலீடு செய்து உருவாக்கிய கருங்கல் குவாரிகளை tender-cum-auction-ல் விடும்பொழுது, ஏற்கெனவே முதலீடு செய்தவர்களும், முதலீடு செய்ய முடியாதவர்களும், போட்டி போட இயலாத நிலை உருவாகியிருக்கிறது.

கதர் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சி ஆணையம், கருங்கல் குவாரிகளை உருவாக்க மானியத்தோடு கடனுதவி செய்யும் திட்டத்தைத் தீட்டியது. நமது அரசு 7-12-1998-ல் கதர் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சி ஆணையத்திற்குக் கடிதம் எழுதி, கருங்கல் குவாரிகளை உருவாக்க மானியத்தோடு கடனுதவி செய்ய அவர்களுக்கு நிபந்தனைகள் என்ன என்று கேட்டது. அதற்கு கதர் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சி ஆணையம், கருங்கல் குவாரிகளை உருவாக்கப் பல வருடங்கள் ஆவதால், தொடர்ந்து குத்தகையைப் புதுப்பித்துக் கொடுக்க வேண்டும் அல்லது நீண்டகாலக் குத்தகை கொடுக்க வேண்டுமென்று பதில் அனுப்பியது. இத்திட்டத்தை



2007 ஜனவரி 27] [திரு. டி. சுதர்சனம்]

நிறைவேற்றியிருந்தால், தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான புதிய கருங்கல் குவாரிகளை உருவாக்கியிருக்கலாம். இலட்சக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்புப் பெற்றிருப்பார்கள். கருங்கல் மற்றும் கருங்கல் ஜல்லி விலை இவ்வளவு உயர்ந்திருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் கருங்கல் மற்றும் கருங்கல் ஜல்லிகளில் 60 சதவீதம் அரசாங்க வேலைக்காக வாங்கப்படுகிறது. இந்த விலையேற்றத்தினால் அரசுக்கு மிகப் பெரிய நஷ்டம் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வளவு பொருளாதாரச் சீர்கேடுகளுக்குக் காரணமாக இருப்பது, கனிம வள இலாக்கா பின்பற்றும் உண்மை நிலவரத்திற்கு மாறான விதிமுறைகளும், அணுகுமுறைகளும்தான் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-30*

பல்வேறு நலத் திட்டங்களை எல்லாம் இந்த அரசு செய்து இருக்கிறது. எட்டு மாத காலத்திலே இந்த அரசு பலவேறு வளர்ச்சிப் பணிகளைச் செய்து, இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு, பல்வேறு விதங்களிலே நல்வாழ்வு தேடிக் கொடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கவர்னர் உரையை, சிறப்பான உரையைத் தயாரித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்குத் தமிழகம் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. பல்வேறு துறைகளிலே முன்னேறிக் கொண்டிருக்கின்ற இந்தத் தமிழகம், ஒரு புல்லட் இரயில் வேகத்திலே சென்றுகொண்டு இருக்கிறது என்பதைச் சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. ரங்கநாதன்):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. சட்டமன்றப் பேரவை விதி 88 உள்விதி (1)-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேவைப்பட்டால் உட்கார்ந்தே பேச அனுமதி அளிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[2007 ஜனவரி 27

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து நாட்களாக இந்த மாமன்றத்தில் இதுவரையிலே ஆளுநர் உரையின்மீது 37 பேர் உரையாற்றி, 38-வது நபராக நான் என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்க உங்களுடைய அனுமதியோடு இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன்.

ஆளுநர் உரையிலே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக, முதல் குரல் எழுப்பிய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் — எப்போதுமே அவருடைய உரை இனிப்பாக இருக்கும் கேட்பதற்கும், இரசிப்பதற்கும். அந்த இனிப்பு சில நேரங்களில் கற்கண்டை மெல்லுவதைப்போல இருக்கும். அதாவது, கொஞ்சம் கரடு முரடாகவும் இருக்கும். (சிரிப்பு) ஆனால், இனிப்பாக இருக்கும். அந்த வகையிலே அவருடைய உரையை அன்றைக்கு ஆற்றி, இந்த அரசுக்குத் தரவேண்டிய முன்னறிவிப்புகளை, எச்சரிக்கைகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடல் மடை திறந்தாற்போல, நம்முடைய கழக உறுப்பினர்களுடைய சார்பில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதத்தைத் தொடங்கிவைத்துப் பேசிய திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள், பல கோரிக்கைகளை எடுத்து வைத்து, அவருடைய உரையை நிகழ்த்தியிருக்கின்றார்.

இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய அந்தக் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய நம்முடைய சுதர்சனம் அவர்களும், இந்த அரசுக்குத் தேவையான அறிவுரைகளை எல்லாம் அனுபவரீதியாக எடுத்து வைத்து இருக்கிறார்கள்.

இந்த அரசுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்பதிலே காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்கள் காட்டிய அக்கறை, இப்போது அமைதியாக இருக்கிற தமிழகத்தில் அமளிகளை உருவாக்குவதற்காக ஏதேதோ செய்திகளைச் சிலர் வெளியிடுவதைப் பற்றியதாகும். அந்தச் செய்திகளின் மூலமாக, தமிழகத்திலே மீண்டும் இலங்கையினுடைய தீவிரவாதிகள் படையெடுத்திருக்கிறார்களோ என்கின்ற அச்சத்தை உருவாக்க, பீதியைக் கிளப்ப, பெருமுயற்சி நடைபெறுகிறது என்றெல்லாம் இங்கே இலங்கைப் பிரச்சினையைப்பற்றி பேசும்போது எடுத்துக் காட்டினார்கள்.



2007 ஜனவரி 27] [கலைஞர் மு. கருணாநிதி]

முற்பகல் 11-35

இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதி சிவா என்கின்ற சிவகரன், தமிழகத்திலே மண்டப முகாமை விட்டு வெளியே வந்து, சென்னை, திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலே தங்கியிருந்தார். அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்ததில், அவர் மேலும் சிலரோடு சேர்ந்து, கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவந்தது. 23-1-2007 அன்று, இந்த சிவகரன் தன் கூட்டாளிகள் 7 பேரோடு, 5 இலங்கைத் தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 பேர், இவர்களோடு இணைந்து, சென்னை பெரியமேட்டில் ஒரு லாரியில் சந்தேகத்திற்கிடமான பொருட்களை ஏற்றிக்கொண்டு இருக்கும்போது, 'Q' பிரிவு போலீசார் சோதனை செய்ததில், ஒரு மினி லாரியில், 8 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட, 2,000 கிலோ எடையுள்ள இரும்பு குண்டுகள், 40 சாக்கு மூட்டைகளில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பணம், மினி லாரி, ஒரு டாட்டா இண்டிகா கார் மற்றும் 3 செல் போன்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது. விசாரணையில், மேற்படி இரும்பு குண்டுகள் மும்பையிலேயிருந்து லாரி சர்வீஸ் மூலமாகத் தருவிக்கப்பட்டன என்று தெரிவித்தார்கள்.

மேலும், நடைபெற்ற விசாரணையில், 60 சாக்கு மூட்டைகளில், இரும்பு குண்டுகள், இலங்கைக்குக் கடத்தப்படுவதற்காக, தூத்துக்குடியிலே வசிக்கும் பிரபாகரன் என்கிற வேலுச்சாமி என்பவர் ஏற்பாடு செய்த வீட்டில் இருப்பதாகக் கிடைத்த தகவல்படி, அவர் அடையாளம் காட்டிய டேவிஸ்புரம் என்ற இடத்திலுள்ள வாடகை வீட்டைச் சோதனை செய்ததில், தலா 50 கிலோ எடை கொண்ட 60 சாக்கு மூட்டைகளில் இரும்பு குண்டுகள் கைப்பற்றப்பட்டு, எதிரி பிரபாகரன் என்கிற வேலுச்சாமி, 24-1-2007 அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக, வழக்கு பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட 9 எதிரிகளும், நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டு, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். 'Q' பிரிவு போலீசார், மராட்டிய மாநிலத்திற்கும் புலன் விசாரணைக்கெனச் சென்று வந்திருக்கிறார்கள். இந்தச் செய்தியைத்தான் நம்முடைய சுதர்சனம் அவர்கள் பேசும்போது, இந்த அபாயத்தை மேலும் வளரவிடக் கூடாது; அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்கே உரிய பாச உணர்வோடு, இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நான் அவருக்கும், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாத் தோழமைக் கட்சிகளினுடைய உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்வேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இதுபோன்ற வன்முறைகளை நிச்சயமாக அனுமதிக்காது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கைப் பிரச்சினையிலே ஒரு சுமுகமான முடிவு காண வேண்டும் என்று எல்லோரும் எண்ணுகிற நேரத்தில், "நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்கின்ற அளவிற்கு, பலர் இன்றைக்கு சிந்திக்கின்ற இந்தக் காலகட்டத்தில், இதுபோன்ற செய்திகள் பின்னடைவைத்தான் அவர்களுக்கு ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

சில தகவல்கள் இங்கே கூறப்பட்டன. அதிலும், குறிப்பாக, நம்முடைய சுதர்சனம் அவர்கள் சொன்னார்கள். எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. வேறு மாநிலங்களில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கெல்லாம் அதிகத் தொகை வழங்கப்படுகிறது; ஆனால், இங்கே 500 ரூபாய்தான் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவருக்கு யாரோ ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் சுதந்திரமாக ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருப்பார் என்று கருதுகின்றேன்.

மாநில அரசின் ஓய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களுடைய எண்ணிக்கை 1,112. அவர்களுக்குத் தரப்படுகின்ற ஓய்வூதியம் 3,000 ரூபாய். அஃதன்னியில், மருத்துவப் படி 15 ரூபாய் தரப்படுகிறது. அந்த ஓய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு — அவர்களுடைய எண்ணிக்கை 2,114 — அவர்களுக்கு 1,500 ரூபாய் தரப்படுகிறது. 500 ரூபாய் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து அவர்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் அதிகம் வேண்டுமென்றால், பட்ஜெட் நேரத்திலே நம்முடைய நிதியமைச்சர் அதைப் பற்றிக் கவனிப்பார் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பொழுதுள்ள நிலைமையை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 11–10

இன்னொரு தவறான தகவல்; நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பேசும்பொழுது சொன்னார். கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். கூட்டுறவு அமைப்புகளிலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு உரிய போனஸ் அல்லது பொங்கல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இப்போது இங்கு இல்லாத காரணத்தால் இதைக் கேட்டு வேல்முருகன் அவரிடத்திலே சொல்ல வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். இப்படிச் சில தகவல்கள் திருத்தப்படவேண்டியவைகளாக இங்கே சொல்லப்பட்டாலும்கூட அந்தத் தகவல்களிலே உண்மை இருக்குமேயானால் அவைகளை நிச்சயமாகக் கவனித்து இந்த அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்னொன்று குறிப்பிட்டார். மறைமலை அடிகளாரை நாம் மறந்துவிட்டதைப்போல நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் இங்கே சொன்னார்கள். இல்லை. மறைமலை அடிகளாருடைய புத்தகங்களையெல்லாம் இந்த அரசு பெற்று, அதற்கான ஓர் உரிய தொகையை, நல்ல தொகையை ஏற்கெனவே வழங்கியிருக்கிறது. 1997 ஆம் ஆண்டு கழக அரசு இருந்தபோது மறைமலை அடிகளுடைய நூல்களை நாட்டுடைமையாக்கி அவரது மரபுரிமையாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றோம். தற்போது மறைமலை அடிகளுடைய பெயர்த்தி சுந்தரத்தம்மையார் வைத்திருக்கும் நூல்களைப் பெற்றுக்கொண்டு ஒரு இலட்சம் ரூபாயும், அவரது மருத்துவச் செலவுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கியதோடு, சுந்தரத்தம்மையாரது மகள் கலைச்செல்விக்கு அரசுப் பணியும் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மறைமலை அடிகளின் நினைவைப் போற்றி இந்த அரசு அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1967–ல் ஆட்சிக்கு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். 1969–லே அண்ணா மறைவுக்குப் பிறகு நான பொறுபபேற்றுக்கொண்டபொழுது

அங்கே சைதாப்பேட்டை அருகிலே இருந்த பாலத்திற்கே மறைமலை அடிகள் பாலம் என்று பெயர் வைத்தவன்தான் நான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நான் மறைமலை அடிகளுடைய தபால் தலை வெளியிடுவதற்குத்தானா தயங்குவேன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நிச்சயமாக அது நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஜி.கே. மணி அவர்கள் மிக முக்கியமான ஒகேனக்கல் திட்டத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார். ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி அதற்காகக் கோரப்பட்டுள்ளது. இந்த வாரம்தான் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் தருமபுரி மாவட்டம் சென்று திட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார்கள். மைய அரசும் இத்திட்டத்திற்கு ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெற மிகுந்த முன்னுரிமை அளித்து ஜப்பான் அரசுக்குத் தெரிவித்துள்ளது. ஜப்பான் அரசுக்குத் தெரிவித்துள்ள இந்தச் செய்தி, ஜப்பான் நாட்டு நிதியுதவி கிடைக்க வாய்ப்புகளை அதிகமாக்கியிருக்கிறது. எனினும், ஜப்பான் நிதியுதவி ஏதேனும் ஒரு காரணத்தால் கிடைக்காவிட்டால் அரசு வேறு நிதி ஆதாரம் பெற்று இத்திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றும் என்பதை திரு. மணி அவர்களுக்கு நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் கேட்டுக்கொண்டபடி, மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் திட்டத்தில் பணியாற்றிய தற்காலிகப் பணியாளர்களுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அரசுப் பணி வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெளிவாக்க விரும்புகின்றேன். அவர்களுக்குப் பணி கொடுக்காமல் இல்லை. பணி வழங்கப்பட்டு வருகின்றது.

நம்முடைய ஊராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்ததைப் பற்றியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் ஆதி திராவிட மக்கள் பெற இருந்த உரிமையைக் கடந்த காலத்திலே பெறமுடியாமல் போய், இப்பொழுது இந்த ஆட்சியில் இங்கே வீற்றிருக்கின்ற எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களுடைய ஒத்துழைப்போடு அங்கே தேர்தல் நடைபெற்று, அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் இப்பொழுது அங்கே அந்தக் கிராம ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதுமாத்திரமல்ல, ஆதி திராவிட மக்களுக்காக இந்த அரசு எடுத்த முயற்சி அதோடு மாத்திரம் நிற்கவில்லை. உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



தேனி மாவட்டத்தில், தேனி மாவட்டக் கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் ஓர் ஆதி திராவிடர். தனித் தொகுதி அது. தேர்தல் நடந்தது. தி.மு.க. 6 பேராக இருந்தார்கள். 4 பேர் அ.தி.மு.க. தி.மு.கழகத்தின் சார்பில் 6 பேர் வெற்றி பெற்றிருந்த போதிலும், அதிலே ஒருவர்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் இல்லை. ஆனால், அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற 4 பேரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு வாக்களிக்காவிட்டால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு ஆதி திராவிடத் தோழர் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. இந்த நிலைமையிலே தேர்தல் ஒத்திவைக்கப்பெற்றது. இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வந்த பிறகு, நண்பர் திருமாவளவன் அவர்கள் என்னைச் சந்தித்து, நானும் அவரும் இதைப் பற்றிப் பேசினோம். நான் அவரிடத்திலே சொன்னேன், யாரும் கவலைப்பட வேண்டாம், ஓர் ஆதி திராவிடர், மாவட்டக் கவுன்சிலுக்குத் தலைவராக வருவதை நாம் யாரும் இந்தச் சூழலில் நிறுத்திவிடக் கூடாது. எனவே, தி.மு.க. தன்னுடைய ஓட்டுகளை அவருக்குப் போடத் தயாராக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, அ.தி.மு.க.–வைச் சேர்ந்த ஆதி திராவிடத் தோழருக்கு தி.மு.க.வினுடைய 6 ஓட்டுகளையும் போட்டு, அவர் இன்றைக்கு தேனி மாவட்டத்தினுடைய பஞ்சாயத்துக் குழுத் தலைவராக ஆகியிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

முற்பகல் 11–45

அரியலூர் மாவட்டத்தைப் பற்றி மணி அவர்கள் சொன்னார்கள். மாவட்டத்தைப் பிரித்ததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்; ஆனால், இன்னும் அதிகாரிகள் வேலையைத் தொடங்கவில்லை என்றார்கள். மணி அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இப்பொழுது தேர்தல் ஆணையத்தின் சார்பாகத் தொகுதிகளைப் பிரித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அது பூரணத்துவம் பெற்ற பிறகுதான், அந்தப் பணிகள் நடக்க முடியும். அது விரைவிலே முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏப்ரல் மாதத்திற்குள் அது முடிந்துவிடும். முடிந்த பிறகு அரியலூர் மாவட்டம் செயல்படத் தொடங்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற மாநிலங்களிலே உள்ள பள்ளிகளில் தமிழ்ப் பாடம் படிக்கும் மாணவர்களுக்குப் பாட நூலும், தமிழ் வழிக் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட பாட நூல்களும், தமிழ்நாடு பாட

நூல் கழகம்மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவர்களுக்குக் கிடைக்கவில்லையே என்கிற கவலை மணி அவர்களுக்குத் தேவையில்லை. இப்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் ஏதாவது தயக்கமோ, சுணக்கமோ இருந்தால், தெரிவித்தால் உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்றும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல், எதிர்க்கட்சியின் சார்பாக இங்கே யாரும் கடந்த 5, 6 நாட்களாக அவையிலே நடவடிக்கைகளிலே கலந்துகொள்வதில்லை; வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் வாங்க வேண்டியது என்று சொல்வது இன்றைக்கு என்னென்ன குறிப்புகள் அவையிலே வைக்கப்படுகின்றன; (சிரிப்பு) — உறுப்பினர்களுக்குத் தரப்படுகின்றன என்ற முறையிலே வாங்கிக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னேன். தவறாக யாரும் கருதிக்கொண்டு சிரித்தால், அந்தச் சிரிப்பிற்கு நான் பொறுப்பாளியல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 8 மாதக் காலத்தில், இந்த அரசு மக்களுக்கு எதுவும் செய்யவில்லை; அதையெல்லாம் தொகுத்துத்தான், எதுவும் செய்யாத சர்க்கார் இது, செய்யாததையெல்லாம் தொகுத்துத்தான் இந்த அவையிலே ஆளுநர் உரை என்ற பெயரால் வெளியிட்டிருக்கிறார்கள்; இதைக் குப்பைத் தொட்டியிலேதான் போட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கின்றார்; அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். பேசியிருந்தாலும்கூட பேசவில்லையென்று மறுத்துவிடலாம். அறிக்கையே அச்சடித்து வெளியிடப்பட்டிருக்கிறது. நான் குப்பைத் தொட்டியை இழிவாகக் கருதவில்லை.

நான் 15 ஆண்டுகளுக்கு முன்பு 'குப்பைத் தொட்டி' என்றே ஒரு சிறுகதை எழுதி, அந்தக் கதை, ஆங்கிலத்தில், மலையாளத்தில், தெலுங்கில், இந்தியில் (மேசையைத் தட்டும் ஒலி) Illustrated Weekly வரையிலே மொழி பெயர்க்கப்பட்டு, இந்தியா முழுவதும் பரவிய கதை, 'குப்பைத் தொட்டி' என்ற அந்தக் கதை. ஒருவேளை அந்தக் குப்பைத் தொட்டியிலே இதைப் போடச் சொன்னார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. நான் அதற்காகக் கவலைப்படுவதில்லை.

முற்பகல் 11–50

எனக்குள்ள ஒரே ஒரு வருத்தம்; இந்த ஆளுநர் உரையில் என்னுடைய வாசகங்கள் மாத்திரமல்ல, அறிஞர் அண்ணா





அவர்களுடைய வாசகம், இந்திய அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும், புதிய சிந்தனை வேண்டும் என்றெல்லாம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு மாநிலங்களவையிலே அண்ணா பேசியதை இதிலே தொகுத்திருக்கிறோம்; அதையும் சேர்த்துக் குப்பைத் தொட்டியிலே போடுங்கள் என்று, அண்ணா பெயரைக் கட்சிக்கு வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் சொன்னார்களே எனபதை எண்ணும்போது, எனக்கு வேதனையாக இருக்கின்றது. இதை நான் மக்களுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகின்றேன்; நான் மனதைக் குழப்பிக்கொள்ள விரும்பவில்லை.

எட்டு மாதக் காலத்திலே தி.மு.க. ஆட்சியில் எதுவும் செய்யவில்லையா? என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை நீங்களெல்லாம் சொல்லியிருக்கின்றீர்கள். இருந்தாலும்கூட, நானும் பேசி பதிலுரையிலே குறிப்பிட்டு, அவற்றையெல்லாம் பதிய வைக்க வேண்டும் என்று விரும்புவது இயற்கைதான்.

7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் அறவே தள்ளுபடி செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் பயன் பெற்றவர்கள் 22 இலட்சத்து 39 ஆயிரத்து 111 பேர்.

நடப்பாண்டு பயிர்க் கடன் வட்டி விகிதம் 7 விழுக்காடாகக் குறைப்பு. அதனால் பயன்பெற்றோர் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர்.

நடப்பாண்டில் விவசாயக் கடன்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு. இந்த ஆண்டு புதிதாக விவசாயக் கடன் பெற்றவர்கள் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர். வழங்கப்பட்ட கடன் தொகை 818 கோடி ரூபாய்.

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவித் திட்டம், 22–2–2007 அன்று தஞ்சை மாவட்டத்திலே தொடங்க இருக்கிறது; நான் சென்று தொடங்கி வைக்க இருக்கின்றேன். இந்தத் திட்டம் ஏதோ அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு கோடி பேருக்குமேல் வழங்கப்பட்டது என்றும், இப்போது 66 இலட்சம் பேர்களுக்குத்தான் என்று சொல்கிறார்கள் என்றும் அறிக்கை விடுகிறார்கள். உண்மை அதுவல்ல. இந்த 70 இலட்சம் பேர் என்பது 72 இலட்சம் குடும்பங்கள். 72 இலட்சம் குடும்பங்கள் என்றால், 2 கோடியே 25 இலட்சம் பேர் பயன் பெறுவார்கள் என்ற கணக்கு அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் – (மேசையைத் தட்டும் ஒலி) நான் குடும்பம் என்ற கணக்கைச் சொல்கிறேன். அவர்கள் குடும்பத்தை விட்டுவிட்டு தனி நபர் என்ற

கணக்கை அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது ஒரு கோடியே 99 இலட்சம். 72 இலட்சம் குடும்பங்களுக்கு, தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த வாரியத்தால் பயன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம். இதனால் பயன்பெற்றோர் சுமார் 50 ஆயிரம் பேர். சுமார் 50 ஆயிரம் ஏக்கர் இரண்டு கட்டங்களில் தந்திருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு அமைச்சர் சென்று இந்த நிலத்தை விநியோகித்தது, உங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். எவ்வளவு நிலம் இருக்கிறது? நாங்கள் வைத்திருக்கிற நிலம் இவ்வளவுதான் என்றெல்லாம் சொன்னபோதுகூட, அது எவ்வளவு இருந்தாலும் பரவாயில்லை, கையகல நிலமாக இருந்தாலும், அது ஏழை விவசாயிகளுக்குத்தான் வழங்கப்படும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இதே மாமன்றத்திலே சொல்லி, அப்படித்தான் இன்றைக்கு அது வழங்கப்பட்டு வருகிறது.

தரமான அரிசி, கிலோ 2 ரூபாய். நேற்றுகூட ஒரு அறிக்கை பார்த்தேன். நாம் கொடுக்கிற அரிசியை மாடுகளுக்குப் போடுகிறார்களாம், அந்த மாடுகள் செத்துவிடுகின்றனவாம். எவ்வளவு வேடிக்கையான, வேதனையான அறிக்கை இது என்பதை–அதுவும் யார் வெளியிடுகிற அறிக்கை? யாரோ ஏனோ தானோக்கள் வெளியிட்ட அறிக்கை அல்ல. நாம் வழங்குகின்ற அந்த அரிசி 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று வழங்குகிறோமே, இதனால் பயனடைவோர் ஒரு கோடியே 79 இலட்சம் குடும்பங்கள்.

முற்பகல் 11–55

750 கோடி ரூபாயில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம். 25 இலட்சத்து 30 ஆயிரம் குடும்பத்தினர் பயன்பெறுகின்றார்கள். இது மிகப்பெரிய திட்டம்; பிரம்மாண்டமான திட்டம். இதை மிகுந்த ஜாக்கிரதையாக, ஒளிவு மறைவின்றி, எந்தவிதமான ஊழலுக்கும், புகாருக்கும் இடமின்றி வழங்க வேண்டுமென்பதற்காக, சட்டமன்றத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்களையெல்லாம் பங்கு பெறச் செய்து, குழு அமைத்து, அந்தக் குழுவின் ஆலோசனைப்படிதான், யாரிடத்திலே வாங்கலாம், எந்தக் கம்பெனியிலே இந்த தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கலாம், அவற்றை யார் யாருக்கு வழங்கலாம், எந்த முறையில் வழங்கலாம்





என்று இவை அனைத்தையும் சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நேற்றைக்குக்கூட, இங்கே ஒரு விவாதம் நடந்தது. நாங்கள் கிராமங்களில் இந்த அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்துகொண்டு செய்யவேண்டும்; அதை ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சர் ஒத்துக்கொண்டிருக்கிறார் என்றெல்லாம் விவாதம் நடந்தது. ஆனால், அப்போது எண்ணிக்கொண்டேன். சட்டமன்ற உறுப்பினர்களை ஒரு குழுவிலே போட்டால் எல்லோரும் வருகிறார்களா? பார்த்தோமே அனுபவத்தில்! எல்லோரும் வந்தால் பரவாயில்லை, வருவதில்லை. எல்லோரும் அதிலே அங்கம் வகிப்பதில்லை, இடம் பெறுவதில்லை. குறை சொல்வதற்கு வேண்டுமானால் அவர்கள் இருப்பார்களே தவிர, சேர்ந்து ஒத்துழைத்து, மக்களுக்குப் போய்ச் சேர்கின்ற காரியம்தானே, அரசோடு ஒத்துழைப்போம் என்று எண்ணுகின்றவர்கள் யார் இருக்கிறார்கள்? யாருமே இல்லையென்று சொல்லவில்லை. எதிர்க்கட்சியிலே யாரும் இல்லை. அதற்குத் தயாராக இல்லை. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக்கூட, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக்கூட, எப்படிச் செயல்படுத்தலாம் என்பதை அமர்ந்து பேசுங்கள். ஆனால், நான் கருதுவது, ‘நெல்லுக்கு இறைத்த நீர், வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் பொசியக்கூடாது; நெல்லுக்கு நேராகவே செல்லவேண்டும். அப்படிப்பட்ட முறையிலே போய்ச் சேர, நீங்கள் ஒரு ஆலோசனையைச் சொல்லுங்கள். நானே முன்னின்று அந்தக் கூட்டத்தை நடத்துகின்றேன். அந்தக் கூட்டத்திலே நீங்கள் எடுக்கின்ற முடிவின்படி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை, கிராமங்களிலே நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், நேற்றைக்கு இந்தப் பிரச்சினை வந்தபோது, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. அவர் சொன்னதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அதற்கு அதிக ஆதரவு அங்கேயிருப்பதைவிட, இங்கே ஆளுங்கட்சியில் அதிகமாக இருக்கிறது. (சிரிப்பு) அதனால்தான் சொல்கின்றேன், அதிகாரிகளும் அதிலே ஈடுபடலாம், அதேநேரத்தில் மக்கள் பிரதிநிதிகளும் ஈடுபடலாம். இரண்டுபேரும் ஈடுபட்டால்தான், இவர் தவறு செய்தால், அவர் கண்டுபிடிக்கலாம்; அவர் தவறு செய்தால், இவர் கண்டுபிடிக்கலாம்;

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஜனவரி 27

இரண்டுபேரும் தவறு செய்தால், அதை நான் கண்டுபிடிக்கலாம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தத் திட்டம், மிக உயர்ந்த திட்டம்; சிறந்த திட்டம்; பெரிய திட்டம்; மக்களிடையே போய்ச் சேரக்கூடிய திட்டம். அதை ஒழுங்காக நாம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பொங்கல் முதல், நடப்பு ஆண்டில் இலவச எரிவாயு அடுப்பு இணைப்பின்மூலம் பயன அடைவோர் மூன்று இலட்சம் குடும்பங்கள். இப்படி நம்முடைய பழைய திட்டங்கள் பலவற்றை இடையிலேயிருந்த ஆட்சி ஒழித்துவிட்டது என்றாலும், அவற்றையெல்லாம், இன்றைக்கு மீண்டும் செயல்படுத்துகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சுனாமி வந்தது. சுனாமி வந்து இரண்டு ஆண்டுகாலம் ஆகிறது. 2004 ஆம் ஆண்டு சுனாமி வந்தது. வந்தபோது எனக்கே, என்னுடைய வாழ்விற்கே சுனாமி வந்ததைப்போல, நான் சுருண்டு படுத்துவிட்டேன். அப்படிப்பட்ட சுகவீனம் எனக்கு ஏற்பட்டது. நான் மருத்துவமனையில் இருந்ததைப் பார்க்க, நம்முடைய அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய திருமதி சோனியா காந்தி அவர்கள் நேரடியாக மருத்துவமனைக்கே வந்து உடல்நலம் விசாரித்தார்கள். அப்போதுகூட, 1 கோடி ரூபாயை தி.மு.க. அறக்கட்டளையிலேயிருந்து அவர்களிடத்திலே வழங்கி, அதைச் சுனாமி நிதியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி நிவாரணப் பணிகளுக்கு, 2004-ல் டிசம்பர் 26 ஆம் தேதி, சுனாமி காரணமாக தமிழ்நாடு பாதித்தபோது, நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் — இவ்வாறு பெயர் வைக்கவேண்டும் என்று சொன்னதே நான்தான் அப்பொழுது. டெல்லியிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில், அந்தத் திட்டத்திற்கு, இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று நான் கேட்டு, அது ஏற்கப்பட்டது. அன்றைக்கு அதற்கு 2,347 கோடி ரூபாய்; பன்னாட்டு உதவிகள் மூலமாக 2,550 கோடி ரூபாய்; மொத்தம் ரூபாய் 4,897 கோடி ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட இந்தப் பணத்தில், உடனடி நிவாரணத்திற்கு ஓரளவுத் தொகை வழங்கப்பட்டதே அல்லாமல், நிரந்தர நிவாரணங்களுக்காகச் செலவிடப்படவில்லை. அதற்காகச் சென்ற கோப்புகள் எல்லாம் கையெழுத்துப் போடப்படாமலே தூங்கிக் கொண்டிருந்தன. நாம்



2007 ஜனவரி 27] [கலைஞர் மு. கருணாநிதி]

ஆட்சிக்கு வந்தபிறகுதான், அந்தக் கோப்புகளையெல்லாம் தட்டியெழுப்பி, வேலை பார்க்க வைத்தோம்.

*நண்பகல் 12–00*

அதுமாத்திரமல்ல; ஏழு மாதங்களுக்குப் பிறகு—2004 டிசம்பரில் சுனாமிப் பேரலைகள் வீசியது என்றால், அதற்குப் பிறகு, பல மாதங்களுக்குப் பிறகு—மன்னிக்க வேண்டுகிறேன். ஏழு மாதங்கள் அல்ல; பதினேழு மாதங்களுக்குப் பிறகு, நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், உடனடியாக, பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை நாமக்கல் கவிஞர் மாளிகையிலே கூட்டினேன். கூட்டத்தைக் கூட்டி, என்ன வேலை நடைபெற்றிருக்கிறது என்று கேட்டால், அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நிரந்தரமான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை' என்று சொன்னார்கள். எப்பொழுது? பதினேழு மாதங்கள் கழித்துச் சொல்கிறார்கள். தற்காலிக உதவிகள், வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயிரம், இரண்டாயிரம், 500, 600 என்று தற்காலிக உதவி, உடனடி உதவி செய்யப்பட்டதே அல்லாமல், அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுகின்ற இந்தப் பணி தொடங்கப்படவும் இல்லை; நிறைவு செய்யப்படவும் இல்லை.

54,087 வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு மாறாக, தொண்டு நிறுவனங்கள்மூலம் கட்டப்பட்ட வீடுகள் 8,406. அதுவும் அரசின் சார்பாக அல்ல. 54,087 வீடுகள் கட்டுவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள்மூலம் 8,406 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. இந்தப் பணி, என்னுடைய ஆய்வுக் கூட்டத்திற்குப் பிறகு, 18,828 வீடுகள் கட்டுகின்ற அளவிற்குத் தீவிரப்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்த நிதியாண்டின் இறுதிக்குள், 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில தொண்டு நிறுவனங்கள் கட்டுவதாக வாக்களித்து, கட்ட இயலாத 3,000 வீடுகளையும் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது அரசே கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுனாமி பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் பகுதியில், மாதா அமிர்தானந்தமயி அவர்களின் அறக்கட்டளையின் சார்பில்

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஜனவரி 27

கட்டப்பட்டுள்ள சுமார் 400 வீடுகளை, வரும் 31 ஆம் தேதி நானே சென்று திறந்து வைக்க இருக்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மாதா அமிர்தானந்தமயி அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை, ஏழையெளியோருக்கு, நலிந்தோருக்கு, பாதிக்கப்பட்டோருக்குச் செய்கின்ற அருள் உள்ளம் படைத்தவர்கள்; மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, இன்றைக்குக் கேரள மாநிலத்தில் மிகப் பிரம்மாண்டமான மருத்துவமனை, கல்லூரி இவற்றையெல்லாம் நடத்துகின்ற அளவிற்கு உயர்ந்தவர்கள். அவர்கள் என்னை அழைத்திருக்கின்றார்கள். நான் நாகைக்குச் சென்று, இந்த 400 வீடுகளை, 31 ஆம் தேதி அன்று திறந்து வைப்பதாக இருக்கின்றேன்.

பிற்பகல் 12–05

24–6–2006 அன்று இந்த அரசு நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், நான் முன்பு சொன்னேனே, அந்தக் கூட்டத்தில் விடுபட்ட மீனவர்களுக்கு வலைகள், படகுகள் வழங்குதல் மற்றும் ஏற்கெனவே உதவி அளிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கூடுதல் வலைகள், ஐஸ் பெட்டிகள், பாதுகாப்புக் கவச உடைகள், சைக்கிள்கள் போன்றவை வழங்க 110 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கல்விக் கட்டணச் சலுகைகள் கூடுதலாக ஓராண்டுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

மத்திய அமைச்சர்களுடைய அதிகாரமளிக்கப்பட்ட குழு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், முதற்கட்டமாக நாகை, கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கக்கூடிய 325 சதுர அடி பரப்பளவு கொண்ட நிரந்தர வீடுகள் தலா 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அடிப்படை வசதிகளுக்காக ஒரு வீட்டுக்கு சுமார் 40,000 ரூபாயும், 10 ஆண்டுகள் காப்பீடு செய்ய 1,000 ரூபாயும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இராஜிவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 550 கோடி



2007 ஜனவரி 27] [கலைஞர் மு. கருணாநிதி]

மதிப்பீட்டில் 22,000 வீடுகள் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நண்பர் பீட்டர் அல்போன்ஸ் பேசும்பொழுது, தமிழ் மொழிக்குப் பேரகராதித் தொகுப்பும், அறிவியல் கலைச் சொற்களும், கலைக் களஞ்சியமும் புதிதாக உருவாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார். 1974 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அகர முதலித் திட்டம் மொழிஞாயிறு தேவநேய பாவாணர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின்கீழ் இதுவரை 18 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆறு தொகுதிகள் அச்சில் உள்ளன. எஞ்சிய ஏழு தொகுதிகள் தயாரிப்பில் உள்ளன. அச்சில் உள்ளதையும், தயாரிப்பில் உள்ளதையும் இந்த அரசு விரைவுபடுத்தி வெளியிடும் என்பதை பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). கழக ஆட்சி அமையும்போதெல்லாம் அகர முதலித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு விரைவுபடுத்தப்படுவதும், அதற்குப் பிறகு பெரும் தொய்வும், தளர்ச்சியும் ஏற்படுவதும், அது மீண்டும் புத்துயிர் பெறுவதுமான நிலை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதையொட்டி, தமிழ் அறிவியல் களஞ்சியத்தின் 16 தொகுதிகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. 17, 18, 19 மற்றும் 20 ஆம் தொகுதிகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2008 ஆம் ஆண்டுக்குள் இவற்றைத் தயாரித்திட நடவடிக்கைகள் முனைப்போடு மேற்கொள்ளப்படும்.

மேலும், தமிழக அரசால், அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்கள். தமிழ் மொழியில் புதிய அறிவியல் சொற்களும், கலைச் சொற்களும் கொண்ட அறிவியல் கலைச் சொல் அகராதி தயாரிக்கும் பணி விரைவாக நடைபெற இந்த மன்றம் ஆவன செய்யும். தமிழ்ப் பேரகராதி திருத்தப் பணி தற்போது சென்னைப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறையில் நடைபெற்று வருகிறது. முந்தைய பேரகராதியைவிட மும்மடங்கு பெரிதாக, சுமார் ஐந்து இலட்சம் சொற்களோடு இந்த அகராதி வெளியிடப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள்; அவருடைய மாவட்டத்தில் குலவணிகர்புரம் பகுதியில் அமைந்துள்ள இரயில்வே கடவு எண் 4–க்குப் (Railway gate) பதிலாக மேம்பாலம்

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஜனவரி 27

கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். இந்தக் கடவு எண் 4 இரயில்–வாகன அலகு (Traffic Vehicle Unit) 1,13,547 ஆக இருக்கிறது. இது குறைந்தபட்ச அளவான 1,00,000–ஐவிட அதிகமாக இருப்பதால், கடவுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற தகுதியைப் பெறுகிறது. ஆனால், இச்சாலை தேசிய நெடுஞ்சாலை 7–ல் வருவதால் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் இசைவு பெற்று இரயில்வே மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களும், திரு. நன்மாறன் அவர்களும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவைப்பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். அவர்கள் பேசும்போது, சென்னைக்கு அடுத்தபடியாக, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். சென்னைக்கு அடுத்தபடியாக, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில், கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பப் பூங்கா தொடர்பாகத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் கிராமத்தில் 39.58 ஏக்கர் நிலமும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், இலந்தைக்குளம் கிராமத்தில் 21.77 ஏக்கர் நிலமும், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கக் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையிலே உள்ளது. இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நிலம் எடுப்பது என்பது இப்போது பெரிய பிரச்சினையாக ஆகியிருக்கிறது. சில நேரங்களிலே, இதிலே அரசியலும் குறுக்கிடுகின்ற காரணத்தால், நிலம் எடுப்பு நினைத்தபடி நடக்க முடியவில்லை. நினைத்தபடியெல்லாம் நிலத்தை எடுக்க வேண்டுமென்று நான் கருதுபவன் அல்ல. எல்லோரும் நினைக்கிறபடி, ஏழையெளியவர்கள், குடிசைவாழ் மக்கள், நம்முடைய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர்கள், தோழர்கள், இவர்கள் எல்லாம் கருதுகிற இடத்திலதான் நிலத்தை எடுக்க வேண்டுமென்று கருதுகிறோம். பயிர் செய்யப்படுகின்ற நிலங்களை நிச்சயமாக இந்த அரசு தொடாது என்ற உறுதியை நான் அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், தொழில்கள் வர வேண்டும் என்று விரும்புகிறபோது, கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். அரை ஏக்கர், ஒரு ஏக்கர் இருந்தால் அதைச் சாக்கிட்டு, 'அரை ஏக்கர் நிலம், அய்யோ போச்சே' என்று சொன்னால், எதுவுமே ஆரம்பிக்க முடியாது. நாடும் வளம் பெற வேண்டுமென்று கருதுகின்றோம், தொழில்களும் வளர வேண்டுமென்று கருதுகின்றோம், வேலைவாய்ப்பும் பெருக வேண்டுமென்று கருதுகின்றோம். இவ்வளவுக்குப் பிறகு, நாம் தொழிற்சாலைகளே உருவாகக் கூடாது என்று எண்ணினால், தடையாக இருந்தால், என்ன ஆகும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது மேற்கு வங்கத்திலே என்னவாயிற்று? தொழிற்சாலை அமைக்க அவர்கள் எடுத்த முயற்சிக்கு ஏற்பட்ட இடையூறுகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதற்காக இந்தியா முழுவதும் கொந்தளித்ததும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட கொந்தளிப்புகளும், குழப்பங்களும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு எல்லாம் இருக்கின்றது. ஏழையெளியவர்களை, உங்களுக்கு இடமில்லை என்று துரத்திவிட்டு, நாம் அங்கே பங்களா கட்டிக்கொள்வதோ, ஆலை அமைத்துக்கொள்வதோ, இந்த அரசினுடைய கொள்கையாக நிச்சயம் இருக்காது என்பதை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2007 ஜனவரி 27] [கலைஞர் மு. கருணாநிதி]

பிற்பகல் 12–15

திரு. மணி அவர்களும், திரு. வேல்முருகன் அவர்களும் பேசும்பொழுது, இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனை முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டுகள் விற்பனைக்கு எதிராக முதலில் 1,308 வழக்குகள் போடப்பட்டன. இதெல்லாம் 2006 மே மாதததிற்கு முன்பே போடப்பட்டன. 13-5-2006–க்குப் பிறகு, 1,847 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆக, தொடர்ந்து இந்தக் கள்ள லாட்டரிச்

சீட்டுகள் விற்பனைமீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே அனுமதிக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வேறு மாநிலங்களிலேயிருந்து இங்கே வந்து விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள். அதை அடக்குவதற்கு, முடக்குவதற்கு, அப்படி நடைபெறுகின்ற காரியங்களைத் தண்டிப்பதற்கு நிச்சயமாக, தீவிரமாக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வேல்முருகன் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. பண்ருட்டி தொகுதியிலே, தனி நீதிமன்ற வளாகம் தேவையென்று அவர் தெரிவித்திருக்கின்றார். இதற்காக ரூ.2.23 கோடி செலவில், பண்ருட்டியில் தனி நீதிமன்ற வளாகம் அமைத்திட ஒப்புதல் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் இங்கே கலாச்சாரத்தைப்பற்றி மிகக் கவலையோடு குறிப்பிட்டார். புதிய கலாச்சாரத்தை உருவாக்குபவர்களாக நாம் இருக்க வேண்டியிருக்கிறது என்ற கொள்கையை நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசும்பொழுது எடுத்துரைத்தார்கள். கலாச்சாரத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், பேசுவதே பெண்களை இழிவுபடுத்துகின்ற கலாச்சாரமாக இருக்கிறது என்று நாம் அந்த முறைகளைக் கண்டித்துப் பேசும்பொழுதே பின்விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது. அதனால்தான் பாலபாரதி அவர்களுக்கு அவ்வளவு கோபம் என்று கருதுகின்றேன். அவர்கள் தன்னுடைய பேச்சை ஒரு வகையாகத் திருப்பிச் சொன்னார்கள். கலாச்சார நடவடிக்கை என்று பார்த்தால், இன்றைக்கு பொங்கல் நாளை சமத்துவப் பொங்கலாக இந்த அரசாங்கம் அறிவித்திருப்பதே ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்குவதற்காகத்தான் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய ரவிக்குமார் அவர்களும், செல்வப் பெருந்தகை அவர்களும், அரசுக் கல்லூரிகளில் விரிவுரையாளர் பணியிடங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான பின்னடைவு (backlog) பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். விரிவுரையாளர் பின்னடைவுப் பணியிடங்கள், அரசுக் கல்லூரிகளில் உள்ள 1,062 விரிவுரையாளர் காலிப் பணியிடங்களை நிரப்பும்பொழுது, 522 பின்னடைவுப் பணியிடங்கள், தனி நியமனம்



(Special Recruitment) மூலம் மூன்று கட்டங்களாக நிரப்பப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கைதட்டிவிட்டீர்கள். மூன்று கட்டங்கள் என்பது திருப்தியளிக்காது என்று கருதினேன். திருப்தியளிக்காவிட்டால் இன்னும் அதைப்பற்றி யோசிப்பேன்.

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே உரையாற்றிய எதிரொலி மணியன் அவர்கள், பெரணமல்லூர் காவல் நிலையம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஆகியவற்றிற்குக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார். திருவண்ணாமலை மாவட்டம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஏற்கெனவே புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. பெரணமல்லூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம், காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்த இரண்டு காவல் நிலையங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்குக் குடியிருப்புகள், ஆண்டுதோறும் 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. அ. தமிழரசு அவர்கள் பேசும்போது, ஓமலூர் தொகுதியில் அரசு கயிறு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். சேலம் மாவட்டம், தாரமங்கலம், ஓமலூர் பகுதியை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள கயிறு திரிக்கும் தொழிலாளர்களுக்காக, மத்திய அரசின் பாரம்பரியமிக்க தொழில்களைப் புத்துயிரூட்டும் நிதித் திட்டத்தின்கீழ், ரூ.117 இலட்சம் மதிப்பீட்டில் கயிறு குழுமம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவாசல் தொகுதி, திரு. கே. சின்னதுரை அவர்கள், தனது தொகுதியில் கங்கவல்லி தாலுகா அலுவலகம், சொந்தக் கட்டடம் இன்றி இயங்கி வருவதால், தாலுகா அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். வரும் நிதியாண்டில் கங்கவல்லி தாலுகா அலுவலகத்திற்குப் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

விவாதத்தின்போது பேசிய பல உறுப்பினர்கள் தமது தொகுதிகளிலுள்ள அரசு மருத்துவமனைகளில் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்றும், போதிய மருத்துவர்கள் பணியமர்த்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியவாறு இத்திட்டத்திற்கு திருவாரூர் மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையில் ரூபாய் 0.5 இலட்சம் செலவிலும், சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் 25 இலட்சம் ரூபாய் செலவிலும், திருச்சி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனையில் 40 இலட்சம் ரூபாய் செலவிலும், நாமக்கல் மாவட்டம், வேலூர் அரசு மருத்துவமனையில் 65 இலட்சம் ரூபாய் செலவிலும், கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் 10 இலட்சம் ரூபாய் செலவிலும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையில் 65 இலட்சம் ரூபாய் செலவிலும், காஞ்சி மாவட்டம், திருபெரும்புதூர் அரசு மருத்துவமனையில் 85 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டடப் பராமரிப்புப் பணிகள், புதிய கட்டடங்கள் கட்டுதல், வார்டுகள் அமைத்தல், கழிப்பிட வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூர் சாயப் பட்டறை பற்றி—நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன் என்று திரு. சிதம்பரம் சொன்னார்—அதுமாதிரி திருப்பூர் சாயப் பட்டறைதான் இந்த சட்டப் பேரவையிலேயே கதாநாயகனாக ஐந்து நாட்களாகப் பேசப்படுகின்ற ஒன்று. அந்தக் கழிவுகளை அகற்றுவதுபற்றி திரு. சிவபுண்ணியம் பேசினார். சி.பி.எம். சார்பாக திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசினார்கள். காங்கிரஸ் கட்சி சார்பாக திரு. ஞானசேகரன் அவர்கள் முழங்கினார்கள். பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசியிருக்கிறார்கள். திரு. விடியல் சேகரும் அதைப்பற்றி பேசினார் இடையிலே புகுந்து. (குறுக்கீடு) நான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கே பதில் சொல்வதற்கு இவ்வளவு கஷ்டப்படுகிறேன், நேற்று எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் பேசியிருந்தால் என்பது உங்களுக்குத் தெரியும். அதனால்தான் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தேன்.





அதைப்பற்றி அதிகாரிகளுடன் கலந்து பேசினேன். குழாய்களின் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளைக் கொண்டுபோய்க் கடலில் விடுவது என்றால், மற்ற மாநிலங்களுக்கு அது வசதி. இப்போது, குஜராத் என்றால் கடலே இருக்கிறது; அருகிலேயே கடல் இருக்கிறது. அதேமாதிரி, மராட்டியத்திலேயும் கடல் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திருப்பூர் தொழிற்சாலைக்கும், கடலுக்கும் வெகு தூரம் இருக்கிறது. அதனால் நீளமாகத்தான் அந்தக் குழாய்களை அமைக்க முடியும். எவ்வளவு தூரத்திற்கு இந்தக் குழாய், எந்தக் கடலில் கொண்டுவிடுவது, நாகப்பட்டினமா அல்லது வேறு இடமா, எந்த இடத்திலே கடலில் கொண்டு அந்தக் குழாய்களை விட்டு, கழிவுநீரைக் கடலில் கலக்க வைக்கிறது என்று பார்த்தால் அதற்கு சுமார், உத்தேசமாக 700 கோடி ரூபாய் அளவிற்குச் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 700 கோடி ரூபாய் தமிழக அரசு சார்பில் 15 சதவீதமும்—அது சுமார் 100 கோடி ரூபாயாகும், 15 சதவீதமென்றால்— மத்திய அரசின் சார்பில் 25 சதவீதம் என்றால 175 கோடி ரூபாய் ஆகும். மீதத் தொகையை சாயப் பட்டறை அதிபர்களும் செலவிட்டு, அவர்கள் சார்பிலேயே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதன்மூலம் நிறைவேற்றுவதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று கருதுகிறேன். அதுபற்றி அவர்களையும் அழைத்துப் பேசி, நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகளுக்குத் தொல்லை வராமல் அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும், அப்பொழுது நீதிமன்றத்தினுடைய பிரச்சினைகள் முடிந்துவிடும் என்றும் நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

இரண்டு, மூன்று அறிவிப்புகளை வெளியிட விரும்புகின்றேன். மாநில நெடுஞ்சாலைகளையும், பிற நெடுஞ்சாலைகளையும் மேம்படுத்த சிறப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் நிதி ஆதாரத்திலிருந்து ரூ.722.40 கோடி ஒதுக்கீடு செய்து பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளித்திருக்கின்றோம். இதில், 1078.50 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், 1390 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் 1354.50 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகள் மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தவிர 50 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் பல முக்கியச் சாலைகளை மேம்படுத்த நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

விடுத்துள்ளார்கள். அதனை ஏற்று, சுமார் 918 கி.மீ. நீளத்தில் 280 சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளக் கூடுதலாக ரூ.230.17 கோடி ஒதுக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 433 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும், 485 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகளும் மேம்படுத்தப்படும்.

ஒரு முக்கிய அறிவிப்பு. தமிழ்நாட்டில் உள்ள 63 உப வடிநிலங்களில் அமைந்துள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், மதகுகள் ஆகியவற்றைச் செப்பனிட்டு நீர் மேலாண்மை செய்து விவசாயிகளுடைய வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த நீர்வள நிலவளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். இத்திட்டத்திற்கான ஒப்புதலை ஜனவரி 23 ஆம் தேதி உலக வங்கி அளித்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.2547 கோடியாகும். அதாவது, 566 மில்லியன் டாலர்கள். இத்திட்டத்திற்கான உடன்படிக்கை விரைவில் டெல்லியில் கையெழுத்தாகவுள்ளது. இத்திட்டம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்து தமிழக விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேன்மையடையச் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவு செய்து காத்திருப்போர்களில் பலர் பல்வேறு காரணங்களினாலும் மற்றும் முந்தைய அரசால் விதிக்கப்பட்ட வேலை நியமனத் தடையின் காரணமாகவும், தங்களது பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியுள்ளார்கள். இவர்களுக்கு உதவும்வகையில், வயது வரம்பை இந்த அரசு ஐந்தாண்டுகள் தளர்த்தியதோடு, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்காதவர்களுக்கு, மீண்டும் வாய்ப்பளித்து சிறப்புச் சலுகையும் வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று 2001, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவினைப் புதுப்பிக்காதவர்களும் புதுப்பித்துக்கொள்ள, சிறப்புச் சலுகை வழங்கி இந்த அரசு ஆணையிடுகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதனால், இவர்கள் அரசு வேலைவாய்ப்பைப் பெறவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெறவும் முடியும்.



தமிழகத்தினுடைய நிதிநிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டும். இதற்கிடையில், 1955 ஆம் ஆண்டு 29-9-1955 அன்று இதே சட்டப் பேரவையில், "நான் தமிழன், என்னுடைய மொழியே இந்த இராஜ்யத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி மன்றத்திலும், நியாய மன்றத்திலும், நிர்வாகத் துறையிலும், தமிழ் மொழியே இயங்க வேண்டும். உயர் நீதிமன்றத்திலும் தமிழ்தான் வழக்கு மொழியாக இருக்க வேண்டும். கல்வியில் தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டும்" என்று பேசியவர் அண்ணன் ப. ஜீவானந்தம் அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது நூற்றாண்டுதான் இது. அவரது நூற்றாண்டு தமிழக அரசின் சார்பில் 21-8-2007 அன்று சிறப்பான முறையில் கொண்டாடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

நான் சொன்ன இந்தத் திட்டங்களைப் போல, மேலும் இந்த அரசு செலவழிக்க வேண்டிய— அரசுக்கு திட்டங்களால் இழப்புதான் ஏற்படும். செலவு என்றாலே இழப்புதான். இந்த மதிப்புக் கூட்டு வரியினால் இழப்பு ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. உண்மைதான். ஆனால், ஏற்படுகிற இழப்பு எப்படி ஏற்படுகிறது, எதனால் ஏற்படுகிறது என்பதைச் சிந்தித்தால், அந்த இழப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இழப்புதான். மதிப்புக் கூட்டு வரி முறைக்கு முன்னர் இருந்த பொது விற்பனை வரி முறையின்கீழ் 1, 4, 8, 10, 12, 16, 20 சதவிகிதம் என அதிகபட்சம் 20 சதவிகிதம் வரை பல்வேறு விகிதங்களில் பொருட்களின்மீது வரி விதிக்கப்பட்டு வந்தது.

இப்போது மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ், 1, 4, 12.5 சதவிகிதம் என்று மூன்று விகிதங்களில் மட்டுமே வரி விதிக்கப்பட்டுள்ளது. அதற்குமேலே கிடையாது. முன்பு போல் பல பிரிவுகளில் வரி விதிக்கப்படுவது கிடையாது. இதில் அதிகபட்சமே 12.5 சதவிகிதம்தான். 20 சதவிகிதம் என்ற அளவிற்குக் கிடையாது என்கிறபோது அரசுக்கு வருமானம் குறைவாகத்தான் இருக்கும்; அதனால் வருவாய் இழப்புதான் ஏற்படும் என்றால், ஆமாம், நஷ்டம்தான். அந்த நஷ்டத்தை வணிகர்களுக்காக, மக்களுக்காக இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் மதிப்புக் கூட்டு வரியின் தத்துவம். (மேசையைத் தட்டும் ஒலி)

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதால், முந்தைய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட கூடுதல் விற்பனை வரி (Additional Sales Tax), உபரி வரி (Surcharge), மறு விற்பனை வரி (Resale Tax) ஆகியவை நீக்கப்பட்டுள்ளன. எனவே, மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பல்வேறு பண்டங்களுக்கு விதிக்கப்படும் சராசரி வரி விகிதம் குறைந்துள்ளது.

மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் அரசுக்கு வர வேண்டிய வருவாய் மேற்கூறிய காரணங்களால் குறையும். இந்த இழப்பை மக்களுக்காக அரசே ஏற்றுக்கொள்கின்றது.

இந்த இழப்பில் 75 விழுக்காட்டினை மைய அரசு, தமிழகத்திற்கு இழப்பீடாக வழங்கும். ஏன் மைய அரசு வழங்குகின்றது, எதற்காக வழங்கவேண்டும் என்ற கேள்வி எழும். மைய அரசு இந்தியா முழுமையும் ஒரே சீரான வரி விதிப்பு இருக்க வேண்டும் என்று கருதுகிறது. ஆகவே, இதை அமல்படுத்துகின்ற மாநிலங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பீட்டைச் சமாளிக்க மைய அரசு இந்த பாரத்தை ஓரளவு தாங்குகிறது.

திருப்பூரிலே பனியன்களுக்கு வரி வேண்டாம் என்று சொன்னீர்கள். தி.மு. கழக ஆட்சியில் அதை எடுத்தோம். இப்பொழுது இருக்கிறதா என்று தெரியாது. அப்போது நான் வரியை எடுத்தேன். மறுபடியும் அவர்கள் ஆட்சியில் போட்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) போட்டதாக திரு. பீட்டர் அல்போன்ஸ் தெரிவிக்கிறார். போடாமல் இருந்தால்தான் ஆச்சரியம். அதேமாதிரி, சமையல் எண்ணெய்க்கு வரி இல்லை என்று சொன்னோம். அதற்கு என்ன காரணம்? மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக, அத்தியாவசியப் பொருட்களான சமையல் எண்ணெய், அதேபோன்று சீயக்காய், சூடம், சாம்பிராணி இதற்கெல்லாம் வரி இல்லை என்று சொன்னோம். அப்படி வரி இல்லை என்று சொன்னபோது— நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்—அதனால் யாருக்கு இலாபம் என்றால், மக்களுக்குதான் இலாபம். அதைப்போல, இந்த மதிப்புக் கூட்டு வரியினால், வருவாய் குறைந்தால், அது மக்களுக்கு இலாபமாகப் போய்ச் சேருகிறது. மக்களுக்குத்தான் பயன் அளிக்கிறது. ஆகவே, வரியைக் குறைக்க, சீராக ஆக்க, இந்திய அரசு எடுக்கின்ற அந்த முயற்சிக்கு ஆதரவாகத்தான் நாம் இந்த மதிப்புக் கூட்டு வரியை இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.





2007–2008 ஆம் நிதியாண்டில் மதிப்புக் கூட்டு வரியைச் செயல்படுத்துவதால் ரூபாய் 2,700 கோடி இழப்பீடு ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. திரு. பீட்டர் அல்போன்ஸ் இங்கே ஆதங்கமேபட்டார். ஐயா, இதோடு நிறுத்துங்கள்; இதற்குமேல் வேண்டாம்; எவ்வளவு சாதனைகள்? அடுப்பு கொடுக்கிறீர்கள்; நிலம் கொடுக்கிறீர்கள்; தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுக்கிறீர்கள்; முட்டை கொடுக்கிறீர்கள்; எல்லாவற்றையும் கொடுக்கிறீர்கள்; நிறுத்துங்கள் இதற்குமேல் கொடுக்க ஒன்றும் கிடையாது என்று சொன்னார். ஏன் சொன்னார் என்றால், அவருக்கும், திரு. சுதர்சனம் போன்றவர்களுக்கும், நம்முடைய மணி போன்றவர்களுக்கும் பயம் — ஆனால், கம்யூனிஸ்டுகள் இன்னும்கூடக் கொடுக்க வேண்டும் என்பார்கள். (சிரிப்பு) ஏனென்றால், இரண்டு ஏக்கரா நிலம் கொடுக்கும்போது, 3 ஏக்கரா கொடுங்கள் என்று கேட்கிறார்கள். சிவபுண்ணியத்திற்கு, நம்முடைய திருப்பூர் எம்.எல்.ஏ.–வுக்கு இவர்களுக்கெல்லாம்கூட அந்த எண்ணம் இருக்கும். இதற்குமேல் செலவழிப்பதற்கு என்ன வழி இருக்கிறது என்று கேட்கிறார்கள்.

பிற்பகல் 12–35

வேறு சிலர் இப்போதே இந்த அரசு திவாலாகப் போகிறது என்று ரொம்ப வருத்தப்படுகிறார்கள். நான் சொல்கிறேன், ஆங்கிலத்தையும் தமிழையும் சேர்த்துச் சொல்கிறேன். The wall – தி வால்; தி வால் ஆகப் போகிறதென்றால் இந்த அரசின் நிதி நிலைமை வால் மாதிரி, அனுமார் வால் மாதிரி நீளப் போகிறதே தவிர குறையப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அனுமார் வால் நீண்டதால்தான் இராவணனுக்கு நேராக வாலையே சுற்றிச் சுற்றி அதன்மேலே ஏறி அனுமார் உட்கார முடிந்தது, இராமாயணக் கதையில். அதனால் "தி வால்" ஆனால் எங்களுக்கு இலாபமே தவிர, அதனால் ஒன்றும் நஷ்டம் கிடையாது. திவால் ஆவதற்கு எந்த வழியும் கிடையாது. ஏனென்றால், பொருளாதாரத்தில் ஒரு தத்துவமே, ஒரு மாநிலத்தினுடைய உற்பத்தி, பெருக்கெடுக்கின்ற அந்த உற்பத்திப் பெருக்கத்திலே 3% வரையிலும் அவர்கள் செலவழிக்கலாம். நிதிப் பற்றாக்குறை 3% தாங்கும். அதற்குமேலே போனால்தான் நீங்கள் யோசிக்கவேண்டும். 3% வரையிலும் தாங்கக்கூடிய அளவுக்குத்தான், நாங்கள் செலவு செய்து, நிதானமாக செய்துகொண்டிருக்கிறோம். நாங்கள் செய்கின்ற செலவு, இந்தச் சதவிகிதத்தை மீறாமல்தான் செய்துகொண்டிருக்கிறோம்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஜனவரி 27

திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 38,732 கோடி என மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் வருவாய் வரவுகளில் இந்த நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களிலேயே ரூபாய் 24,518 கோடி அரசால் பெறப்பட்டுள்ளது. இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், நிருவாகச் செலவினங்கள் மற்றும் மூலதனப் பணிகள் ஆகியவற்றிற்காக ரூபாய் 23,594 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது. அப்படி திவாலாகும் என்று சொன்ன செய்திக்காகத்தான் இந்தக் கணக்கையெல்லாம் உங்களுக்குச் சொல்கிறேன். குறிப்பாக, அரசின் ஒட்டுமொத்த வருவாய் கடந்த ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடும்போது, நடப்பாண்டில் சுமார் 20 சதவிகித அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

செலவினங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களுக்கும் அனைத்துத் திட்டப் பணிகளுக்கும், திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் உரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- என்ற விலையில் அரிசி வழங்கும் திட்டத்திற்கு உணவு மானியமாக ரூபாய் 1,950 கோடி; வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூபாய் ஒன்பது கோடி மற்றும் இரண்டாம் கட்டத்திற்கு ரூபாய் 750 கோடி; இலவச அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி, விவசாயக் கூட்டுறவுக் கடன் இரத்து செய்ததற்குக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இந்த ஆண்டிற்கு மட்டும் ரூபாய் 1,435 கோடி; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி; மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி மற்றும் அரசு அலுவலர்களுக்குப் பொங்கல் பரிசு வழங்க ரூபாய் 250 கோடி என அனைத்துத் திட்டங்களுக்கும், நல உதவிகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நிதி இல்லையென்று சொல்லி, அரசு ஊழியர்களைப் பட்டினி போடவில்லை, எதிர்த்துக் கேட்டவர்களைச் சிறையிலும் போடவில்லை.

இத்தகைய பெரும் திட்டங்கள் அனைத்திற்கும் போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளபோதிலும், தமிழ்நாடு நிதி நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலக்கின்படியே, அரசின் நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த



2007 ஜனவரி 27] [கலைஞர் மு. கருணாநிதி]

உற்பத்தி மதிப்பில்–GSDP (Gross State Domestic Product) 3 சதவிகிதத்திற்குக் குறைவாகவே இருக்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, செலவுப் பொறுப்புகள் அதிகரித்துள்ளபோதிலும், இந்த அரசின் திறமையான நிதி நிருவாகத்தால் அரசின் நிதிநிலைச் சமன்பாடு சீராகவே உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்துகிறேன். ஆனால், தவறான பிரச்சாரம், திவாலாகி விட்டது, திவாலாகி விட்டது; தொலைக்காட்சிப் பெட்டியெல்லாம் ஓட்டையாகிப் போய்விட்டது; எரிவாயு அடுப்பு எல்லாம் எரியவே இல்லை; அரிசியை மாடு தின்கிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் தின்றால் அதற்கு நான் என்ன செயவது? (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12–10

எதற்கெடுத்தாலும் முதலமைச்சர் இராஜினாமா செய்யவேண்டும், உள்ளாட்சித் துறை அமைச்சர் இராஜினாமா செய்யவேண்டும், இந்த அரசைக் கலைக்கவேண்டும் என்றெல்லாம், உண்மையான ஜனநாயகவாதிகள் யாரும் எண்ணிப் பார்க்கமுடியாத கோஷங்களையெல்லாம் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு நாளும் அதே பணி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் அதைப்பற்றிப் பேசவில்லை. பேசாததற்குக் காரணம், நான் நானாகவே இருக்க விரும்புகிறேன். நான் அவர்களாக இருக்க விரும்பவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்னென்ன பேசிவிட்டு இங்கேயிருந்து செல்கிறார்கள், என்னென்ன வார்த்தைகளைச் சொல்கிறார்கள் என்பதெல்லாம் உங்கள் காதுகளிலே விழாமல் இல்லை. விழும். நான் இவற்றைவிட அதிகமான, கசப்பான, காழ்ப்பான வார்த்தைகளையெல்லாம் கேட்டுக்கேட்டு பழகியவன். "வாழ்க வசவாளர்கள்" என்று சொன்ன அண்ணாவின் தம்பி நான் என்ற காரணத்தினால் அதைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை.

ஒன்றை மாத்திரம் உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். ஒரு போரில், இரண்டு தரப்பு வீரர்களும் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். அப்போது ஒரு வீரன், மற்றவனிடம் சொல்கிறான். "என்னப்பா, எங்களை மாதிரி வீரர்கள் உங்களிடம் இல்லையா?" என்றான். மற்றொருவன் என்னவென்று கேட்டதற்கு "எங்கள் வீரர்களுக்கு எல்லோருக்கும் மார்பில் காயம் இருக்கிறதே தவிர, முதுகிலே யாருக்கும் காயம் இல்லையே" என்கிறான். அதாவது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஜனவரி 27

அவர்கள் புறமுதுகு காட்டமாட்டார்கள் என்பதைச் சொல்வதற்காக, "அவ்வளவு வீரர்கள், நாங்கள் மார்பில்தான் காயம் தாங்குவோம், முதுகில் காயம்பட்டவர்கள் அல்ல" என்று சொன்னான். உடனே இந்த வீரன் அவனிடம் சொன்னானாம், "எங்கள் தளபதி இருக்கிறாரே, அவர் ஓடுகிறவர்களை தாக்குபவர் இல்லை, அதனால்தான் உங்கள் முதுகிலே காயம் படவில்லை" என்று சொன்னானாம். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, முதுகிலே காயம் படாததற்கு ஓடுகிறவர்களைத் தாக்காததுதான் காரணம் என்பதை மாத்திரம் இங்கே சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஓடுகிறவர்களைத் துரத்திப பழக்கப்பட்டவர்கள் அல்லர், துரத்தவும் மாட்டோம் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தவறாக எண்ண வேண்டாம். நான் பேசுகின்றபோது சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு 500 ரூபாய் ஓய்வூதியம் கொடுப்பதாகச் சொன்னது, சுதந்திர போராட்ட வீரர்கள் இரண்டு வகையாக இருக்கிறார்கள். ஒன்று, மாநிலத்திலே சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பெறுகிறார்கள். மத்திய அரசு ஓய்வூதியம் கொடுக்கிறது. மத்திய அரசு ஓய்வூதியம் கொடுக்கின்றவர்களுக்கு மாநில அரசு 500 ரூபாய் அவர்களுக்குத் தனியாகக் கொடுக்கிறார்கள். அதைத்தான் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, மாநில அரசு கொடுக்கின்ற மூவாயிரத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சாயப் பட்டறை உரிமையாளர்களும் அதை நம்பியிருக்கின்ற இலட்சக்கணக்கான உழைப்பாளி மக்களும் நீண்ட நெடுங்காலமாக இந்தச் சாயப் பட்டறைக் கழிவு நீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்காதா என்ற ஏக்கத்தோடு இருந்தவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் கழிவு நீரை முதல் பகுதி சுத்தம் செய்து கடலுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்ற திட்டத்தை இங்கே அறிவித்து இருப்பது உள்ளபடியே திருப்பூர் நகரத்தினுடைய



2007 ஜனவரி 27] [திரு. சி. கோவிந்தசாமி]

வளர்ச்சிக்கும், அதனுடைய தொழில் முன்னேற்றத்திற்கும், ஏற்றுமதிக்கும் மிகப் பெரிய வாய்ப்பாக அமையும். அந்தத் தொழிலை நம்பி இருக்கிற இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது என்ற வகையில எங்களுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சிறிய வேண்டுகோள், ஏற்கெனவே அவர்கள் முதல்கட்ட சுத்திகரிப்புக்காக சற்றேறக்குறைய 300–லிருந்து 400 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஆகவே, இத்திட்டத்திற்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அந்த மத்திய, மாநில அரசினுடைய உதவியை இன்னும் சற்றுக் கூடுதலாக்கினால்தான் வாய்ப்பாக இருக்கும். இது இறுதியாக இருக்காது என்று நமபுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அவற்றைக் கவனத்தில் கொண்டு, நிச்சயம் அவர்களை அழைத்துப்பேசி, அந்த மத்திய, மாநில அரசினுடைய உதவியைக் கொஞ்சம் உயர்த்தி, அந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய நீண்ட நாள் கோரிக்கை. பண்ருட்டி தொகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டும் என்று பல முறை கேட்டோம். அதைக் கேட்க வேண்டியவர்களிடத்தில் கேட்டவுடனேயே கிடைத்ததற்காக, 2¼ கோடி ரூபாயில் அந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் பண்ருட்டியிலே அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும், அந்த வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாகவும் எனது நன்றியை இந்த நேரத்திலே தமிழக அரசுக்கும், தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

[2007 ஜனவரி 27

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட நேரம் மிகச் சிறப்பான முறையிலே பதிலுரை தந்திருக்கிறார்கள். நேற்றைய முன்தினம் பேசுகிறபோது எங்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரினுடைய கதாநாயகனாக விளங்கியது திருப்பூர் சாயப் பட்டறைப் பிரச்சினை என்று குறிப்பிட்டார்கள். திருப்பூர் சாயப் பட்டறைப் பிரச்சினை என்பது கதாநாயகனாக இருக்கலாம். ஆனால், நம்முடைய சட்டமன்றத்திற்கும் சரி, தமிழகத்திற்கும் சரி கதாநாயகனாக விளங்குகிற டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்குத் தீர்வு காண்பதற்கான அறிவிப்பைச் செய்தது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒப்பற்ற தலைவர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய அன்பு அண்ணன் என்று அடிக்கடி அழைக்கப்படுகிற எங்களது ஒப்பற்ற தலைவர் ஜீவானந்தம் அவர்களுடைய நூற்றாண்டு விழா, அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தினசரி ஏடு ஜனசக்தி வெளியீட்டு விழாவிலே பங்கேற்று மிகச் சிறப்பாக அன்றையதினம் முதல்வர் உரையாற்றினார்கள். அதை இந்த அவையிலே தெரிவித்து, அதை அரசு விழாவாகக் கொண்டாடுவதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தையும், தமிழ்நாட்டையும் வழிநடத்திச் செல்லக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே தொண்டை வலி காரணமாகப் பேச இயலாத சூழ்நிலை இருந்தது. நாம் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தோம். நாங்கள்கூட பேசுவதை அல்லது பதிலளிப்பதை நிறுத்திக் கொண்டு அறிக்கை வாயிலாக அல்லது வேறு வகையிலே கொடுத்துவிட்டால்கூட போதும் என்று



2007 ஜனவரி 27] [திரு. ஜி.கே. மணி]

அவருடைய தொண்டையைப் பார்த்து, பேச்சைப் பார்த்து நாங்கள் எல்லாம் சற்றுத் தயங்கினோம். அப்படித் தொண்டை வலியைக்கூட பொருட்படுத்தாமல் இங்கே பேசப்பட்ட, சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுகின்ற வகையில் ஒவ்வொரு உறுப்பினர் பெயராகச் சொல்லி எல்லாக் கட்சிகளின் சார்பிலும் வைக்கப்பட்ட கோரிக்கைகளையெல்லாம் குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதிலுரையிலே விளக்கமளித்தது, கோரிக்கைகளை நிறைவேற்ற வாக்குறுதி அளித்தது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுக்குரியது. மறைமலை அடிகளுக்கு அஞ்சல் தலை வெளியிட இங்கே பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு நன்றி.

அதைப்போல நீண்ட நாள் திட்டம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அதனை உறுதியாக நிறைவேற்றுவோம் என்ற வாக்குறுதி அளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. அதற்கும் விளக்கம் அளித்தீர்கள். ஆக, முதலமைச்சர் அவர்களின் ஒட்டுமொத்த பதிலுக்கு நன்றி, நன்றி என நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொண்டு செய்வதிலுள்ள ஆர்வத்தின் காரணமாக தொண்டை வலியையும் பொருட்படுத்தாமல் இங்கே தொடர்ந்து ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார்கள்.

முதலில் அமரர் ஜீவானந்தம் அவர்களுக்கு நூற்றாண்டு விழா நிறைவை அரசு கொண்டாடும் என்று அவர் அறிவித்திருப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று மதுரை தொழில்நுட்பப் பூங்கா குறித்து சென்ற கூட்டத் தொடரில் நான் கேட்டபோது, அரும்பு நிலையில் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். இப்பொழுது அடுத்த கட்டத்திற்கும்

[திரு. என். நன்மாறன்] [2007 ஜனவரி 27

வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்திருப்பதற்கு தென் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற மருத்துவமனைக்கு சுமார் 85 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களுடைய கருணையைப் பாராட்டி, அவருக்கு நன்றி தெரிவிக்கின்ற அதேநேரத்திலே, ஏழையெளிய மக்கள் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற வீடுகள் எல்லாம் தொழிற்சாலைகளுக்கு நிச்சயமாக எடுக்கப்படமாட்டாது என்ற உறுதியை அளித்ததோடு, அங்கே இருக்கிற விளை நிலங்களில் ஏதோ ஓரளவுக்கு எடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தாலும்கூட, நிச்சயமாகப் பாதிப்பு ஏற்படாது என்கின்ற உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறார். அவருக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதோடு, எனக்கும் ஒரு நீதிமன்றத்தை, ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கு அறிவிக்கவில்லையே? உங்களிடத்திலிருந்து அதையும் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். விரைவிலேயே அறிவிப்பு வருமா என்கின்ற ஆதங்கத்தையும் உங்கள் முன்னால் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆழ்ந்த சிந்தனையில் உதித்தெழுந்த இந்த உரை என்பது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. அவர்களுக்கு நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் 1,764 கல்லூரி கௌரவ விரிவுரையாளர்கள் தாங்கள் நீக்கப்படுவோமோ என்ற அச்சத்திலே இன்றைக்குப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எனது உரையிலே சுட்டிக்காட்டினேன். அவர்களைப் பணியில் அமர்த்துவதற்கும், பகுதிநேர விரிவுரையாளர்களாகப்



2007 ஜனவரி 27] [செல்வி கே. பாலபாரதி]

பணியாற்றுபவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கும் அரசு பரிசீலிக்குமா என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வப் பெருந்தகை.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் முனைவர் கலைஞர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டுப் பின்னடைவு இடங்களை நிரப்புவதாக உறுதியளித்திருக்கிறார். அந்த மக்களின் சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்கள் பணியே நடக்காத ஒரு அரசுதான் செயல்பட்டுக்கொண்டிருந்தது. அந்த அடிப்படையிலேதான் இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள், ஆயிரம் இடங்களை நிரப்புவதாக அறிவித்திருக்கிறார்கள். இனி வருங்காலங்களிலே இப்படி ஆயிரம் இடங்கள் காலியாக இருக்குமா என்பது ஒரு கேள்விக்குறிதான். ஏனென்றால், கடந்த 6, 7 மாதங்களிலே, 5 வருடங்களில் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் செய்து முடித்திருக்கிறார். ஆக, 5 வருடங்களாக நிரப்பப்படாதவை இந்த ஆயிரம் இடங்கள். இப்போதுதான் காலியாக உள்ள இநத 522 பணியிடங்களை நிரப்புவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கின்றது. ஏற்கெனவே, உயர் நீதிமன்றம் வழிகாட்டியிருக்கிறது. நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள், கருணையோடு மூன்று தவணைகளிலே நான் நிரப்புகிறேன் என்று சொன்னபோது, நாங்கள் மேசையைத் தட்டியதற்குக் காரணம், இந்த அறிவிப்பே எங்களுக்கு மிகப் பெரிய அறிவிப்புதான். ஏனென்றால், கடந்த காலங்களிலே இதையெல்லாம் கேட்டால் சிறைவாசம்; பதில் வராது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார் என்ற மகிழ்ச்சியில் மேசையைத் தட்டினோம். முதல்வர் சுட்டிக்காட்டினார். இது ஒரு முறையாக அல்ல. மூன்று முறைகளாக என்று சொன்னார். நீங்கள் எத்தனை முறையாகச் செய்தாலும் கண்டிப்பாகச் செய்து முடிப்பீர்கள். இந்த மக்களுக்கு உங்களைவிட்டால் வேறு நாதி கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர்களிலே தாழ்த்தப்பட்ட மக்களை வாழ்வில் முன்னேற்றமடையச் செய்த முதலமைசசர் நீங்கள்.

[திரு. கு. செல்வம்] [2007 ஜனவரி 27

குடிசைகளிலே, சேரிகளிலே வாழ்ந்த மக்களையெல்லாம் கோபுரங்களிலே உட்கார வைத்தவர்; குடிசை மாற்று வாரியத்தை ஏற்படுத்தியவர். அப்படிப்பட்ட முதல்வர், செய்வார் என்ற நம்பிக்கை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இருக்கிறது. நான் சொன்ன இந்தச் செய்தியைப் பரிசீலிக்கும்படிக் கேட்டு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, 1,062 முதல் ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்த ஆண்டு 1,200 பணியிடங்கள் காலியாக இருந்து, 2,500 பதவிகள் கிட்டத்தட்ட இரண்டிற்குமாகச் சேர்த்து நியமிப்பதற்கான உத்தரவையும் முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த 2,000 பணிகளில் மொத்தம் இருக்கிற 530 சொச்சம் இடங்களிலே மூன்றில் இரண்டு பகுதி, இப்போது, இந்தப் பகுதியிலே நிரப்பப்படும். அடுத்து வருகிறபோது, மூன்றில் ஒரு பகுதியை நிரப்புவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

அதேபோதிரி, சகோதரி பாலபாரதி அவர்கள் தற்காலிக ஆசிரியர்கள் குறித்துக் கேட்டார்கள். தற்காலிக ஆசிரியர்கள் என்று இப்போது யாரும் இல்லை. Guest Lecturers என்று சில பேரை ஒரு மணி நேரத்திற்கு 100 ரூபாய் என்று கடந்த கால ஆட்சியிலே நியமித்தார்கள். அவர்கள் எல்லாம் Employment Exchange-ன் மூலமாக வரவழைக்கப்பட்டோ அல்லது இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலோ நியமிக்கப்படாதவர்கள். அந்தந்தக் கல்லூரியினுடைய முதல்வர்கள் மூலமாகவே நியமிக்கப்பட்டவர்கள். இருந்தாலும்கூட, அவர்களையும் கருத்தில்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்த அரசு, அந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது பணியாற்றியவர்களுக்கு என்று தனி மதிப்பீடுகளை உருவாக்கியிருக்கிறது. Experience இருக்குமானால், அவர்களுக்கும் அதிலே இடம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அவர்களிடமே விளக்கியிருக்கிறோம். ஆகவே, இந்தத் தேர்விலே, Ph.D. படித்தவர்களுக்கு என்று 12 மதிப்பெண்கள் உண்டு. கடந்த காலங்களிலே 100 ரூபாய்க்கு வேலையென்பதால், Ph.D. படித்த திறமையான பலபேர் அதற்கு விண்ணப்பிக்கவேயில்லை என்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, உங்களுக்குத் தெரியும், ஆசிரியர் பணிகளிலே தகுதியும் வேண்டும், அதே நேரத்திலே இட ஒதுக்கீடும் நிரப்பப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நீதிமன்ற உத்தரவின்படி—அவர்களே,



2007 ஜனவரி 27] [டாக்டர் க. பொன்முடி]

நீதிமன்றத்திற்குச் சென்று எங்களையெல்லாம் நியமிக்க வேண்டுமென்று கேட்டார்கள், நீதிமன்றமும் சொல்லியிருக்கிறது. உங்களை அப்படி நியமிக்க முடியாது, Teachers Recruitment Board–க்கு நீங்கள் போங்கள், அதன்படி அனைவரையும் நியமிப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையிலேயே அவர்களுக்கும், அவர்கள் பணியாற்றிய காலத்திற்கும் மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டு, அவர்களும் இதிலே இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தன்னுடைய உடல்நிலை இடமளிக்காத இவ்வேளையிலும், கிட்டத்தட்ட 1¼ மணி நேரம் சிறப்பான முறையிலே ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலுரை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பேரவை சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-55*

விவாதம் முடிவுற்றது. *25-01-2007* அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

[2007 ஜனவரி 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. அமரமூர்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ் இராமன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.



2007 ஜனவரி 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. ராஜசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*"2007 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"*

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் அவர்களால் 22–01–2007 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[2007 ஜனவரி 27

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2007), மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக **ஆய்வுக்கு** எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 23-1-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2007 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

### முகப்புரை

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**"In the enacting formula, for the expression 'Fifty-seventh' *substitute* the expression 'Fifty-eighth'."**

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திருத்தம் ஏற்கப்பட்டது.

227443
சென்னை-600 009

[பேரவைத் தலைவர்] [2007 ஜனவரி 27

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

நெடுந்தலைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2007) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.



2007 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

## (ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2007), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 43 வரை, திருத்தங்கள் இல்லை.

---

@ 22-1-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை மொழியலாம்.

**முகப்புரை**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the enacting formula for the expression 'Fifty-seventh', *substitute* the expression 'Fifty-eighth'."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திருத்தம் ஏற்கப்பட்டது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

நெடுந்தலைப்பு, திருத்தங்கள் இல்லை.

நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடபபடுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைத் திரும்பக் கொண்டு வர வேண்டும் என்று போராடிய கல்லூரி ஆசிரியர்களுடைய கடந்த கால 25 நாட்களுக்கான பணி ஊதியத்தையும்கூட வழங்கும் அளவுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த காலங்களிலே போராடியவர்களுக்கான அந்தக் காலத்தையும் பணிக் காலமாக கருதுவேன் என்று சொன்ன அறிவிப்புக்கிணங்க, அவர் அந்த 25 நாட்களையும் பணிக் காலமாகக் கருத வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் க. பொன்முடி] [2007 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2007) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## 6. அறிவிப்பு

### பேரவை நடவடிக்கைகள் குறித்த வழக்குகளில் நீதிமன்றங்களின் ஆணைகள், அறிவுறுத்தல்களைச் செயலாளர் மற்றும் அலுவலர்கள் ஏற்க வேண்டியதில்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தப் பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ள இறையாண்மையைப் பாதிக்கின்ற வகையில் பேரவை நடவடிக்கைகளை விசாரணைக்கு ஆட்படுத்தித் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் குறித்து நீதிமன்றம்மூலம் அனுப்பப்படும் எந்தவொரு ஆணையோ, அறிவுறுத்தலோ இப்பேரவையைக் கட்டுப்படுத்தாது. எனவே, இப்பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பில் உள்ள பேரவைச் செயலாளரோ அல்லது செயலகத்தின் ஏனைய அதிகாரிகளோ நீதிமன்றம்மூலம் அனுப்பப்படும் எவ்வித நோட்டீசையோ, ஆணையையோ, அறிவுறுத்தலையோ ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை எனப் பேரவையின் அனுமதியோடு நான் ஆணையிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2007 ஜனவரி 27]

## 7. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)—ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இலலை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1—03 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

10. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2005—2006 ஆம் ஆண்டின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[2007 ஜனவரி 27

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

41. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2006–2007)

42. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2006–2007)

43. பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2006–2007)

44. பொது நிறுவனங்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2006–2007)

45. பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2006–2007)

46. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2006–2007)

47. பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை. (2006–2007)

48. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2006–2007)

49. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. (2006–2007)

50. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. (2006–2007)

51. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. (2006–2007)

52. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2006–2007)

53. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2006–2007)

54. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2006–2007)



2007 ஜனவரி 27]

55. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. (2006–2007)

56. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2006–2007)

57. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2006–2007)

58. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

D
V2/3/07
P07.20.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227443